X. E. 46
மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானசம்பந்தகுருப்யோநம:.

சித்தாந்தஞானபோதம்.

ஆஞ்சநேயராமவைபவபங்கம்.

இது

"வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீலஸ்ரீ

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

ஸ்ரீ நாயகரவர்கள் மாணாக்கருள்

திண்டிவனம் P. W. D. ஸுப்ர்வைஸரும்

ஆகிய

கு. சிங்காரவேலுமுதலியாரவர்கள்

வேண்டிக்கொண்டதன்பேரில்

ஷை நாயகரவர்கள் மாணாக்கரும்

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்

ஆகிய

நாகபட்டினம்

வேதாசலம்பிள்ளையவர்களால்

Madras City & C. N. Press-ல்

வெளியிடப்பட்டது.

1900.

உ

சிவமயம்.

அறிவிப்பு.

துரைசாமிமூப்பனார் என்பவர் "பகவத்கீதைவசனம்" என்றொருநூல் வெளியிட்டிருக்கின்றனர். இதிலுள்ள சிவநிந்தைமுதலிய அபாயங்களை நிராகரித்து, யாம் செய்திருக்கும் "கீதார்த்தப்பிரகாசிகை" யை எவருமுணர்ந்தின்புறுமாறு விரைவில் வெளியிடுவோம்.

இங்ஙனம்,

சைவசித்தாந்த சண்டமாருதம்.

திருச்சிற்றம்பலம்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.
1047

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தகுருப்யோநம:

சித்தாந்தஞானபோதம்.

ஆஞ்சநேயராமவைபவபங்கம்.

காப்பு.

சக்கரனநுமானென்று வாய்பிளந்து சதுரிழந்தின்னல்சேர்ந்துள்ள
மங்குவார்செய்கை மாளவுஞ்சீதை மணந்தராகவனபரமென்று
சங்கைசெய்தழியுமானைஉருக்கந் தளாந்துவீழவுருசிவஞானதம்
பங்குறையன்னைபயந்தருள்யானை பதம்பணிந்தேத்திவாழ்த்திடுவோம்.

நூல்.

“ஸ்ரீ ஆஞ்சநேயாவதாரதீபிகை, ஸ்ரீராமவைபவசிந்தாமணி” எனனும் இரண்டு சிறுநூல்கள் பரங்கிப்பேட்டை இலக்குமணப்பிள்ளை யென்பவரால சில வருஷங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டன. அவற்றை யாமிப்போது பார்த்தோம். பரபட்சநிராகரணமும், சுபட்சஸ்தாபநமுமாக வெளிப்பட்டவவை கேவலம் சிவநிந்தையாகத் தோன்றினமையால், அவற்றினுபாசத்தை யெவர்க்கும் விளங்கக்காட்டிச் சிவோத்கர்ஷத்தை நிறுத்துவது எமக்கின்றியமையாப் பெருங்கடனெனத் துணிந்து, அவற்றின் மறுப்பாகிய இந்நூலை (ஸாதுக்கள்க்ஷேமார்த்தம்) வெளியிட்டெகரித்தாமென்க.

பூர்வபட்ச நூல்களின்முகத்தில் “முகவுரை” என மருடஞ்சூட்டி, இரண்டு பண்டிதர்கள் நூலாசிரியரைப் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். அவருள். முந்தியவர் பா. வேங்கடராமநாயகரென்பவர். இந்தநாயகர் நூலாசிரியருக்குமேன்

தமது ஸாமர்த்தியங் காட்டினர். எங்ஙனமெனின், "ஸ்ரீஆஞ்சநேயாவதார தீபிகையும், ஸ்ரீராமவைபவ சிந்தாமணியும் அவதாரத்தையும், வைபவத்தையுமாத்திரங் கூறுகின்ற நூலாகக்கொள்ளற்க. மற்றொன்றுவிரித்தல் முதலிய குற்றங்களுக்குள்ளாகாமல் அறியவேண்டிய பலவிஷயங்களையுங் கொண்டிருக்கின்றன" என்று புன சாக்கிரதையாகச் சில வரிகளைக் கீறிவைத்தனர். தமது தோழர் இலக்குமணபிள்ளை எடுத்த விஷயத்தைச் சிவநிந்தையாலேயே நிரப்பியிருக்கின்றாராகையால், அச்சிவநிந்தையை மற்றொன்றுவிரித்தலாகக் கொள்ளக்கூடாதென்று இவர் கூறியது பெருவஞ்சமென்க. சிவ பரஞ்சுடரை வந்திக்குஞ் சாம்பவர்களுக்கு மனம் புண்ணாகத்தக்க அஸங்கதங்களை நிறைத்துவிட்டு, இவை மற்றொன்றுவிரித்தலாகாது என்று மகிழ்ந்தது ஏழைமதியாகாது கொல்லோ? "திருமால் கண்டபேரண்டமாக வவதரித்துச் சரபத்தைக் கிழித்தெறிந்தனன்" என்று நூலாசிரியர் தமது சுவடியி லெழுதிவைத்திருப்பது எவ்வாறு கொள்ளத்தக்கதோ? ஒரு கிராம பாதுகாவலனைப் பூஷிக்கத்தொடங்கியவன், அவனைப்பூஷித்துத் தன்மட்டினில்லாது ஏக சக்ராதிபதியாய் விளங்குமொரு அரசவள்ளலைச் சுட்டியிகழ்தலடுக்குமோ? அன்னே? அரசவள்ளலொருவனைப் புகழத்தொடங்குங்கால், எவன் பாதசேவைசெய்யும் கிராம பாதுகாவலனை அவ்வரசனுக்கு அடிமையென்றது சாலாதோவெனின், நன்றுகூறினவனாய். ஆஞ்சநேயன் குரங்கு. இராமன் மனுஷ்யன். சிவன் தெய்வம். சிவன் புகழைக் கூறுகையில் இராமனையும், இராமன் புகழைக் கூறுகையில் ஆஞ்சநேயனையும் அடிமைகளென்றல் பொருந்தும். ஆஞ்சநேயனுக்குக் கீழிட்டவன் இராமனானால், இவ்விருவருக்குங் கீழிட்டவன் சிவனாகலாம். இவரது விஷ்ணுவைப் புகழுகையில், இலக்குமி - அநந்தன் - கருடன் - அநுமான் - விஷ்வக்ஸேனர் - ஆழ்வார்கள் - ஏனைய விஷ்ணுபரிஜனங்கள் முதலியவர்களைச்சுட்டி, இவர்களால் விஷ்ணுமூர்த்தி

வந்திக்கப்படுகின்றனர் என்று இவர் துதிப்பாராயின், அது மற்றொன்று விரித்தல் என்னுங் குற்றத்தின்கீழடங்காது. விஷ்ணுவினது கறுப்புமயிர் கிருஷ்ணன், வெள்ளைமயிர் பலராமன், பரசுராமன் உதைபட்டான். இரகுராமனை உதைத்தான் என்று கூறுவனவும் மற்றொன்று விரித்தலாகாது. கிருஷ்ணன் குந்திகாலில் வீழ்ந்தான், இராமன் முனிவர்காலில் வீழ்ந்தான், கைகேசிகாலில் வீழ்ந்தான், கண்டவர்காலில் வீழ்ந்தான், கண்ணன் வேடனம்பாலிறந்தான், இராமன் சரயுநதியில் வீழ்ந்திறந்தான் என்பனவும் வைஷ்ணவர்கள் கொண்டாடும் விஷ்ணுமகிமையாக நிலைத்தலால் இவையும் மற்றொன்று விரித்தலாகாது. இவ்வாறு கூறிக்கொள்வதொழிந்து அதனுக்கடந்து விவகரித்தது அஸாமஞ்சஸமாயினதறிக. "கொள்ளேன் புரந்தரன் மாலயன்வாழ்வு குடிகெடினும்" என்றும், "மாலயனிந்திரனாய் வாழுவதாய் மாளுவதாஞ் சாலமயல்பார்த்துத் தலையசைப்பர்" என்றுஞ் சிவஞானிகளோதுங்கீழ்வாழுமற்பவாழ்வினையுடைய பசுபிராணிகளிற்சேர்ந்த விஷ்ணுவையும், அவரது அவதாரங்களையும் புகழுகையில் ஸர்வசேதம். பசுபதியாகிய சிவபரஞ்சுடரைக் குறைமதிகொண்டிகழ்வது பாவத்தின் பயனேயாமெனக.

இனி இம்முகவுரைக்காரர் நூலாசிரியர் நூல்செய்ததற்குச் சில காரணங்கூறினர். அதனையுமீண்டநுவதித்து மறுத்தொழிபாம். கம்பரையாவது அவர் நூலையாவது யாரேனு மிகழ்ந்தால் நூலாசிரியர் பொறாராம். சைவருட் சிலர் அவரது அபிமதத்திற்கு விரோதமாக இகழ்ந்தமையே அவரை நூலெழுதத் தூண்டியதாம் பரமசந்தோஷம். "அவரெழுதிய நூலை இம்முகவுரைக்காரர் மெச்சினரேயன்றி யாம் துச்சமாகவே கழித்தோம். சைவர்களிகழ்ந்தார்களென்று கோபித்தெழுந்தவர் அவ்விகழ்ச்சியை முன்னரெடுத்துக் காட்டாமல் "கம்பநாட்டாழ்வாரைப் பரசைவரென்றும், அவர் செய்தருளிய இராமாயணத்தைத் திருத்தொண்டர் புராணமென்னும்

பெரியபுராணம்போன்ற சைவநூலென்றும் சைவராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் நன்குபுகழாநிற்க" என்று சைவர் புகழ்ந் தமையை யெடுத்துக்காட்டிய தென்னையோ? கம்பன் ஜாதியில் ஓச்சன். ஓச்சர்கள் சிவசம்பந்தமான காளி பூஜைசெய்பவர்கள். சிவ ஸம்பந்தத்தால் பிராமணர்கள் மஹாசைவரென்று பெயர்பெற்றதுபோலச் சிவஸம்பந்தத்தால் ஓச்சர்கள் பாரசைவரென்று பெயர்பெற்றனர். இதனால், கம்பனைப் பாரசைவனென்று எம்மவா கூறியது சால்புடைத்தே. கம்பனைக் கம்பநாட்டாழ்வாரென்று கொண்டாடுமெதிரிக்கு அவனைப் பாரசைவனென்றுகூறியது புகழாவதெங்ஙனம்? இவரது பதின்மராழ்வார்களையாம் சைவரென்று கூறினால, அதனை யிவரிகழ்வாகவேயன்றோ கொண்டுவருந்துவர்? இதனையுய்த்துணராமல், முதலியாரைப் புகழ்ந்து கம்பன் காளிகோயிற்பூசகன் என்று நிஜம்பேசிய தாமோதரம்பிள்ளையவர்களை இவர் குறைகூறியது பெருங்கொடுமையேயாம். கம்பன் தன்னோடிசலிய வொருவனது குதிரையைச் சுட்டி "மாகாளியம்மேகேள்- குதிரைமாளக் கொண்டுபோ" என்றும், அவ்வெதிரி தன்னைப் பணிந்தபோது "குதிரைமீளக்கொண்டுவா" என்றும் பாடித் தனது குலதெய்வத்தைக் கொண்டாடிய வாய்மையை யிவரறியார்போலும் அன்றியு மிவர் காளியைக் குறைவாகக்கொண்டார். சிவசத்திகளில சிவனது குரோத சக்தி காளி, அவரது புருஷரூபசக்தி விஷ்ணு. காளியும், விஷ்ணுவும் சிவ சத்திகளேயாக, இவர் காளியை யிகழ்ந்தது விஷ்ணுவையே யிகழ்ந்தபடியாம். கம்பன் காளியாகிய சிவ சத்தியையும், இவர் விஷ்ணுவாகிய சிவ சத்தியையும் வந்திப்பவர்களாயின வைபவத்தை இனியாயினுந் தெரிந்துகொண்டு, காளியையும், காளிபூசையையும், காளிபூசகரையும், காளி பூசகரைப் பிரஸ்தாபிப்பவரையுங் குறைந்தமதியாலிகழ்ந்து பரிபவ மெய்தாது சுகிப்பாராக. "ஶ்ரீபவாந் ருத்ரஶ்ச வஹ்நி:-

ద్రీచ క్షామి సమరేదస్త్రః" என்ற பிரமாண வசனத்தையும், "వాసుదేవః పరాః ప్రకృతిః" எனவும், "యోనిర్జనార్దనః" எனவும் போந்த சுருதிகளையுங் கவனித்து இன்புறுவாராக. நிற்க.

இவர் மெச்சிய தொழுவூர் முதலியார் இராமாயணத்தைப் பெரியபுராணம்போன்றது என்று கூறியநுட்ப மிவரறிந்திலர். பெரியபுராணம் சிவனடியார்கள் பெருமையைக் கூறுவது. இராமாயணம் சிவனடியாருகிய இராமன்புகழைக் கூறுவது. பெரிய புராணத்தைப்போல இராமாயணமும் சிவபருதயராது புகழைக்கூறவந்த பெருமிதமுடையது என்று கொண்டு, அதனைத தமிழிலவிரித்த தமிழ்க்கவியைக் கொண்டாடிய திவரறிந்திருந்தால், யாவரினுங்கொடியவர் தொழுவூர் முதலியாரென்று தூற்றிவருந்துவர். இராமனைப் பிரஸ்தாபிததமையால அவன்றமபிமார் (இலக்குமணன் முதலினோ) சீதை-அநுமான் முதலிய வானரவீரரையுங்கொண்டிடுக. இராமேசுவரததில இராமலிங்கம்-இலக்குமணலிங்கம - சீதாலிங்கம - அநுமலிங்கம் இதயாதிகளைக்கண்டு தெளிக. இராமேசுவர யாத்திரையுடையாரா ஊருககுட் பிரவேசிக்கிறபோதே இலககுமணன் தீக்ஷைவகித்திருந்த தலைமயிரைச் சிரைததுககொணட (சௌளஞ்செய்துகொண்ட) இடத்தில தாங்களுஞ்சங்கறபஙகூறி சௌளஞ்செயதுகொணடு, அங்குள்ள இலக்குமண தீர்த்தத்தில ஸ்நானஞ்செய்து ஸந்தி முடித்துக்கொண்டு, அவனங்குப் பிரதிட்டித்திருக்கும் இலக்குமணலிஙகதனைத தரிசிதது இஷ்டகாமியார்த்தங்களையடைந்து போவது பிரத்யக்ஷம். அநுமான் காசிக்குச் சென்று இலிங்கங்கொண்டுவருவதற்கு முன்னர் இலக்கினம் அப்பிப்போகாவண்ணம் சீதையினுமசெய்து கொடுக்கப்பட்ட வைகதலிங்கத்தை (மணலிலிங்கத்தை) அவ்வநுமான் பிடுங்கி அப்பாலெறியத்துணிந்து, தனதுவாலை அதிகமாகநீட்டி

அவ்விலிங்கத்தைப் பலசுற்றுகளா னெருக்கிப்பிடித்து இழுத்து அசைக்கப்பார்த்து அசைக்கமுடியாமல் மேலே கிளம்பி நெடுந்தூரம்பாய்ந்து ஓரிடத்தில் வாலறுந்து இரத்தங்கக்கி வீழ்ந்து பரிபவப்பட்டுத் தெளிந்து, அவ்விடத்தில் தன்போல சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து உய்யும் வகை தேடியதும் பிரத்யக்ஷம். இவைகளையெல்லாம் விசாரிக்கிற ஸாதுக்களுக்கு இவர்களது வைபவங்களைப் பிரகாசப்படுத்த வெழுந்த இராமாயணம் சிவனடியார்திவ்யசரித்திரம் என்று கொள்வதிலோராசங்கையும் ஜநிக்க ஹேதுவில்லாமையால், தொழுவார் முதலியோரது ஹ்ருதயத்தை நமதன்பர் தெளிந்து மகிழ்வாராக. இவரினி யிந்தப் பிரத்யக்ஷங்களைப் பொய்யென்று சாதிக்கமுந்துவார். அப்போது யாம் இராமாயணமே பொய்யென்று கூறுகிறோம். இராமாயணநூல் சொற்கட்டடம். யாம் காட்டிய திருக்கோயில்கள்-பிரதிஷ்டைகள் கற்கட்டடம் இரண்டும் மெய்யெனப்படுதே பிராமாணிகர்களது சம்மதம். இவர் மெச்சிய சமணுக்குப் பிராணாதாரமாய் விளங்கும் வான்மீகத்தில் இராமனாதியர் சிவஸேவகர் என்பது பஹுளமாய விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளுக்குத் தப்பாததங்கூறிக்கொண்டு நமது பூர்வபட்சியினது இனத்தவர் மனப்பால்குடித்து மாழ்குவர். அதைக்காட்டிலு மிவர் நுழைந்து ஜீவிப்பதற்கு வேறு சந்துவழி கிடையாது. அவ்வாபாசங்களெல்லாம் யாம் முன்னமே வெளிப்படுத்தியிருக்கும் பிரபல நூல்களால் மூலதோஹானியாயின. அவைகளை மீண்டுவிரிக்கிற்பெருகும். நிற்க.

திரிமூர்த்திகளில், பிரமனுக்கு உலகில் கோயில்-குளங்கள்-பூசை-தேர் - திருவிழாக்களில்லை. மாரி - மதுரைவீரன் முதலியோர்க்குள்ள மரியாதையும் பிரமனுக்கில்லாத காரணம் யாது?. அவனை நோக்கி அவனது சிவாபராதத்துக்காக ஸ்ரீ சிவபெருமான் (உனக்கு) "பூசையும் கோயிலும் போகவென்றனன்" என்றதனாலறியலாம். இந்தப் பிரமாண அத்தைக் கடக்க முடியாமலேயன்றோ அவனுக்கு ஒரு

பிரதிஷ்டையு மூலகிலிலலாதொழிந்தது? உண்மை நூற்று ணிவினபடிப் பிரமனுக்குக் கோயிற்பிரதிஷ்டைகளொழிந்த வாறுபோல உண்மை நூறறுணிவின்படிச் சேதுவில இராம னுதியாது சிவ பிரதிஷ்டைகள் நிலைபேறுயின. இராமேசுவ ராலயததைச் சைவர்கள கறபிததுக் கொண்டாாகளென்று இவா கூறுகிறபடிப பிரமனது கோயிலசளை மிவரினததவ ருலகிற பாபபிச் சைவாகளது கொட்டபடஙகப் பிரமனுக் குக் கோயிலில்லையென்று..அபவாததததைமாறறி ஏனோ சிறந் திடககூடாது? இராமேசுவராலயம சறபனையன்று. பிரம னுக்குக கோயிலிலலாமற்போனதுங் சறபனையன்று. யாவும் பிரமாணசித்தமென்றறிக இவ்வுணமை தெளிநதார் தொ மூவூா முதலியார ந வாய்மைமகணடு இனபுறுவரென்க. நிற்க.

இவா இலக்கணககொத்துடையாரைப பிரஸ்தாபித்து அவரைச "சைவ வேளாளாககாசிரியா" எனறும், "சைவசம யாசாரியரி லொருவா" எனறும விசேடஙகூறி, அவருக்கு நா ராயணாய எனனு மந்திரத்தில ராவும, நமசிவாய என்னு மந் திரத்தில மவ்வுஞசோந்து, ராம மநதிரமாயினது தெரியா மையால் "ஸ்ரீமத் கமபராமாயணததை நளனகதை-அரிச்சநதிரன் கதை என்பனவறறோடு சேர்ததிகழ்ந்து பட்டணததுபபிள்ளை முதலி னோபாடலை நனகுததிபபாா" என வொன்று கூறியோய்நதார். இவா தெரியாத விஷயஙகளிலெலலாந் தலைதுறுத்துக்கொ ணடவதிப்படுகிறூா இலக்கணக கொத்துடையார் (சுவாமி நாதநேசிகா) சைவவேளாளாக காசிரியரெனபதும், சைவச மயாசாரிய ரெனபதும கேவலம அஸஙகதம. அவரொரு சாம் பவாகரோசா. சைவமஙகலநதழைதத அவரை யாம வந்திப் போம். "சிவனடியாரைச் சிவனென வணங்கு" என்பது பிர மாணம். இவரைச சைவசமயாசாரியா என்று கூறியது சைவஸம்பிரதாயந் தெரியாமையேயாம். இவா சைவசம யாசாரியராயிருந்தால், பட்டினத்தடிகளைத்துதியாா. பட்டி னத்தடிகள் இவரின மிக்கவர். அந்தப் பட்டினத்தடிகளுஞ்

சைவசமயசாரியரி லொருவராகார். பசுநூல்களிற்பயின்று காலங்கடத்து மெதிரிக்குப் பதிநூல்கள் வந்திக்குஞ் சைவ மரபியலுணரப் பெறுமை அதிசயமன்று. நிற்க.

நாராயணாய வென்பது அஷ்டாக்ஷரமன்று. ஓம் நமோ நாராயணாய வென்பது அஷ்டாக்ஷரம். நமசிவாயவெனபது பஞ்சாக்ஷரம். இதுபோல அவர் அஷ்டாக்ஷரத்தை யெழு திக்காட்டுத தெளிவிழுந்தனர். ஓம் நமோ நாராயணாய என் பதில் ராவும், 'நமசிவாய' எனபதில மவ்வும "ராம" என்று அமைந்தது என்று விளசுகாால, நாராயணாய என்ப பதில் 'ரா' ஒழிந்தால் "நாயணாய" என்றும, நமசிவாய என்பதில 'ம' ஒழிந்தால் 'நசிவாய' என்றும் சொரூபங் கெட்டுப் பயன்செய்யாமை போதருமென்றும் இவா தெரிவி த்த விசாரத்துக்கு நாம யாது பரிசளிக்கலாமென்று பெரி யோர் யோசிககின்றனர். அஷ்டாக்ஷரத்தி லிரணடாவ தெழுத்தும், பஞ்சாக்ஷரத்தி லிரண்டாவதெழுத்தும 'ராம' என்று வெளியாகியது என்று இவரினத்தவாகூறி மகிழவா. இவ்வாபாசஙகளை இலக்கணக கொத்துககாரர் அறியவிலலை யென்று இவர் பரிதாபபபட்டது ஏண்டெனலுயது? அதவா இவர் கூறியதை யொப்புவோம் அதனால யாது விசேடம? புராணம என்பதில் ராவும, அமரம எனபதில மவ்வு ஞ்சேர்ந்து ராமமந்திர முண்டானதாக யாம சொலலுகி றோம். இதைக்காட்டிலும் நமதனபாகூறியதி லுசிதமென் னை? நாராயணவாசகம் விஷ்ணுசொரூபமும, நமசிவாய வாசகம் சிவசொரூபமுமாசையால விஷ்ணுவம்சமும, சி வாம்சமுஞ்சேர்ந்து இராமனைக அவதரித்த வதிசயம் சால் புடைத்தாமெனின், அப்போது இராமனைக் கேவலம் விஷ் ணுவென்றும, இராமமந்திரம் கேவலம் விஷ்ணு மந்திர மென்றும் பூர்வபட்சிகள் கூறுவது கூடாது. அன்றியும், சிவனை குரங்காகப் பிறந்து இராமனைச் சுமந்தானென்று நூலாசிரியர் (இலக்குமணப்பிளளை) சாதிப்பதுங்கூடாது.

சிவன் காசியில் இராமமந்த்ரத்தை ஜபிக்கின்றானென்பதுங் கூடாது. இம்மதத்தினர் கூறுவனவெல்லாம் பொய்யென்பதையன்றோ மேலுபாசங்கள் தெரிவிக்கின்றன? இவ்வுண்மை தெளிந்தவர்கள் இவர் தேடிய ராமநாமவைபவத்தை யெங்ஙனே மதிப்பார்கள்? இவரது ஆபாசஞானம் ஏனோ எம்மவர்க்குண்டாகவில்லையென்று இவர் பரிதாபப்படுகிறார்? எமக்கு அது வேண்டாம்! வேண்டாம்!!

இனி இலக்கணக்கொத்துக்காரர் கம்பராமாயணத்தை நளன்கதை - அரிச்சந்திரன் கதையோடு சேர்த்து இகழ்ந்தாரென்று இவர் வருந்தினாரன்றோ? இலக்கணக்கொத்துக்காரர்கல்விக்குமுன் கம்பன்கல்வி எம்மாத்திரம்? இலக்கணக்கொத்தே அதனையாக்கியோர்பெருமையை நிறுத்துமே! பிரபுலிங்கலீலை - காஞ்சிப்புராணம் - விநாயகபுராணம் என்பவை கம்பன் பாடல்களைப் பழித்துக்கொண்டிருக்கின்றனவே! கல்வியறிவு மிகுதியுடையார்க்கேயன்றோ இவ்வுண்மை விளங்கும்? இதனால், கம்பனது நூலை இலக்கணக்கொத்துக்காரர் மதிக்கவில்லையென்று இவர் வருந்தியது இவரது கல்வியின்குறைவையே காட்டியது. பட்டினத்தடிகள் சிவாநுபூதிப் பெருஞ்செல்வராகையால், அவரது பாடல்களைத் தாமுய்யும்பொருட்டுத் துதித்து மகிழ்ந்தனர். கம்பன் அநுபூதிமானோ? அவனது நூலை யோரிலக்கியமாகச் சிந்தாமணியைப்போலச் சைவரும், வைஷ்ணவருங் கொண்டிருக்கின்றார்கள். சைவர்நிற்க. வைஷ்ணவர்களாவது அதனைத் தமது பாராயணநூலாகக்கொண்டு அநுஸந்திக்கின்றார்களா? கம்பநாட்டாழ்வார் என்பதேயன்றி உண்மையாழ்வார் நூல்களை வந்திப்பதுபோல வைஷ்ணவஜனங்கள் வந்திப்பதைக்காட்டிக் கம்பனையும், அவனது நூலையும் இவர் பெருமைபடுத்திவாழட்டும். இராமன்புகழ் விரிந்து கிடந்தும், ஆக்கியோனது குறைவைநோக்கியேயன்றோ

சிஷ்டஜனங்கள் கம்பராமாயணத்தைப் பூஜையிலவைத்துப் போற்றுராயினர்? வான்மீகி பகவான்செய்த இராமாயணமேயன்றோ வைஷ்ணவர்களுக்கு மாத்திரமன்றி ஸ்மார்த்தர் மாதவர்களுக்கும் நித்திய பாராயணமாகி அதிக பூஜ்யமாய உலகில் பிரசித்தியடைந்திருக்கின்றன? அநேகம் விஷ்ணு ஸ்தோத்திரங்கள் தமிழிலிருந்தபோதினும அவற்றைத் திருவாய்மொழிமுதலியவற்றோடு இவர் ஸாமயங்கூறுவாரா? கம்பன் பாட்டையாவது ஆழ்வார்கள் பிரபந்தத்தோடு இவரொப்புரைத்து மகிழ்வாரா? இங்ஙனமாக, பட்டினத்தடிகள் பாடலைத்துதித்த இலக்கணக்கொத்துக்காரரை யேசிய நமதன்பர்மதுகைக்கு யாம அதிக வியசனப்படுகிறோம.

இனி இவர் நளன்கதை - அரிச்சந்திரன்கதைகளோடு இராமன்கதையென்று சாமானியமாயக் கூறி யொதுக்கிஞர் என்று மனஸ்தாபப்பட்டதும அஸங்கதமாம். நளன்-அரிச்சந்திரன் - இராமன் என்பவர்கள் அரசர்கள். இராமன் தெய்வத்தி னவதாரமாயினும, அவதரித்தபோது நளன் - அரிச்சந்திரன் என்பவர்களைப்போலப் பெண்டையிழந்து காட்டிலுழன்று சோர்ந்தும், அழுதும், பல துன்பங்களைடைந்து வருந்தியகதையை இவர் மறுக்கமுடியுமோ? நளன்கதை நைஷதம். அரிசசந்திரனகதை அரிச்சந்திரபுராணம். இராமனகதை கமபராமாயணம இலக்கணக்கொத்துக்காரர் கூறியது தமிழ் நூல்களையே யாகையால, யாமாணடு வான்மீகத்தைச் சுட்டியுரைத்திலமெனக. இலக்கணக்கொத்துககாரா அந்த நூல்களை யொன்றுசேர்த்ததற்கு வியசனப்படுகின்ற இவர் பாரதம் சபாபர்வத்தில், யயாதி-நகுஷன-புரூரவன் - மாந்தாதா - சோமன - இராமன்-இலக்குமணன் - பிரதர்த்தன் என்பவர்கள் இயமலோகத்தில் இயமனை யுபாசித்துக் கொண்டிருக்கிறார்களென்று கூறியதற்கு எனனகதிதேடினர்? அளவுக்கதிகமாக இராமனையும், கம்பனையும் மதித்தமையினாலேயே இவருக்கு இவ்வளவு கஷ்டம்வந்தது ஸம்

பவித்தது. இனிக கமப ரொருகுறம்பாடிக்கவிராயனேயன்றி வேறில்லை. அவன் நூறுபொன் வாங்கிக்கொண்டு கண்டவர்களைப்பேரிற சவிபாடிச் சீவித்துவந்தான். இராமாயணம் பாடியதும சடையபப முதலியாரிடம கைக்கூலிவாங்கிககொணடேயன்றி வேறில்லை. இவனை யொருகாலத்தி லிவனது அகந்தையொழியுமாறு உலகமாதாவாகிய ஒளவையார் "எட்டேகாலட்சணமே யெமனேறும பரியே, மட்டிறபெரியம்மை வாகனமே - முட்டமுட்டக், கூரையிலலாவீடே குலராமன றூதுவனே, யாரைடா சொனனுயது" என்று வைது ஒதுக்கிய திவ்யசரித்திரம உலகில அறியாதாரில்லை. அடா அவலசட்சணமே! அடா எருமைகடாவே! அடாகழுதையே! அடா குட்டிச்சுவரே! அடா குரஙகே! என்று பட்டமபெற்றொதுங்கிய ஸாமானியகவிமைப பூரவபட்சி பரிந்துவெளிவந்தது அவருக்குப் பரிவந்தையே யுண்டுபண்ணியதறிக. விரிக்கிற பெருகும

இனிசிவா சைவாசள் கமபனைப பினனும மிகழ்ந்தவித்தை யெடுத்துக்கூறினா எஙஙனமெனின், "முந்திய - நாவினுருரையின்படி நான்றமிழ்ப் - பாவினுலிதுணர்த்திய பண்பரோ" என்று அவா பாடியதுமாததிரமே யன்றித் தமது வாயில வந்தவாறே பாடினா. நநதிதேவரவதாரமாகிய அனுமானைச் சிவாவதாரமென்று பாடினா. வானமீகத்துள்ளே அனுமானைச் சிவாவதாரமென்று யாண்டுங்கூறவில்லை. இஃதொனறு, கமபராமாயணத்தில இதுபோன்ற வேறுபாடுகள் எத்தனையோ வுள்ளன" என்று இகழ்ந்தார்களாம். சைவாகளெடுத்துக் காட்டியது நிஜமாயிருக்குமாயின், அது இகழ்ந்ததாகாது. கம்பன 'முந்தியநாவினுருரை' என்றது வான்மீகத்தை. அதன்படி 'நானறமிழ்பாவினுலி துணர்த்திய பண்பரோ' என்று கம்பன் கூறினன். இதனுல், கமபன் வான்மீகத்தின்படியே தமிழ் இராமாயணத்தை (கம்பராமாயணத்தை) இயற்றியதாக வெளிபபடுகின்றது. கமபராமாயணம்

வான்மீகத்தின்படி யிராமல் முரணிததோன்றுமாயின், கம்பன் தான்செய்துகொண்டபிரதிஜ்ஞையைக் கடந்தவனாக விவேகிகளிகழத் தட்டில்லை. கம்பராமாயணம் வான்மீகத்தோடு பலவிடங்களில் முரணியிருக்கக்கண்டே கம்பன் தனது வாயிலவந்தபடியே பாடினன் என்று சைவர்களிகழ்ந்திருக்கலாம். கம்பனது குற்றத்தை யெடுத்துக்காட்டி, இது குற்றமென்று தெரிவிப்பது அவனை யிகழ்ந்ததாவது யாங்ஙனம்? 'வான்மீகத்துள்ளே அனுமானைச் சிவாவதாரமென்று யாண்டுங் கூறவில்லை' என்று சைவர்கூறியது சத்தியம். வான்மீகத்துள் அநுமான் சிவாவதாரமென்று கூறியிருந்தால், சைவர்கூற்று வெறுங்கூற்றாம் வான்மீகத்துள்ளே அநுமான் சிவாவதாரமென்று காட்டாதவரையில் எதிரிகள் போடுங் கரணங்கள் பயனபடமாட்டா. பாரதம் அநுமானை நந்திதேவ ரவதாரமென்று கூறியது சத்தியம். இதனோடு உண்மை நூல்கள் முரணா ஆர்ஷ: பஞ்சமோ வேத:॥ என்று சாஸ்தம்பண்ணப்பட்ட வேற்றத்தையுடையது பாரதம். இக்கபாரதம் வியாஸபாரதம், வேறு அனேகபாரதங்களுண்டாயிருப்பினும் அவை பூஜ்யமாகா. இந்தப் பாரதத்தோடு இராமாயணத்தைச்சேர்த்துப் பாரதராமாயணங்கள் என்று உலகந்துதிக்கும். இந்த ராமாயணம் வான்மீக ராமாயணமேயாம், வியாசமுனிவர்-வான்மீகமுனிவர்களாகிய முனிசிரேஷ்டர்களது வாக்குகள் யாண்டும் நானமபெறா. பாரதத்தில் அநுமானை நந்திதேவரென்றும், இராமாயணத்தில் சிவனென்றுங் கூறுமாயின், ஒன்றையொன்று விரோதித்தழியும். அப்படிக்கில்லை. இராமாயணத்தில் அனுமானை நந்தி அல்லது சிவனென்றுகூறாமல், தேவர்களில் ஒருவரது அவதாரமென்றுகூறி, மாருதியென்று யாண்டும் பிரஸ்தாபித்திருக்கின்றது. இந்த மாருதிப்பிரயோகம் பாரதத்திலுஞ் செய்யப்பட்டு நந்தியவதாரம், வாயுவினது அவதாரமென்று சொல்வதற்கான வாய்மைகளை விளக்கி யிருக்கின்றது. இ

வைகளுக்கு விரோதமாக அநுமானைச் சிவாவதாரம் என்று கம்பன் கூறுவதற்கவகாசமில்லை. இல்லாததொன்றைக் கற்பித்துச் சொன்னமையால், பொய்பேசினான் கம்பனென்று இப்போது யாமும் இகழ்கின்றோம். இதற்கு நூலாசிரியர்தா னென்ன செய்யலாம்? முகவுரைக்காரர் மூக்குஞ்சோர்ந்துதான் என்னலாபம்? நல்லது பாரதங் கூறியபடியே வான்மீகத்துள் நந்தியையும், மருத்தையும் ஏன் படிக்கவில்லையெனின், ஒன்றோடொன்று விரோதிக்குமாறு விஷயங்களைக் கூறுவது மாத்திரமே குற்றமன்றி ஒன்றிற் சொல்லாத விஷயங்களை மற்றொரு நூல் விரித்துரைப்பது குற்றமாகாது. ஒரு நூலிலேயே பூர்வாதத்திற் சொல்லாததை அநுவாதத்திற் சொல்வது வழக்கம். சீதையைப்பற்றிய பூர்வாதப பிரசங்கத்தில் அவர் கணையாழி கொண்டிருந்தாரென்று பிரஸ்தாபமில்லை. அநுவாதமாகத் தமது கணையாழியை இலங்கையில் அநுமானிடங் கொடுத்தாரென்று பிரஸ்தாபித்தது குற்றமாகாது. இதனைத் தெளிந்து மகிழ்ந்திடுக. இந்த நியாயப்படி வான்மீகர் சொல்லாத சிவாவதாரத்தைக் கம்பர் விரித்ததாகட்டுமே எனின், வான்மீகரினுங் கம்பன் சிறந்தவனாகவேண்டும். அல்லது ஒத்தவனாகவாவது இருக்கவேண்டும். வான்மீகருக்குமுன்னே கம்பன் ஒரு மசகப் பிராணியாம். அன்றியுமவனது பிரவசநம் வேறு உத்தம நூலோடு விரோதித்தல் கூடாது. பாரதத்தோடு பகை கொண்டொதுங்கியவதனை வான்மீகத்தினது ஹ்ருதயத்தை விரித்தது என்று வாதிப்பது பாரத ராமாயணங்களை இகழ்ந்து பிழைப்பவனுக்கே சிறக்கும். இவ்வாறு வியவஸ்தையுண்டாக விசாரிக்கும் சாதுர்கள் சந்நிதியில் நமதன்பரது முகவுரை முகங்கவிழ்ந்தவுரையாயொதுங்கியதறிக. இவர் நிற்க.

இவருக்குத் துணையாக வேறொருநண்பர் (வை - மு - சடகோபராமாநுஜாசாரி என்பவர்) மற்றொரு முகவுரையெழுதியதில் "இப்புத்தகங்களை ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதா

யத்தி லூக்கமுடையவர்களும் பிறசமயிகளும் ஒவ்வொருவ ரும் வாங்கிப்படித்து இவற்றிலுள்ள அருமை பெருமைகளை யும், விஷய வைலக்ஷணயத்தையும் நன்கு அறிந்து ஆனந்தி த்து உயவாராயின் மிக நன்றுமெனபதே எனது அபிப்பிரா யம்'' என்று சந்தோஷித்தார் இதிலிவர் "பிறசமயிகளும" என்றது முக்கியமாயச் சைவரையேயாம். இவர் தெரிவி த்தவாறு சைவராகிய யாம அநதச சுவடிகளைப் பார்த்துத் தெளிந்த உண்மையை நண்டுப பிரகாசப்படுத்தினோ மாகை யால, இதனைச சித்த ஸமாதானத்துடன் நமது சுவாமிகள நடுநிலைகோணுமல பார்த்து இனபுறுமாறு பிரார்த்தித்து இமமுகவுரைககாரிருவரும புகழ்நதோதிய நூலாசிரியா வணமையை இனிச் சிறிதாராய்நதுளமதுணமையை நிறுத்து வாம.

முகவுரையின்பங்சம் முடிந்தது.

இனி நூலாசிரியா வண்மையைச் சிறிது யோசிப பாம். இவரது சுவடிகளில், முதறசுவடியினுதியில சம்பரா மாயணத்திலிருககும் ஆஞசநேய ஸ்தோத்திர மெழுதி, அதற்கோ ருரையெழுதி மகிழநதார். பஞசபூதஙகளிலே யொனறுகிய வாயுவினுல (புத்திரனுகப) பெறபபட்டவன எனவும, பஞசபூதங்களிலே யொனறுகிய அபபுவெனனுஞ சமுத்திரத்தைத் தாணடினவன எனவும, பஞசபூதஙகளி லே யொனறுகிய ஆகாயமாாககமாக இலங்கைக்குச சென றவன் எனவும, பஞச பூதஙகளிலே யொன்றுகிய பிருதிவி யென்னும் பூதேவிபெறற சீதையைக் கணடவன எனவும், பஞ்ச பூதங்களிலே யொன்றுகிய அகனியென்னும நெருப் பிட்டுப் பகைவருரை யெரித்தவன எனவும, அநுமானைப் புகழ்ந்து நமதன்பரெழுதிய வுரை சாலபுடைத்தே, இநத வுரையைச் சாமரன்யரு முணர்வாாகள். இவ்வாறுரை யெ ழுதிய பூர்வபட்சியார் அவ்வுரையின் முடிவில், "எனவே வாயுபகவானுக்கு அநுமானுகவந்தோன் யாவனெனில் உருத்திரமூர்

த்தி யென்க" என்று விசேடங்கூறினர். எடுத்துக்கொண்ட பாடலில் சிவனுக்கு இவரிடங் கண்டவிதம் யாங்ஙனம? பாலகாண்டங் கூறுகிறதென்றா. அப்படியானால், அந்த ஸந்தாபத்தில் இவா சிவனைக் கண்டுபிடித்து இவரது குரங்குக்கு மாஹாத்மிய முண்டுபண்ணட்டும் எடுத்துக்கொண்ட பாடலில், தமது கருத்துச் சித்திக்குமானால் "எனவே" என்று நியாயங்கற்பிக்க முந்தலாம். இவருக்குள்ள சிவத்வேஷமே யன்றோ இவரை யிவ்வசங்காதம வாதத்தில் வீழ்ந்து கேடு சூழ்ந்திடச்செய்தது? நிற்க.

இவர் "வானுளோரனைவரும" எனனும் பாடலில், விஷ்ணுவானவா தேவாகளைச் சுட்டி, நீவிர "வானரங்களாக் கானினும்வரையினுங் கடிதடத்தினுஞ் சேனையோடவதரித்திடுமின்" என்று கூறிய ஸந்தாபபத்தில, "எண்டுச் சேனையென்றது பிரமதகண சிவகணங்களை" என்று விசேடங் கற்பித்தார். இந்தக் கற்பனை கமபனதன்று அவனது வார்த்தை "சேனை" என றதே. இந்தப பூர்வபட்சியார் வீணே பிரமதகண சிவகணங்களை வருவித்துக்கொண்டு அதனைக் கமபன் றலையிலேற்றி, அவனுக்குப பரிபவமூட்டியது பரிதாபமென்க.

கமபன் பாரத்வாஜ ராமாயணத்தைத் தழுவி அவ்வாறு தொகுத்துரைத்தானென்றா. அவன தொகுத்ததுமின்றி, விரித்ததுமின்று. இவரே விரித்துக்காட்டினா இவர் விரிவு யாவருக்கோ ஒப்பு? இவரினத்தவரிடையில விரிதுக்கொள்ளட்டும். கமபன் வான்மீகரது தாட்டாமரையைத தடவி யுய்யபவனாகவும, அவனது அபிமதமலலாத பாரத்வாஜரது ஸமபந்தத்தை இவரொட்டவைபப தெங்ஙனே? அதவா பாரத்வாஜரை எடுத்துக்காட்டவந்த பூர்வபட்சியார் "இறைவன் அரனையும், அயனையும் நீவிர் உமது கணங்களோடு வானரங்களாய் அவதரியுங்கோள்" என்று கூறியதாக அம்முனிவர் பிரசங்கித்தாரென்று சொல்லியதை அந்தப்படியே நிறுத்தாமல் "எண்டுச்சேனையென்றது பிரமதகண சிவகணங்களை" என்

றது என்னையோ? சிவனாது சேனைகளைப் பிரஸ்தாபித்த வர் அயன்சேனைகளைப் பிரஸ்தாபியாதவாறென்னை? பாரத் வாஜர்தாமென்னை பிரமதகணம சிவகணம என்று பிரஸ்தா பித்தாரா? பிரமதகணம சிவகணம என்றால சிவனைப்போய் நேரே பிடிக்குமென்று இவாதலை கவிழ்ந்து போகின்றாரெ ன்க. பிரமதகண சிவகணஙகளிலொரு பூததகினுறறலுக்கு முன்னிற்கமாட்டாம லோடுமியலபினா இவரது நாராயணா ரென்று இவரறிந்திலாபோலும். ஒரு சிவபூதம விஷ்ணுவி னது சக்கரததை விழுஙகியபோது அதன் முனனினறு கோணஙகிக் கூததாடி மகிழவிதது அநதச் சககரத்தைப பெற்றுக்கொண்டதும், ஒரு பூதத்தால் சண்டையில் சிகை யறுப்புண்டு மானமழிநததும் விஷ்ணுவினது மகிமையெ ன்று இனியேனு மிவரறிந்து அடங்குவாராக,

அன்றியும்,

"மாயுமாயர்தந்தசங்குசோடிகோடிமருவவே
தீயின்வாயினூர்திதந்தசிங்காாதமூதவே
சாயுமென்னில்காலாமேதிதநதகொம்பிசைக்கவே
யாயிரங்களிற்றெருத்தணைந்ததேரிலேறினன்."

என்னுமபாடலால பிரமதகணங்கலெல்வியல்பின வெ ன்று விவேகிகளறிவாாகள். இறந்திறந்து பிறக்கின்ற அநேக கோடி விஷ்ணுக்களுடைய கையிலிருக்கிற சங்குகளை அநே கபூதங்கள் வாயிலவைத்து ஊதிவரவும, இறந்துபோன அக் னியும் - வாயுவும எண்ணிறந்தவாக ளேறுகின்ற ஆட்டுக் கடா - கலைமான் இவைகளுடைய கொம்புகளை வாயிலவை த்து அநேகபூதங்களூதிவரவும், இறந்துபோன எமதர்மரா ஜர்களேறிவரும் எருமைக்கடாக்களுடைய கொம்புகளை வா யில்வைத்து அநேகபூதங்களூதிவரவும ஆயிரமயானைகள்கட் டிய தேரின்மேலேறினார் வீரபத்திரர் என்று பெறப்பட்டவா ய்மை யுணர்ந்தவர்கள் பிரமதகணங்கள் சூரர்களாகத் தோன்றி இராமனுக்கு ஊழியஞ்செய்தனவென்று கூறிய

பூர்வபட்சியினது மதுகைக்கு வியசனப்படாமலிராரென்க. எத்தனையோ விஷ்ணுக்கள்-எத்தனையோ பிரமர்கள் - எத்தனையோ அக்னி - எத்தனையோ வாயு - எத்தனையோ எமதர்மராஜர்கள்காலங்களையுண்டு ஏப்பமிட்டு என்று மழியாநிலைமையெய்திச் சிவபரஞ்சுடரை வந்தித்துக்கொண்டு ஊழியஞ்செய்தொழுகும் பிரமதகண சிவகணங்களிலொன்றின் முன்னிலைபெறாதடங்கும அற்பவறிவும், அற்பவாற்றலும், அற்பவாயுளுமுடைய அநேக விஷ்ணுக்களில ஒருவிஷ்ணுவினது அவதாரமென்று கூறும் மனுஷ்யனாகிய இராமனுக்கு அளவுகடந்தமகிமை இவர் கற்பித்துரைத்தது கள்ளிக்கொம்புக்கு வெள்ளிப்பூண கட்டியதுபோலாம். நிற்க.

இவா "பலவுமிதின்றுலொரு அவிழ்தட்டாதா" என்பதற்கிணங்க இரண்டொரு பாடல்களை எழுதிக்கொண்டு "வானுளோர் - வானுளீர்" என்று வருவித்துப் பரிசோதனையிலிறங்கினா. சிவனை நேரே காட்ட வகையிலலாமல அச்சிவன் இதோ வானுளோரில் புகுநதிருக்கின்றான். அதோவானுளீரில் புகுந்திருக்கின்றான் என்று சொற்சம பிரமங்காட்டியலுத்தாரிதென்கொலோ? அஸத்தாகியவதனையுபேக்ஷை செய்தாமென்க. நிற்க.

"வாயுமற்றெனதுகூறுமாருதியென்னுமறறோர்
காயுமாககடலைகளாகிக்காசினியதனின மீது
போயிடத்துணிந்தோமென்றாபுராரிமற்றியானேவாது
சேயெனப்புகன்றனமற்றைத்திசையுளோர்க்கவதியுண்டோ."

என்ற பாடலை எடுத்துரைத்து, இதில வாயுபகவான் எனது அமிசம் மாருதி என்று கூறினனெனவும், புராரியாகிய சிவன் யானேவாதசேயெனக் கூறினனெனவும் போந்த பகுதிகளை யெமக்குக்காட்டி நமதன்பர் சந்தோஷித்தார். இவரது சந்தோஷம் அளவுக்கதிகமாக (அதட்டிக் கேட்பாரில்லாதவரையில்) ஓடுகின்றது. எங்ஙனமெனின், "உருத்திரமூர்த்தியே தனது பூரணமிசத்தோடு வாயுவை யதிட்டித்து நின்று

அவற்குப்புத்திரனாக தோன்றலின் இன்னதேவர் கூறென்று கூறாமல் வாளாவாயுகுமாரன் என்றார்" என்று பொங்கிவழிந்ததே இவரது சந்தோஷம். இதனைச் சிறிது விசாரிப்போம். வாயுவின்கூறு மாருதி யென்றபோது மாருதியென்பவன் யாவன்? புராரியாகிய சிவன வாதசேய என்றபோது வாதசேய் என்பவன் யாவன்? மாருதி=மருத்துவின்மகன். வாதசேய்=வாயுவின்மகன். வாயு-மாருதம்-மருத்து-வாதம என்பன பரியாயப்பெயர்கள். இதனால், மாருதியென்றதும்,வாதசேய் என்றதும் ஒரு விஷயத்தையே தெரிவிக்கதாகின்றது. இதனைக் கூறியது கூறலென்னுங் குற்றமாகவன்றோ வொதுக்குவர் அறிஞர்? சங்கரனை வாயுவோடுசேர்த்தது விசேடமெனின், அப்போது சங்கரனம்சமும், வாயுவினம்சமுஞ் சேர்ந்து பிறந்தவனாகவேண்டும அநுமான் இவ்வாறு பரிகாரந்தேடத்தக்க நமதன்பர் "உருத்திரமூர்த்தியே தனது பூரணாம்சத்தோடு தோன்றலின" என்றது என்னை? உருத்திரமூர்த்தியினது பூரணாம்சம வாயுவினது அல்பாம்சம் கூடிப்பிறந்த அநுமானது அவதாரரஹஸ்யத்தை இன்று இவர் வெளியிட்டது இவருமொரு அவதாரபுருஷரென்பதையே வெளிப்படுத்தியது. இவரது அவதாராம்சம அவ்வநுமானதாயிருக்கலாமென்று புகழுவது உசிதமாம. இவ்வவதாரசிரோமணியார "பூரணாம்சம" என்று கூறியதற்குப பொருளென்னை? பூரணத்துவ பல அம்சங்களடங்கும. அவற்றுள் ஒருகூறை யெடுத்துரைப்பின, அது அம்சாவதாரமாகலாம். பூரணத்தை அம்சமென்றிடலியாங்ஙனம? நமதன்பர் "பூரணாம்சம்" என்றமையால ஆசங்கைநிகழ்ந்ததென்க. இனி இவர் கூறவேண்டியது பூரணாவதாரம என்பதாம். இவ்வளவு யூகித்தெழுத வறியாதவர் சிவதூஷணையிலிறங்கியது சால வியப்புடைத்தே.

இனிச் சிவனாரது பூரணாவதாரத்தோடு வாயுவினம்ச மெவ்வளவுகூடியது? முந்திரியா? அரைக்காணியா?

வீசமா? காலா? அரையா? முக்காலா? அது தெரிந் தால் அநுமானை ஒன்றுக்குமேல ஒன்றேகாலமிசம்-ஒன்றே முககாலமிசம் என்பனவாதி யெண்களிலொன்றிற் சேர்த் துப் பூர்வபடசியாரது இனத்தவர் வந்திக்கலாம். இவ்வ ஸமபாவிதங்களுக்குக கதி கூறவேண்டிய பொறுப்பு நமத ன்பர் தலையில விடிந்தமையால, சிவனைப் பூரணமிசமென்று கூறுவதொழிந்து வாயுவினமிசமும், சங்கரனது அமிசமுங் கூடி அநுமான் பிறந்தானென்று கூறுவதடுக்கும. இவர் கருத்து அப்படிக்குமிலலை, மாருதி-மருதனுவின் சேய். இந்த மருததுவினசேய் மாருதியென்று பேர்கொணடது மருத்து வின் மகனென்றது பற்றியேயன்றி மருத்துவினமிசமென் றது பற்றியன்று என்னாத தமது கருத்தை விளக்கவறியாது குழப்பினார். இதனை இன்னும் யாம் விளககிக்காட டுகிறோம். தாசரதி=தசரதன் சேய் இந்தத தசரதன சேய் தாசரதியெ ன்று பேர்கொண்டது தசரதன மகனென்பது பற்றியேயன் றித் தசரதனது அமிசமென்றது பறறியன்று. இவ்வுப மானத்தை யின்னுஞ் சிறதுாக்குவாம் தாசரதி தசரத னது அமிசமாகாமல நாராயணனது அமிசமாயினது எப் படியோ அபபடியே மாருதி மருததுவினது அமிசமாகாமல் உருததிரனது அமிசமாயினது சித்த மெனறு தெரிவிப்பது ஆவசியகமாம. இபபடி அவர் தெரிவிப்பாராயின, உருத்திர ன் அமமாகைபபிறநதானெனறு சாதிதத லொருவாறு பொ ருந்தும். முற்றும பொருந்தாது ஏனெனில, இராமகிருஷ்ண தியவதாரஙகளில் இராமன் விஷ்ணுவினது அமிசாவதார மெனறும - கிருஷ்ணன் பூரணவதாரமெனறும, இராமனை கிஞ்சிஜ்ஞனா - கிருஷ்ணன சர்வஜ்ஞனென்றும வைஷ்ணவ புங்கவாசள் கூறுவாாகள், நமதனபரோ இராமன் விஷ்ணு வினது அமிசாவதாரமானபடி அநுமானும உருத்திரனது அமிசாவதாரமென்று கூறா மல அவனைப பூரணமிசமென்று புனைந்துரைததனா. வான்மீகியோ இராமனைத் தசரதன் சேய், விஷ்ணுவினது அவதாரம் என்றுகூறினா. இது

ஸர்வஸம்பிரதிபந்நமாய் வழங்குகின்றது. இந்தப்பிரகாரம் (அநுமான் மருத்துவின்சேய, உருத்திரனது அவதாரம் என்று)வான்மீகிபகவான் கூறியதில்லை. இராமனவதாரத்தை விளக்கக்கூறிய முனிச்சிரேஷ்டர் அவ்விராமனதுயிர்க்காவலுக் குறைவிடமாய் விளங்கிய அநுமானது அவதாரத்தை விளங்கக் கூறாதுவிடுவாரா. உருத்திரனது அவதாரம் அநுமானென்பது அவ்வநுமானுக்குப்பெரியதொருமகிமையாம். அதனை அம்முனிவர் கூறாதொழிவாரா? அது உண்மையாயிருந்தால அவசியம் கூறியேயிருப்பர். அதனை யவர் கூறாமையால், பூர்வபக்ஷிகள் கற்பனையென் றொதுக்குவதே உசிதமென்றறிக.

இவ்வாறு முடிவதறியாது இவர் "உருத்திரமூர்த்தியே தனது பூரணாமிசத்தோடு வாயுவை அதிட்டித்து நின்று அவற்குப் புத்திரனாகத்தோன்றலின இன்ன தேவர் கூறென்று கூறாது வாளாவாயுகுமாரன் என்றார்" என்று வரைந்தது என்னமதியோ? ஈண்டிவர் உருத்திரமூர்த்தியினது பூர்ணாமிசத்தைக் கண்டுபிடித்துப் பிரசங்கித்ததற்கு மாறாக "இன்ன தேவர் கூறென்று கூறாது வாளாவாயுகுமாரன் என்றார்" என்றது என்னை? சிவனது பூர்ணாமிசம் என்று தெரிந்துகொண்டதை அவ்வாறே தெரிவிக்க யாது தடை? தான் தெரிந்துகொண்டதைத் தெரிவியாமல "வாளாவாயுகுமாரன்" என்றாரென்றது தெளிவின்மை யாகாது கொலலோ? ஆண்டு "வாயுகுமாரன்" என்றதேயன்றிச் சிவனாது பெயர் பிரஸ்தாபிக்கப்படாமையால, சிவனார் குரங்காக வந்தார் என்றது வெறுங்கூற்றாயினதறிக. இவர் மெச்சிய கவிச்சக்ரவர்த்தியாரும் இவரது விபாகவிபானத்தைத்தொடர்ந்து பிரசங்கித்தவரல்லர் என்பதும் துணியபபட்டவாறறிக. இனி இவர் காட்டிய கம்பன் பாடலில் "புராரி மற்றியானே வாதசேயெனப்புகன்றான்" எனக் காணப்படுவது பாஞ்சராத்திரிகளது கற்பனையேயாம். கம்பன் தனக்கு முதனூலாகப்பிரதிஞ்ஞை செய்துகொண்ட வான்மீகத்திலில்லாத புராரியைத்

12451

தான் கூறினான் என்பது அஸங்கதமாகாது கொல்லோ? கம்பன்பாட்டிலுள்ள பூராரியைப் பாஞ்சராத்திரிகளது கற்பனையென்றொதுக்குவோமானால் அவனது பிரதிஜ்ஞையும் புகழும் நிலைக்கும்! நிலைக்கும்!! கம்பனைப் புகழ்வதுபோலப் பூர்வபக்ஷியும், அவரினத்தவரும் (ஒரு அபவாதத்தை அவன் தலைமேற் சுமத்தி) வீணே இகழேற்கச், செய்தது பரிதாபமெனக.

இனி அந்தப்பாட்டில், மூன்றாவது நான்காவது அடிகள் "போயிடத் துணிந்தோ ரென்று புகன்றமற்றி யாருமெய்தா, மெய்ப்பெருவகை கொண்டார் வேறினிவிளம்ப லுண்டோ" என்றிருப்பதே அமைவுடைத்தாம். இதனை எமது கற்பனையென்று பூர்வபக்ஷி கூறலாம். எந்தக் கற்பனை கம்பன் தலையிடறச் செய்யுமோ, அதுவே தள்ளத்தக்கது. கம்பன் கூறிய உண்மையான பாடம் நெடுநாளைக்கு முன்னர் மாண்டுவிட்டமையால், அதனோடு மாறுபடாது யாம் ஈண்டுக் கூறியது குறை கூறப்படமாட்டாதென்க. கம்பன் புகழை விரித்தயாம் அவனதிகழைத் தெரித்த இவரை யொருபொருளாக மதியேம்! மதியேம்!!

இனி நமதன்பர் "அருட்டரு கமலக்கண்ண னருண்முறை யலருளோனும், இருடருமிடற்றினோனு மமரருமினையராகி, மருட்டரு வனத்தின மண்ணின்வானர ராகிவந்தார்" என்றொரு பாடலை எழுதி, அதில் "இருடருமிடற்றினோன்" என்றுள்ள பாடத்தால் சிவனைக் குரங்காக்கப் பார்க்கிறார். இதுவும் வான்மீகத்தோடு முரணுதலால், கம்பனது பிரதிஜ்ஞையையுதைத்துத் தள்ளுகிறதென்க. அதனால், "அருட்டரு கமலக்கண்ண னருண்முறை யலருளோனும், இருட்டருமுளத்தினீங்கு மமரருமினையராகி, மருட்டரு வனத்தின் மண்ணின் வானரராகி வந்தார்" என்று பாடபேதங்கொண்டு கம்பன் புகழை நிறுத்துவதே உசிதமென்றறிக. விரிக்கிற் பெருகும்.

இனி இவர் "சங்கோத்தரம்" என்று சிலவரைந்தார். அதனையுஞ் சிறிது யோசிப்பாம்.

பூர்வபட்சம்

வான்மீகத்துக்கு வியாக்யானஞ் செய்தவர்களில் ஒருவர் (சங்கரன் அரக்கர்க்கு முனைவரங் கொடுத்தமையால் பின்பு அவர்க்கு விரோதமாகத் தனது அமிசத்தால் ஒருவரையுந் தந்திலர் என்று) கூறினர். இந்த வான்மீகத்துக்குக் கோவிந்தராஜீயம், வீரராகவீயம், வான்மீகராமீயம், சிவதீர்த்தீயம், அப்பையதீக்ஷிதீயம் முதலிய பல வியாக்யானங்களிருக்கின்றன. இவ்வியாக்யான கர்த்தாக்களுள் ஒருவரது சொந்த அபிப்பிராயத்தையே கொண்டு அநுமான் உருத்திராம்சமல்லனென்று கொள்வது வழியுடைத்தன்று. வீரராகவீயமுதலியவற்றுள் சிவனது பூர்ணாமிசமே அநுமான் என்று கூறப்பட்டுள்ளது

சித்தாந்தம்.

இவர் அனேக வியாக்யானங்கள்பேரைப் பிரஸ்தாபித்து, அவற்றுளொன்று தமக்கு அநுகூலஞ் செய்யாமையைத் தெரிவித்தொதுக்கினர். அந்த வியாக்யாதாவின் பெயரைப் பிரஸ்தாபியா தொழிந்தார். அந்த வியாக்யாதா சிவன்குரங்காய், அல்லது வேறுவடிவாயப் பிறவாமைக்கு ஒருகதிகூறியதாக ஏற்பட்டது. இவர் மெச்சிய ஏனை வியாக்யாதாக்கள் சிவனைக்குரங்கு என்று என்னநியாயங் கூறிச்சாதித்தார்கள்? வெறுமனே சிவன்குரங்கு என்று கூறிவிட்டதனால், நமதன்பருக்கு அவர்கள் சகோதரராயினார்கள். எத்தனை வியாக்யாதாக்கள் கும்புகூடியழுதாலும் வான்மீகத்தில் வசனங்காட்ட வகையில்லாதவரேயாயினர். இவர்களைத் தமக்கனுகூலமாகத்தேடிய நண்பர் ஒவ்வொரு வியாக்யானத்தையு முதகரித்து அவர்களது வாய்மையை வெளிப்படுத்த வேண்டும். வெறுமனே அவர்கள் பேரையிழுத்து விட்டதினாலேயே அவர்கள் சிவதூஷணஞ் செய்தார்களென்கிற உபசித்தாந்தம் தலைதூக்காது. ஒன்று காட்டுகிறோம். அப்பையதீக்ஷிதீயம் ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதஸ்வாமிகள் செய்ததாயிருக்கலாம். அவர் சதுராதிகசதப்பிரபந்தகர்த்தா வென்று விருதுபெற்று

வேதாந்ததேசிகனது நூல்களை வெட்டிச்சாய்த்துத் தாசரதியை யொருமனுஷ்ய னென்று ஸ்தாபித்துச் சைவமங்கலந் தழைக்கச்செய்தவர் இவர் சிவனைக்குரங்கு என்று சாதிப்பாரா? வீரராகவன் - கோவிந்தராஜன் முதலிய சில பேயமதியினர் கூறியது வாஸ்தவம் வான்மீகத்தை மூலமாகக் கொள்ளாத அவை எமக்கு வெகு துச்சமாம்.

இனி நம்தன்பர் தமக்கு வேண்டாதவராகவொதுக்கிய வியாக்யாதா கூறியதும் சரியன்று தாம்கொடுத்தவரம் பங்கமடைந்த கேதுவான அவதாரமெடுத்திலர் சிவனென்பது உசிதமாயினும், தாம் கொடுத்த வரத்தை யழிக்கவவதரிக்குமெனேயோரைத் தடுக்காதது அவர்பாற் பெருங்குறைவாம். எல்லாத்தேவர்களும் தம்கருத்துக் குறைந்தவர்களே யாகையால அவர்களைத் தடுப்பது கஷ்டமன்றாம். சிவன் பிறக்க விசைந்திலரென்றதனுல், சிவனையும் பூமியிற் பிறக்க விஷ்ணு விதித்தாரென்னும் பக்ஷத்தை அந்த வியாக்யாதா வொப்பிலரென்று ஏற்படுகின்றது. ஒப்பினரெனின், அந்த ஆஜ்ஞையைப் பொருள்படுத்தவில்லையென்று கொண்டதாகத் துணியப்படுகின்றது அந்த வியாக்யாதா சிவாபிமானி யென்பது மட்டிலேமக் கங்கீகாரம் அதனால், அவருக்கு நமஸ்காரம் பண்ணுகிறோம் நமது பூர்வபக்ஷியார் தேடிய வீரராகவீயத்தில் சிவனது பூர்ணாம்சம் அநுமானென்று கூறியதாக நம்தன்பர் காட்டினாரன்றே? பூர்ணாவதாரம் என்பதேயன்றிப் பூர்ணாம்சமென்பது அஸங்கதமென்று மேலே நம்தன்பருக்குப் புகட்டியபுத்தியே வீரராகவனுக்கும் சிறக்கும்.

பூர்வபக்ஷம்.

வான்மீகம் உத்தர காண்டத்தில், இராவணனை நந்திதேவர் பார்த்து என்னை நீகுரங்கு என்று இகழ்ந்தமையால் எனது அம்சத்தா லொரு குரங்கும் எனக்குச் சமானமான பல குரங்குகளுந் தோன்றி உன்னையழிக்கும் என்று சபித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நந்திக்கு அபர

சம்பு என்று பெயர். இதனால், நந்தியை சிவன் என்று உபசார வழக்காற் கூறலாம் இவ்வாறு தெளிந்தயாம "புராரி மற்றியானே வாதசெய்" என்று கம்பன் கூறியதை நந்தி பரமாகச் சாதிப்போம். புராரி அல்லது அபரசம்பு என்று கொள்வதிழுக்கன்மையால, புராரி என்றது உமாகாந்தனைச் சென்று சேராது என்று சைவர் சமாதானங் கூறுவர். அது கூடாது. கம்பர்கூறிய "புராரி" என்னுஞ் சொல்லுக்கு அவராவது, பிறராவது அந்தச்சொல்லை யடுத்த முன்பின சந்தர்ப்பங்களில் ஒரு இடத்திலேனும நந்தியென்று கொள்ள இடந்தாரமையால எதிரிகள் தொடுக்கு முபசாரவழக்கு யாண்டும் பயனசெய்யாது.

சித்தாந்தம்.

வான்மீகிபகவான் சிவனது பூரணாவதாரம அநுமான் என்று குப்தமாகக் கூறியதையே கம்பன் வெளிபபடையாகக் கூறினான் என்று வாதாரபபத்தில் நகைமுகங் காட்டிய நண்பா உத்தரகாணடத்தில நந்தியமிசம் அநுமான் என்று இபபோது கண்டதற்கு யாது சமாதானங் கூறுவர் ? உத்தரகாண்டத்திற கணட வியக்தவாதத்தின முன்னர்ப பூர்வபட்சியினது குபதவாதம் அஸத்தா யழிந்ததறிக. இனி நந்திதேவர் எனது அமிசத்தா லொரு குரங்கும, எனக்குச் சமானமான பல குரங்குகளுந்தோன்றி உன்னை யழிக்கும் என்று, இராவணனைப்பார்த்துச் சொன்னதாக வெளிப்படுத்தினவர் வான்மீகி பகவான். இந்த நந்தியவதாரத்தை ஏனைய தேவர்களது குரஙகவதாரங்களோடு சேர்த்து ஏனோ அமமுனிபுங்கவா படிக்கவில்லை ? இந்தக் கூட்டத்தில் அவரைச் சேர்த்தால, அவரும் விஷ்ணுவினது ஆஜ்ஞையால் பூமியில் குரங்காக வந்தாரென்று கொள்ளவரும. விஷ்ணுவினது ஆஜ்ஞையால் நந்தி குரங்காகவரவில்லை. சிவனுங் குரங்காக வரவில்லை நந்தியையே அமிசாவதாரம்என்று கூறியமுனிவா சிவபரா

கூடர் பூரணாவதாரமாய் அநுமக்கோலங் கொண்டாரென்று
சொல்லத்துணிவாரா? விஷ்ணுவானவர் தேவர்களை நோக்கி
நீங்கள் பூமியிற் குரங்குகளாய்ப் பவிக்கக் கடவீர்க
ளென்று விதித்தது வாஸ்தவம். நந்தியெம்பெருமானை
இராவணன் குரங்கென்று தூஷித்ததை யநுஸரித்தது குரங்
கினாலே நீயழியக்கடவாய். எமது அம்சத்தாலொரு குரங்
கும், எனக்குச் சமானமான பல குரங்குகளும் வரப்போ
வதைக் கண்டுகொள்ளென்று சபித்தது சத்தியம். இந்தச்
சாப வாக்கியத்தையே விஷ்ணுவினது அநுகாரஹ வாக்
கியம் (தேவர்களை யேவிய விதிவாக்கியம்) பின்றொடர்ந்து
ஜீவிக்கின்றது. தனதம்சத்தா லொருகுரங்கும், தனக்குச்
சமானமான பல குரங்குகளு மினிப்பிறக்கப் போவதைத்
தெரிந்துரைத்தமையால் அவை யிவை யிவை யென்று
ஒருங்குணர்ந்து சொன்னாரென்றே இனிது விளங்குகின்ற
து. இன்னு மிதைவிரிப்பின், தாம் அநுமானாக அம்சத்
தால் வரவிசைந்ததுபோலப் இன்னின்ன தேவர்கள்
இன்னின்ன குரங்குகளாக வரக்கடவாகளென்று சங்
கற்பித்து, அந்தச் சங்கற்பத்தையே இராவணனிடஞ்
சொன்னாரென்று துணிந்திடுவர் மேலோர். தாம் வர
விசைந்ததற்குத் தமதிச்சையே காரணம். அவரை யே
வினவ ரொருவரு மிலர். தாம் வருதற்குத் தமதிச்சை
காரணமாய் நின்றதுபோலப் பிற தேவர்கள் பிறத்தற்கும்
அந்த இச்சையே காரணமாய் நின்றதென்றல் அமைவு
டைத்து. இந்த இச்சை அல்லது சங்கற்பமே விஷ்ணு
வையதிட்டித்துத் தேவர்களைப் பேர்வாரியாக விளித்துக்
குரங்குகளாகப் பிறக்கச் செய்ததென்றறிக. விஷ்ணு
வுக்கே ஸ்வாதந்திரியங்கூற வேண்டுமாயின், உத்தரகாண்
டத்தி லெழுந்த பிரசங்கங் கூடாது. எல்லாத் தேவர்க
ளையு மேவியகதை கூறவந்த பாலகாண்டம் விஷ்ணுமூர்த்தி
நந்தியையும் ஏவினார் சிவனையும் ஏவினார் என்று பிரசங்
கித்திடின், அவரது கௌரவம் சிறந்திடும். அங்ஙனமயின்

மையாலும் பாலகாண்டத்தின் மூலமாக உத்தரகாண்டம் நிலைத்தலாலும் நந்தி யாஜ்ஞையின்படி விஷ்ணுவொழு கினுரென்பதே சித்தமாயிற்று. விஷ்ணுவுக்கு மேலான வரா நந்தியென்று ஆசங்கையெழுப்பலாம். நந்திபகவான் சிவனுரதுவாகனம். விஷ்ணுவும் அவரதுவாகனம நந்தி மாடாய்ச்சுமப்பதுபோல விஷ்ணுவும மாடாய்சுமந்தனர் சிவனை. இரண்டு மாடுகளில் நந்தி பெரியமாடு; விஷ்ணு சின்னமாடு அல்லது சிறியமாடு. சிறியமாடடினும பெரிய மாடு கௌரவமுடையதென்பதைச சொல்லவுமவேண்டு மோ? மாட்டுக்குக் கீழேகிடந்து புரணடு சுகித்தலியற் கை. இது விஷ்ணுமூர்த்திக்குச் சொநதமெனலறியாதா ரில்லை. இன்னும விரிக்கிற் பெருகும.

நந்திக்கே ஸர்வஸ்வாதந்தரியத்வங் கூறுவதாயின விஷ்ணுமூர்த்தி இராமனாய்ப் பிறந்து இராவணனை யழித்த தறகு யாதுகதியெனின், நன்று கடாயினுய. இராவணனை இராமன் அழித்ததேயிலலை. "ஸ்ரீராமர் இராவணனை ஸம ஹரிக்குஞ் சமயததில் உருத்திராம்சமாயுள்ள ரூபததைத தரித தார்" என்று இராமாயணங கூறுகினறது. இதனுல் இராவணவதத்திறகு விஷ்ணுவினது பிரவாதககம, இரா மனது ஸேவகத்வ முதலியன வியாஜஙகளாயின. இநத வியாஜகர்ததாக்களை நந்திபகவான இராவணனிடம பி ரஸ்தாபியாதது குற்றமாயினதின்று. நந்திபகவான் பிரஸ் தாபியாத கரடிமூர்த்தி யொருவர் வநததுபோல மனுஷ் யமூர்த்தி யொருவரும் (இராமரும்) வநதிருககடடுமே. இராமா விஷ்ணு வென்பது நிராடங்கம. இநத விஷ்ணு வினது அவதாரத்தையும் நந்திபகவான பிரஸ்தாபிததா ரென்று கூறினும் ஒருவாறு பொருநதும. எஙஙனமெனி ன், "எனக்குச் சமானமானவர்கள்" என்று சுட்டியவருள், விஷ்ணுவும அடஙகுவர். சமானரகிதராகிய நந்திபகவான் சமானர்களை யொப்பியது யாஙஙனமெனின், சிவபரஞ் சுடர் ஸந்நிதியின்மாத்திரமே அவர்ஸேவகர். மற்றவர்க்கு

ஸேவயா. ஆயினும் விஷ்ணுவுக்குத் தமக்கு மாத்திரம்
ஸமானத்வம் எப்போது முண்டு. அதற்கு இருவரும்
சிவபரஞ்சுடரைத் தாங்குதலும், விருஷபாக்ருதியாய் இ
டத்தலுமே சான்று. விஷ்ணுவை ஸமானரென்றது ஒருவா
று பொருந்தியது. ஏனைய தேவர்களையும் "எனக்குச்
சமானமானவர்கள்" என்றது பாதிக்கிற தெனின், அது
வும் பாதிக்காது. என்னைப்போலவே பிரமன் இந்திரன் முத
லிய பிறதேவர்களும் சிவபுருஷர்களாய்க் கிடந்தூழியஞ்
செய்தல் சத்தியமாதலால் என்ற கருத்துக்கொண்டு கூ
றினென்றல் பொருந்தும். இவ்வாறு பாகுபாடு செய்
துணரும் விவேகிகள் ஸதஸில் பூர்வபக்ஷியாரது வாதம்
எங்ஙனே பயன்படும்? ஸ்ரீகைலாஸகிரியை யசைத்துக்
கேடெய்திய சிவாபராதங் காரணமாக நந்திபகவானாற்
கோபிக்கப்பட்டுச் சாபமேற்று இராவணனழிந்தமையே
முடிவாகத் தோதலுணர்தலின்றிக் குரங்குகள் காலைக் கட்
டிக்கொண்டு கூக்குரலிட்டழுதுய்ந்த இராமனது மகிமை
யைப் பிரஸங்கித்துக் கம்பீரம்பேசிய பூர்வபக்ஷிக்கு இன்
னுஞ் சிறிதுரைப்பாம்.

நந்திபகவான் எனது அமிசத்தா லொருகுரங்கு
பிறக்குமென்று சொன்னதை நான் எனது அமிசத்தா
லொருகுரங்காய் அவதரிப்பேன் என்று சொல்லலாகாதா?
எனது அமிசம் என்று தமது சம்பந்தங்காட்டினும், அவ்
வமிசாவதாரக் குரங்கைப் படர்க்கையிடத்ததாகப் பிரஸ்
தாபித்தமையால், தனது முழுஸம்பந்தம் நிலைபெறவில்லை.
இதனால், நந்தியமிசம் அநுமான் என்று பிரசங்கித்துமய
ங்குவதுந் தவறுடைத்தாம். இனி அதற்குப் பொருளெ
ன்னையெனின், இருடியமிசமில்லாதவனுக்குக் காவியஞ்
செய்யுந்தன்மையும், விஷ்ணுவமிசமில்லாதவனுக்கு உல
காளுந்தன்மையும் (பிருதிவீ பதித்வமும்), தேவாமிசம்
(தேவராஜனாகிய இந்திராமிசம்) இல்லாதவனுக்கு அன்
னத்தைப் பெருக்குந்தன்மையும் (அன்னதானஞ்செய்யும்

அருளுடைமையும், உருத்திராம்சமில்லாதவனுக்குவேதாத்யயநப்பிராப்தியும சித்திக்கமாட்டாவென்று நூலகள் கூறுகின்றன. இதற்கு "నారుద్రఃకురుతేకావ్యం నావిష్ణుఃపృథివీ పతిః। నాదేవాంశోదదాత్యన్నం నారుద్రః క్రమపాఠకః" எனனும வசனம் சான்றாம. வேதம் படித்த பார்ப்பாரெல்லாம சிவனும, பூமியாளும அரசனெல்லாம விஷ்ணுவும என்று துணியவேண்டியது மரபோ? சிவாநுக்ரக மில்லாதபோது ஒருவனுக்கு வேதாத்யயநப்பிராப்தியும், விஷ்ணுவநுக்ரக மிலலாதபோது ராஜ்யாதிகாரப்பிராப்தியும ஸித்திக்கமாட்டாவென்று பொருள் கொள்வதே ஸர்வஸமப்ரதிபந்நமான உசிதார்த்தமாம. இவ்வாறு கொளளுங்கால், நந்தி எனதமிசத்தா லொருகுரங்கு பிறக்கு மென்றது எனது அநுக்ரகத்தா லொருகுரங்கு பிறக்கும் என்று பிரஸ்தாபித்தபடியாம. எனக்குச் சமானமானவர்களென்று பிரஸ்தாபிக்கப்பட்டவரினும், எனது அநுக்ரகம்பெற்று வருபவன விசேடமுடையவன் என்றுஞ் சூசித்தபடியாம். ஏனைய குரங்குகளும் நந்தியநுக்ரகம பெறினும், அநுமான் பெற்ற வநுக்ரகம மிகு விசேடமாம். ஒரு அரசனது தலைமை அவனது ஏவலாளர்கள பெற்றிருப்பது சத்தியமேனும், அவருள, மந்திரியடைந்த அநுக்ரகம் உசிதத்தினு முசிதமாமன்றோ? இவ்வாறு தெளிந்து ஏனைய குரஙகுகளையும், அநுமானையுங கொண்டாடுவா விவேகிகளென்றறிக. உருத்திரர்களில, ஸ்தாணுருத்தரா விசாலாட்சருத்ரர் ஸ்ரீகண்டருத்ரர் முதலிய அநேகருளர். சதருத்ரர் சஹஸ்ராருத்ரர் என்று சேட்கப்படும் உருததிர பேதங்களையு மறிந்திவர் மேலோர். இவருளொருவரே அநுமானாய் வநதவரென்றறிக. சிவபுண்ணிய மேலீட்டினாலே ருத்ரஸாம்ய மெய்தியவர்களெலலாம உருத்திரர்களென்று படிக்கப்படுதலும், திரிநேத்திரம, நீலகண்ட முதலிய கோலங்களைத் தாஙகுதலும், ஒரு காரியார்த்தமாகச் சிவாநுஜ்ஞை கொண்டு பூமியில் வந்தால மீண்டுஞ் சாகாதிரு

த்தலும் பெற்று வாழ்ந்திடுவர். இவ்வுண்மையால், ருத்ராவதாரம் அநுமான் என்றாலும், நந்தி அவதாரம் அநுமான் என்றாலும், சிவாம்சம் நந்தியென்றாலும், நந்தியம்சம் அநுமான் என்றாலும், பிணங்கமாட்டார் பெரியோரென்க. இந்த நுட்பங்களை எங்ஙனே பட்டை நாமம் போட்ட பாஞ்சராத்திரிகளறியப் போகிறார்கள்.

ஏமது கையிலேந்திய இறகு சலியாதோடுந்திறத்தை நமதன்பரின்னுங் கொஞ்சங்கண்டு மகிழுமாறு செய்கிறேம். நந்திபகவான இராவணனிடம் பிரஸ்தாபித்தது முசயபுருஷனாக அநுமானையே. பின்னா ஏனைய குரங்குகளைப் பிரஸ்தாபித்தனர். இராமனுதியரை விபக்தமாகச்சூற வில்லை. இவவுணமை தோன்றவேயன்றோ வான்மீகமுழுதும் அநுமானது பிரதாபமும், வெற்றியும் கோஷிக்கப்படுகின்றன. இராமன்முழு மோகனாஸ்திரத்தாற்கட்டுண்டு சாவைத தலைமேற சுமந்தபோது சஞ்சீவி பர்வதங்கொண்டுவந்து அநந்தபபனுவை பிறககி யுய்விததவன அநுமானேயனறோ! அநுமானிலலாவிடின் இராமராவணயுத்தம பூாத்திகூடுமோ? இராமனுதியா இளைத்தும் களைத்தும் சோகிததும மோகிததும அழுதும தொழுதும மருண்டும புரண்டும வீழ்ந்து,முடிவில சரயுநதியிலுயிாவிட்ட பாக்யமெலலாம அநுமானுக்குணடா? இராவணனை யழிக்கவந்த இராகவன வந்த வேலையைச செய்யாமல், சீதையைக்காட்டுகொழுதது வந்து மானமழிபப பொனமானைத் துரத்திப பெணடைப பறிகொடுததுக காடுமேடெலலாந் திரிந்து கவலைவாய்ப்பட்டுங் கலங்கி நின்றவாறென்னை? சமையலுக்கிறங்கியவொருவன் நீர் நெருப்புகள தேடியதுபோல இராவண ஸமஹாரத்துக்கே சீதையைப் பறிகொடுத்தன் முதலிய ஹேதுக்களைத் தேடினனெயன்றிறையென்று பூர்வபட்சிகள் புலமபுவர். இந்த ஸமாதானம் சுத்தமூடனுக்கும ஓர்சாளத்தையுண்டு பண்ணுகிறது. சத்துருவைத் துன்பப்படுத்திக்கொல்ல வெழுந்தலன் தாவ துக்கரூபியா

யொழுகித் தமோதிருனென்றது தியாஜ்ய ஸமாதானமாம். இராமனழுதது போதாமல ஜநகன் செத்தானென்று மருண்டு சீதையும் அழவேண்டுமா? இராமனழுத பிரபாவத்தை ஸ்ரீகாளமேகப்புலவர் "சத்தாதியைந்தையுந் தாங்காததெய்வந் தனிமறையுங்-கர்த்தாவெனுநதெய்வ மம்பலத்தேநிற்கக் கனகவிரு-பத்தானவன்மகன் பொய்ச்சீதையைவெட்டப் பார்த்தழுத-பித்தானவனறன்னை யோதெயவமாகப் பிதற்றுவதே" என்று பிரசங்கித்த இந்த நண்பரறியார்போலும். பார்த்து மகிழட்டும். அநுமான இராமனைப் பிழைக்கச்செயதான்-சீதைக்குயிர் கொடுத்தான்-பரதனுக்குப பிராணபிச்சை தநதான்-பிறர் துன்பங்களும பெயாநதிடச செய்தான. இத்தனையுங் கவனியாமல பூர்வபட்சியாரொருகால் அவ்வநுமான் இராமனைச் சுமநதும், அவனது பாதபக்தி செயதும பிரவர்த்தித்த வாறென்னையென்று கடாவுவா. அதற்கும ஈண்டிறை தந்து மகிழசசெயவாம்.

அநுமான் தானகொண்ட குரங்குககோலத்துக் கேற்ப மனுஷியனுகிய ராமனைவநதித்தது குற்றமாகாது. இராமன் தானகொண்ட ராஜகோலத்துக் கேறபப் பிராஹ்மணாகளாகிய விசுவாமித்திரா-வஸிஷ்டா-அகஸதியா முதலியவர்களை வநதித்தும, அவர்களுககூழியஞ்செயது பிரவாத்தித்ததும குற்றமோ? அநதரிஷிகள இராமனை ஸகருததாகவாவது காலிலவீழ்ந்து வந்தித்ததுணடா? அமமுனிசிரேஷ்டர்கள் காலில வீழ்ந்து வழிபட்டதனுல இராமன் அவர்களிற் றாழ்ந்தவனே? இன்னுமிதறகுப பாணனுக்குச சிவபரஞ்சுடராட்பட்டு நடித்ததையுமெடுத்துரைககலாம. ஈண்டைக்கு அது பொருத்தமிலலாத வுதாரணம். அநுமான் இராமனைத் தனக்கதிபனுகக்காட்டி, அவனுககுத்தாழ்ங்கி நடககிறவனுக நடிககவேண்டியது ஆவசியகமோவெனின், குரங்கு(மிருகம்) தாழ்ந்தது. மனுஷ்யன் உயர்ந்தவன். தெய்வம் மிகவுயர்ந்தது. ஈண்டு மிருகத்தை யாளவேண்டியது மனுஷ்யன். நந்திபகவான் குரங்கு என்று

இராவணன் தம்மைத் தூஷித்ததை யநுஸரித்து அவனுக்குக் குரங்கினாலேயே அழிவு கூறினர். அக்குரங்குவெள்ளங்களை யாள்வதற்கு ஒரு மனுஷ்யன் வேண்டும், அந்த மனுஷ்யன் தனக்கு மேலான தெய்வத்தி னவதாரமாயிருத்தல் வேண்டும். அந்தத்தெய்வம் சிவபரஞ்சுடரே. அந்தப் பெரிய தெய்வத்தைமனுஷ்யனாய் வரும்படித் தான்விதிப்பது அல்லது சங்கற்பிப்பது அஸங்கதம் (அபாத்தமான காரியம்). இனித் தமக்குக்கீழ்ப்பட்டவர்களில் விஷ்ணுபெரியவர். இவரை அந்தமனுஷ்ய ஸ்தானத்தி னிறுத்தித் தாம் நடித்தது ஸாமஞ்ஜஸமேயாம். பிராமணன் தனது குலத்திலே ஆசிரியனை நேராவிடின், கீழ்ப்பட்ட குலத்திலே தேடலாம் என்ற விதியும் இதனை நிறுத்தியவாறறிக. இவ்வாறு விசாரித்துணர்ந்த சைவப்பெரியோர்களை இவரென்றுஞ் சந்தித்திலர். சந்தியாமலே சைவர்கூறுஞ் சமாதானம் இதுவென்று இவர் வருவித்துரைத்த அல்பவாக்கியங்க ளபத்தவாக்கியங்களா யொதுங்கின்மையால், இவருக்குச் சித்தாந்தமாய் நின்ற "புராரி மற்றியானே வாதசேய்" என்ற துஷ்டவாக்கியத்தின் கதியையும் இனிச் சற்று விசாரிப்பாம்.

இந்தத்துணைவசனம் கம்பனதன்று என முன்னரே பரிஷ்கரித்தோம். அதனால், அதனையடுத்து முன்னும்பின்னுமாக ஏகதேச வசனங்களிருப்பின், அவையும் முதல் வசனத்தின் கதியையே யடையும். பிரக்ஷிப்தங்களாகிய இவை நந்தியை விளக்க வேண்டிய ஆவசியகமுமில்லை. அதுவா கம்பன் சொந்தச்சரக்காயிருந்தாலுங்கூட வான்மீகத்தைப் பகைத்த வவ்வசனங்கள் சட்டைபண்ணத்தக்கனவல்ல. கம்பன் வாக்கெனக்கொண்டவையே காலைக் கிளப்பிக்கொள்ளுமானால், பின்னர் அவற்றிற்கு வியாக்யாதாக்களாய வார்த்தக்க கம்பனிகவிராயர்கள் வார்த்தை யெங்ஙனே மதிப்படையும்? கம்பன் தான் க்ஷேமமாய் ஜீவித்திருக்கும்போது ஒருநாளிரவு சில இஷ்டர்களோடு

வீதிவழியாய்ப் போய்க்கொண்டிருந்தான். அப்போது ஒருவீட்டின் திண்ணையின்பேரில் ஒரு கவிராயன் கம்பராமாயணப்பிரசங்கஞ் செய்வதைக்கண்டு சிறிது நேரம் அங்கு நின்று கேட்டான். கேட்டவன் சிரித்து, உடனிருந்த இஷ்டர்களை நோக்கி, இவன் பிரசங்கிக்குங் கம்பராமாயணத்தில், கம்பன்பாட்டும் (என்பாட்டும்) சிலவிருக்கின்றன என்று சொல்லி வெறுத்துக்கொண்டான் என்று வித்வான்கள் சொல்லிக்கொள்வதுண்டு. இதனால், கம்பன்காலத்திலேயே கம்பராமாயணம் சீர்குலைந்துவிட்டது என்று ஏற்படுகின்றது. கொஞ்சம் சமீபகாலத்தில் நாமம்போட்ட கவிராயர்களாயிருந்த வேங்கடாசலமுதலி கோவிந்தபிள்ளை - இராஜகோபால பிள்ளை முதலியவர்களால் கம்பராமாயணம் பட்டபாடெல்லாம் பட்டு நிலைகெட்டுத் தட்டுத்தடுமாறிப் போனது யாருமறிவார்கள். அவர்களைப் பின்பற்றியெழுந்த நமது பூர்வபட்சியார் அவர்களையே பின்வியாக்யாதாக்களென்று பிரஸ்தாபித்தார். இந்தப் பூர்வபட்சிக்கு அதிகாரக்யாம் அவர்களை மதிக்கவில்லையாகையால், அவர்கள் வியாக்யானம் எமக்கு வெகுதுச்சமென்றறிக. இந்த நண்பரும், இவர் மெச்சிய வியாக்யாதாக்களும், இவர்கள் கொண்டாடுங் கம்பனும் விஷ்ணுமூர்த்தி அமரர்களைக் குரங்காயப் பிறக்கும்படி யேவியதற்குக் காரணமேதென்று மோரேதுகண்டு கூறினரா? கருடனுக்கு வலியன்குருவி வைரியானதுபோல அரக்கர்களுக்குக் குரங்குகள் வைரிகளா? கரடி-புலி சிங்கமுதலிய வலிந்த மிருகங்களைச் சொன்னாலுமொருவாறு பொருந்தும். நந்திபகவானது சங்கற்பமேயன்றோ நாராயணனது ஆணைக்கு மூலமாய் நின்றது? இதனை யுணர்ந்தவர்கள் இராமாயணமுழுதும் சுத்தசைவமாயிருப்பதறிந்து வான்மீகத்தைச் சைவராமாயணம் என்று வகுப்பராகையால், அதற்கு விரோதமாகப்புலம்பும் எந்தராமாயணகர்த்தர்கள் வாக்கும் சத்தியத்தின் முன்னின்று ஜீவியாதென்க. அந்த

வாதம பேசவெழுந்த நணபர் இனிமேனும் "புராரிமற்றியானே வாதசேய" என்றதுண்டு வாசகியத்தைத் திலதர்ப்பணம் பண்ணி விடுவாராக.

பூர்வபட்சம்.

"உத்தரகாண்டத்திற் கூறியவண்ணம அவ்வரனார்தியும ஒரு குரங்காய் அவதரித்ததென்க. நந்திதேவரமிசமே ரிஷபனெனனும வானரவீரன் என்று நாரதிய புராணம் கூறுகின்றது."

சித்தாந்தம்.

இப்போது விவகாரமெல்லாம வான்மீகம்-கம்பராமாயணம் என்பனவைகளைக்குறித்து. வான்மீகத்தைக்கம்பன்றொடரவேண்டியது நியதம. நமதன்பா வான்மீகத்திலும், கம்பராமாயணத்திலும ரிஷபனைககாட்டி நந்தியை நிலைப்பிக்க வேண்டியது. இவைகளைக் கைகழுவிவிட்டு நாரதியத்தினின்றுகொண்டு நியாயமிழுந்தது பெருந்துக்க மென்க. இந்த நாரதியம "புராரிமற்றியானே வாதசேய" என்றதை இவருக்குச சாதித்துக் கொடுத்திலதுபோலும. உத்தரகாண்டத்தில் என தமிசத்தாலொரு குரங்கு பிறககுமென்றதே ரிஷபனென்று இவர் சாதிககலாம. இவவிநாமதேயக் குரங்கை நந்திபகவான் இராவணவதத்திற்கு அக்ரகண்ய ஸ்தானத்திலுரைத்தாரெனபது கேவல அவிவேகமாம. நாரதியங்கூறுமாகுல் பிரக்ஷிபத மென்றொதுக்குவதே சால்புடைத்தாம்.

பூர்வபட்சம்.

அநுமான் இலஙகைக்குபபோனபோது இவன் என்னைசசபித்த நந்தியோ, பாணாசுரனோ என்று இராவணன் சங்கித்தான். அதனால், அநுமான நந்தியெனபது புலப்படுகின்றது இவ்வுண்மையால அநுமானைசசிவனென்று கூறுவது கூடாது என்று சைவர்கூறுவா. இது அஸங்கதம்.

இராவணன் இருவரைப் பிரஸ்தாபித்தபோது நந்தியையெடுததுக் கொண்டது என்னை? பாணாசுரனைக் கொள்

ளலாகாதோ? பாணாசுரனைத் தள்ளியபடி நந்தியையுந் தள்ளவேண்டியதே, சிவன் அநுமான் என்பதே சால்புடைத்து.

சித்தாந்தம்.

நந்திபகவான் சிவசேவகர் (தன்னைச்சபித்தவர்). பாணாசுரனும் சிவசேவகன். ஆயினும் அவனுக்குச் சிவன் சேவகராயிருந்து அநுக்ரகித்தனர். இவ்விருவருமே இராவணனால் மதிக்கப்பட்டனர். அவனுக்கு விஷ்ணுவினிடம் மதிப்பிருந்தால் இவன் விஷ்ணுவோ என்றும் அவ்விருவரோடு சேர்த்துப் படித்திருப்பானன்றோ? அவன் விஷ்ணுவை மதியாமைக்கு நமதன்பர் கதி தேடுவதைவிட்டு நந்தி அநுமானல்லவென்று வாதிடுவது மானமின்மையேயாம். அநுமானைப்பார்த்து இராவணன் இருவரைப் பிரஸ்தாபித்தானேனும் நந்தியையே முதலிற் கூறினன். நந்திபகவான் தமதம்சத்தாலொரு குரங்கும், தமக்குச் சமானமான பல குரங்குகளுந் தோன்றுமென்று கூறியிருக்கின்றமையால், அநுமானைப் பார்த்தபோது இந்தக்குரங்கு நந்தியம்சத்தால் வந்த குரங்கோ, அவருக்குச் சமானமானவரா யெண்ணத்தகும் பாணாசுரனது அவதாரரூபமான குரங்கோ என்று இராவணன் சங்கித்தானென்று கொள்வதி லுண்டான பாதக மொன்றையுங் காணேம். இருவரையுங் கொள்ளலாமேனும் வந்தது ஒரு குரங்கேயாகையால் அவரை நந்தியம்சமானவரென்று கோடல் விழுக்காதென்க. இதனை யுணராது பூர்வபட்சியார் சைவரைத் தூஷித்தது ஜந்மதோஷத்தின்பயனும். இவரொருக்கால் கண்ணன் பாணனைச் செயித்து அவனுக்குத் துணைபோந்த சிவன் அவரது மக்கள் முதலினோரைத் துரத்தியும் வீரங்காட்டினர் என்று பெருமை பேசுவர். எமது சிவபாரம்யப்பிரதர்சினி-பாணாசுர விருத்தாந்தத்தில் இவரதுபெருமை குலைந்து இவர் மெச்சிய மயிரவதாரமூர்த்தியின் மகிமை சிதைந்து அலைதலால் விவேகிகளுண்மை யறியாமற் போகார். விரிக்கிற் பெருகும்.

பூர்வபட்சம்.

கம்பனுக்கு உருத்திரனே அநுமானென்பது கருத்தானால், "ஊழியினிறுதி காலத்துருத்திரமூர்த்தி யொத்தான" எனவும், "ஒறுத்து ருத்திரனெனத் தனித்தனி யுரைத்தான்" எனவும் (உருத்திரனையொத்தவன் அநுமானென்பது பொருளாக்) கூறுன என்றுசைவர் கூறுவர். அது கூடாது. நூலாசிரியர் இராமபிரானை ஸாக்ஷாத் விஷ்ணுவென்று ஒரு இடத்திலும், பரசுராமனை யொத்தவனென்று மற்றோரிடத்திலுங் கூறினா. இதனால விஷ்ணுவும் இராமருமவேறு என்று கொள்வது மரபோ? இவ்வுண்மை தெளிந்தார அநுமான் சிவனென்பதிலொரு சந்தேகமுங் கொள்ளார.

சித்தாந்தம்.

கம்பன் சிவனை அநுமானென்று ஸ்தாபிக்கவில்லையென்றதை மேலே நன்கு பரிஷ்கரித்திருக்கிறோம. அவனவ்வாறு செய்தானென்று நமதன்பர்போன்ற குறும்பாடிக்கபிராயர்கள் கூறித்திரிகின்றார்கள். தமக்கும், கம்பனுக்கும வான்மீகத்திற் பிரமாண மெங்கேயென்று கேட்டால தூரம்போயத் திரும்பிப் பார்க்கின்றனா. இதனால் அநுமானைச சிவனென்று கூறுமலே சிவனையொத்தவன் என்று கம்பன் கூறியது சாலவுடைத்தே. ஒருஇடத்தில சிவனெனறும, மற்றோரிடத்தில் சிவனையொத்தவனென்றும அவன கூறுதலைக் கூறியதாகக் கொண்டு இவா காலவிளம்பஞ் செயவது வஞ்சனையேயாம. சிவனையொத்தவன என்று பிரசங்கித்த விடத்தில் அசசிவனை "ஊழியினிறுதிகாலத் துருத்திரமூர்த்தி" எனறான். ஊழியினிறுதிகாலம சர்வஸம்ஹாரகாலம. அந்தக்காலத்தில "బ్రహ్మవిష్ణుశ్చరుద్రశ్చ సర్వేవా భూతజాతయః। నాశమేవానుధావంతి సలిలానీవ బాడబం" என்னுஞ் சுருதி பிரமன், விஷ்ணு, உருத்திரனுதியர் நெருப்பில நீரத்துளிகளாகின்றனா என்று கோஷிக்கின்றது. திரிமூர்த்திகளைச சுட்டெரித்துச சாம்பராக்கித் தனிமுதற்றாண்டவமூர்த்தியா யெழுந்தருளிய பெருமானது அழி

யா நிலைமையே கம்பன் வாக்கிற் பெறப்படுகின்றது. இவ்வாறுசிவபரஞ்சுடரை வந்தித்த வித்வமணி அவ்வமலமூர்த்தியை அநுமானாகப பிறந்தானென்று நிந்திபபாரா? யாண்டுப் பிறப்பில்லை, ஆண்டு இறப்பிலலை. யாண்டுப் பிறபபுளது, ஆண்டு இறபபுளது என்பது தர்க்கநியதி. ஊழிகாலத்து ருத்திரமூர்த்திககு இறப்பு அலலது அழிவில்லை. அதனாலவருக்குப பிறப்பு மிலலை. பிறவாத அவரை அநுமானாகப் பிறந்தாரெனறது தாக்கவிரோதம். அன்றியும், சுருதியில், "యోవిష్ణులింగేన లలాటజేన సర్వంజగద్భస్మసాత్కరోతి। పునశ్చసృష్ట్వాపునరప్యరక్షదేకస్స్వతంత్రఃప్రకటీకరోతి" என்று கூறப்பட்டதில், சிவனாரது நெற்றிக்கண்ணினின்றும உளுந்துபரிமாணத்தளவு நெருபபுப்பொறியொன்று தோன்றி ஸர்வஜகத்தையும் பஸ்மமாக்கிவிடுமென்றும, பின்னர்சசிவனே உலகத்தை யுண்டுபண்ணிக காத்திடுவரென்றும், இப்படியே திரும்ப அழித்தும் ஆக்கியும அளித்தும திருவிளையாடல் புரிவாரென்றும் பொருளுண்டாதலை, வேதவித்துக்களறிந்து மகிழ்வர். இசசிவபரஞ்சுடரின் சந்நிதியில் ஒரு புழுவாகவும் எண்ணவேலாத வொரு குரங்கை (அநுமானை) அச்சிவனாரது பூரணாவதாரம்,அமிசாவதாரம என்றுவாயில் வந்தபடி யெலலாம் பேசி வமபளக்கு நண்பராதியோர்கதி இனி யென்னமோ வறியேம். இனிக்கமபன் அநுமானுக்குச் சிவவுவமை கூறினனென்பதேசித்தம. உலகமுண்டு கடலிற்றூங்கும் விஷ்ணுவினதுநிலைமையே ஊழிககாலத்தினியக்கமாக வாதிக்கும் வைஷ்ணவசித்தாநதத்தின் வாயில் மண்போட்டான் கம்பனென்றறிக.

இனி விஷ்ணுவை யொத்தவன்-பரசுராமனை யொத்தவன் இராமனென்றது என்னை யெனின், இராமன் விஷ்ணுவேயாயினும், விஷ்ணுவானவர் அவதாரங்கடோறும் ஒன்றுடொன்று மாறுபட்ட விகாரமெய்தலால், அவ்விகார மூர்த்திகளோடும் அதிஷ்டான மூர்த்தியோடும் ஸந்தர்ப்பத்துக்கேற்ப இராமனையுவமித்து விவசரிக்கின்றனர் பெ

ரியோர் பரசுராமனும், இரகுராமனும் விஷ்ணுவினது அவதாரங்களேயாயினும் பரசுராமனுதைபட்டான், இரகுராமனவனை யுதைத்தான். உதைபட்டராமன் கார்த்தவீரியார்ஜுனனை யெதிர்த்து வெற்றி புனைந்து நின்றபோது இரகுராமனை யொத்துத் தோன்றினன் என்றல் இழுக்காது. இராமன் தசரதனேவுதலால் காட்டுக்குப்போக விசைந்த போது ஜமதக்னி யேவுதலால் தாயைக்கொன்ற பரசுராமனை யொத்துத் தோன்றினனென்றல் இழுக்காது. இவ்வாறுன விவகாரங்களை யோசியாது நமதன்பர் மனப்பால் குடித்து அநுமானுக்குச் சாதித்த பரத்வம் காலைக்கிளப்பிக் கொண்டதெனக.

இனி "மழுவலானியாண்டும் வைகுந் - தடவரையதனை நோக்கித் தாமரைச் செங்கை கூப்பிப் - படர்சுவான் றனனை யன்னபரமனும் பரிவிற் பார்த்த - தடமுலை யுமைக்குக் காட்டி வாயுவின் றனயனென்றான்" என்று கம்பன் கூறியதில், அநுமான் சஞ்சீவி பர்வதங் கொண்டுவரும்போது ஸ்ரீகைலாசத்தைக்கண்டு இரண்டு கைகளையுங் கூப்பி வணங்கினன் எம்பெருமான் அவனைப் பரிவோடு பார்த்து அம்மையாரை யழைத்து, ஏ பார்வதி! இவன் வாயுபுத்திரன் என்று கூறினர். இந்த ஸந்தாபம் சிவனே அநுமான் என்று கூசக்குரலிடுந்தற்கு ஓரணுத்துணையு மிடந்தராது விளங்கவும், "வாதசேய" என்றதனாலேயே தன்னைச் சொல்லிக்கொண்டாரென்று இவ்வாதியார் வாய் திறந்தது மலவலியின் மணமென்றுணர்க. இராமனையும் விஷ்ணுவையும் ஏககாலத்திலிருந்ததாகக் கூற இடமில்லை. பரசுராமனையும் விஷ்ணுவையும் அப்படியே பிரஸ்தாபிக்க இடமில்லை. சிவபரஞ்சுடரும், அநுமானும் நேரில் ஸந்தித்தார்கள். அப்போது சிவன் பரிவோடு அநுமானைப் பார்த்தார் என்று சிவகருணை தனும் பியவிசேடங் கூறப்பட்டது. இவைகளை நோக்கும் விவேகிகள் எத்தனை வாதசேயை யிழுத்துவந்து குறுக்கே போட்டு இவர் ஜாலங் காட்டினும் இவரைத் துர்வாதி யென்றே

மதித்தொதுக்குவர். இனி "வாதசேய்" என்று நிகண்டு
திவாகரங்களில் இவன் பெயராக நுழைத்துத் தமது மதத்
தை நாட்டிக்கொள்வாராக. இவரது கம்பராமாயணப் பா
டல்களில், ஒரு சொல்-அரைச்சொறகளை யெல்லாம் பிடி
த்துக்கொண்டு காலம் போக்குவது அதிக வெறுபபையே
தருகின்றது., யாதேனும் விஷயபோத மிருந்தால மனசு
க்கு ஸுகமுண்டாகும். வெறுஞ சொல்லை யிழுத்து மல
லாடி வெல்லுந்திறனன்றிப் பல்லைக்காடடிப பசபச வெ
ன்று இவர் விழிப்பது எமக்குப்பரிதாபமென்க. இவரில்
வளவிலமையாமல் "விடைபிணிப் புணடதபோலும்" என்று
அநுமானைக் கம்பன் கூறிய சந்தர்ப்பத்தில அனுமான்
நந்தியென்னுங குறிப்புத் தோன்றுகின்றது எனப பிறர்
கூறுவதாக வருவித்து, அதனைத்தமது சின்னமதிகொண்டு
பரிகரிக்கிறார். பிணிப்புண்டவிடை யெனறது நந்திபக
வானுக்கு அகௌரவமாம். இதைப பிடித்துக்கொண்டு
கரையேறத துணியார் சைவர்கள். நந்தியநுக்ரகம பெற
றவர் அநுமானென்று மேலே யாம கிளத்திேனும.

பூர்வபட்சம்.

கம்பர் வான்மீகத்தின்படி கூறுகின்றேனென்று செ
ய்துகொண்ட பிரதிஜ்ஞைக்கு விரோதமாக வானமீகத்தி
லில்லாத சிவனுரது குரங்கவதாரத்தைச் சொன்னது பிச
கென்று சைவர் கூறுகின்றனர். அவ்வான்மீகிபகவான் தன
தம்சத்தா லொருகுரங்கு வருமென்று நந்தி கூறியதா
ய்ப் பணித்தாரேயன்றி நான் அநுமானாய் வருவேனென்று
சொன்னதாகப் பணித்தாரில்லை. இங்ஙனமாகவும், வான்
மீகத்திலில்லாத விஷயத்தைச் சைவர்கள் கொண்டாடு
வது யாங்ஙனம்? நந்தியானவர் விருஷபனென்னும் வானர
வீரனாகப்பிறந்தது சத்தியம். கம்பர் வான்மீக மொன்றனை
யே முதனூலாகக் கொள்ளாமல் (முதனூலின்படிக் கூறு
கின்றேனென்று பிரதிஜ்ஞை செய்துகொண்டு போஜன் மு
தலினோர் தமது இராமாயணங்களைப் பலபேதங்களையும்

பாடினதுபோல) "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்து, பின்னோன் வேண்டுவ விகற்பங் கூறி-அழியா மரபினது வழிநூ லாகும்" என்ற விதியை யநுஸரித்து வான்மீகத்தோடு வேறு நூல்களையுந் தழுவி வானமீகத்திற் கூறியுள்ளனவற்றைச் சிறுபான்மை விடுத்தும, கூறாதனவற்றை விரித்தும் நாளொன்றுக்கு எழுநூறு செய்யுள் வீதம் யுத்தகாண்டம் வரையில பாடிமுடிததனர். அவரது நூலில் பலபாடல்களொன்றறகொன்று முரணித்தோன்றும். அவைகளுக்கு வேறு நூல்களைத் தழுவியே பொருள்கூறவேண்டும்- வானமீகததைதத தழுவி யுரைக்கமுடியாது. "பாரிமற்றியானே வாதசேய்" எனறது பிறநூலாராய்சசிகொண்டு கூறியதாகலின், முதனூலை நோக்க வேண்டுவதில்லை.

சித்தாந்தம்.

வான்மீகத்தின்படிக் கூறுகிறேனென்று பிரதிஜ்ஞை செயதுகொணடவன கமபன். அவன் ஏனவ்வாறு செய்யவில்லையென்று சைவர் கடாவியது ஸஹஜம். சைவரொருவரும நாஙகள் வான்மீகத்தின்படியே பிரவர்த்திக்கிறோமென்று பிரதிஜ்ஞை செய்துகொண்டதில்லை. அவ்வாறு செய்துகொள்ளாத சைவரை நோக்கி நமதன்பர் கேட்ட கேள்வி துபபறற தேயாம. இவர் கம்பருக்காகப் பரிந்து கண்ணீர் விட்டு அவன் மானத்தைக் காப்பாற்ற வெளிப்பட்டு இபபோது பதுங்குகிறார். இது ஒரு ஆண்மையா? வான்மீகர் சொனனது சரியோ? தப்போ? எமக்கு ஆவசியகமில்லை. அவர் கூறியபடிக் கம்பன் கூறவேண்டியது. இதற்குக கதி கூறாமல் நமதன்பர் "முதனூலை நோக்க வேண்டுவதில்லை" என்று முடிவுரைத்து முகங்கவிழ்ந்தா ரிதென்கொலோ? ஆரம்பத்தில் "பாரிமற் றியானே வாதசேய்" என்று கம்பன் கூறியது வான்மீகத்தில் குப்தமாயிருக்குங் கருத்து என்று வாதித்து, இப்போது, அவ்வாறு கூறியது "பிறநூலாராய்ச்சி கொண்டு" என்று தூரப்போய் நின்று ஒருகல்லெறிந்தோடிய சிறுவனை யொத்து இவர் வாய்திறந்தது

இவருக்குப் பெருங்குறையேயாம்? இனி வான்மீகிபக வான் நந்தியம்சத்தா லொரு குரங்கு வருமென்றதை அநுமான் என்று சைவர்கள் கொண்டதுணிபு யாங்ஙனமென்று இவர்கடாயினாரன்றோ? யாம் அநுமானை நந்தியென்று கொண்டிலம். அவரநுக்ரகம் பெற்ற வொரு உருத்திரனென்று மேலே விளக்கினோம். சிவனடியாரைச் சிவனென்று வந்திப்பதுபோல நந்தியநுக்ரகம் பெற்றவரை நந்தியென்று பண்டிதர் கூறுவதுங் குற்றமாகாது. நாரதீயம் நந்தியை ரிஷபனென்னும் வானரனாகக் கூறியதேயெனின், எந்த நாரதீயம்? மூலபுராணமா, உபபுராணமா? எதுவாயிருந்தாலும். நந்தி அநுமான் என்ற பாரதத்தோடு முரணியிழிந்திடும். நாரதீயத்துக்குத் தெரிந்தது வான்மீகத்துக்குத் தெரியாதோ? முக்யமாகிய அதிலில்லாத ரிஷபனைச் சிஷ்டரொப்பாரென்க. வான்மீகர் நீங்க, கம்பனாவது இந்தரிஷபனைக் கையாண்டானோ? அவனும் காற்றிலேவிட்ட வொரு அனுமனேயக்குரங்கை நமதன்பர் பதே பதே பிரஸ்தாபிப்பது ஆசை வெட்கமறியாது என்பதற்கே இனமாயதென்க.

இனிப் போஜன்முதலியோர் வான்மீகத்தின் படிக் கூறுகிறோமென்று தொடங்கி எப்படி பேதித்துச் சொன்னார்களோ, அப்படியே கம்பரும் பேதித்துச் சொன்னாரென்றும், முதனூலுக்கு வழிநூல் பேதிக்கலாமாகையால் தமது வழிநூலில் தாமும் பேதித்தனர் கம்பரென்றும் இந்தப்பண்டிதர் கட்டுக்கட்டினார். போஜன் முதலியோர் செய்த இராமாயணங்கள் உலகத்தில் வெகுபூஜ்யமோ? வான்மீகத்தோடு பேதித்து என்னவிசேஷம் பெற்றனா? வான்மீகத்தில் விடுபட்டவைகளை இதரராமாயணங்கொண்டு உலகம் அநுஸந்திக்கவேண்டுமே? எங்காவது அவை அநுஷ்டானத்தில் வந்திருக்கின்றனவா? சொன்மாத்திரமாய்ச் சீவிக்கு மவற்றோடு கம்பராமாயணமும் கதியிழந்தடங்கியது எமக்குப்பரமசந்தோஷம். இனியிவர் கம்பராமாயணம் எதற்கு வழிநூலாயிருக்கக்கண்டார்? வான்மீகத்துக்கெ

னில், பிறநூலகளையு மிவர் பிரஸ்தாபித்தமையால் முதற் பிரஸ்தாபம முதலறுந்தது. அன்றியும், வான்மீகம் கீர்வா ணம். அதற்குத் தமிழிராமாயணம் வழிநூலாகாது. மொ ழிபெயர்ப்பாகும். இந்தமொழிபெயர்ப்பினைத் தமிழ் மு தனூலாகக்கொண்டு, இதறகு வழிநூல்—சார்புநூல்கள் பிறபித்தல நியதம. முதனூலின்படி வழிநூல சார்புநூல் களும பூஜ்யமாகவே விளஙகும. இதற்கொரு நிதரிசனங் கூறுகினறோம.

கீர்வாணததில் சிவஞானபோதமுளது. அதன் மொ ழிபெயர்பபு ஸ்ரீ மெய்கணடசிவம செய்தருளிய தமிழ்ச சிவஞானபோத சூத்திரம. இநத முதனூலுககு வழிநூல் ஸ்ரீமத் அருணநதிசிவம செயதருளிய தமிழ்சசிவஞானசித் தியார். இதறகுச சாாபுநூல் ஸ்ரீமத உமாபதிசிவம செ ய்தருளிய தமிழசசிவபபிரகாசம. இவைமூனறும லோ கபூஜ்யமாய் வநதிககபபடடு வருகினறன. இநத முறை மைதெரியாது குழறுபாடுசெயத இவரது பண்டிதத்திற மை சாலவழகுடைதது. இவர்கமபனுககுக கௌரவங கூ றவநது அவன "வானமீகததோடு வேறு நூல்களையுந் தழுவி வானமீகததிற கூறியவறறைச சிறுபான்மைவிடுததும, கூறுதலைவ ற்றை விரிததும்" பாடினுனெனறு அனியாயமாய் வானமீகத் தை யிழித்துககூறினா கணடீா. வான்மீகர் சிவனை அநு மானென்று சொலலாததுககந் துறுத்துசகொண்டு வரம் புகடந்த காரியஞ்செயதாா. இவரது அமஙகலபபா டினை தடுதன எவருமிபபோதெளிதினுணர்நதமையால இவரது வார்த்தைக்கு இனிக கௌரவமுண்டாவது கஷடதரமெ ன்க. இவரது பிரசஙகத்தால் வானமீகததிலுள்ள மெய் யைத்தவிர்ததும, இலலாத பொய்யைசசேர்த்தும நாளொ ன்றுக்கு எழுநூறுபாடல்பாடினுன் கமபனென்று ஏற்பட் டது. "முததுவீரியம" என்னுமிலக்கணநூலசெய்த கவி சிரேஷ்டரொருவர் ஒரேநாளில் மதுரைவீரன் புராணம் ஐஞ்ஞூறு பாடலிற் செய்துமுடிததார். கம்பராமாயணம

தாம்பிரசங்கித்தற் கருகமன்றெனக்கழித்து ஐயாயிரம் பாடலில் ஒரு இராமாயணம் பாடிமுடித்துப் பிரசங்கித்தார். இவ்வாறு பாடிமுடிக்கத்தக்கவர்க ளிப்போதும் அநேகரிருக்கின்றனர். இவ்வாறு விடைகள்பிறக்குமென்று பூர்வபட்சிபறியார். அறிந்தால் கம்பராமாயணத்தில் பலபாடல்க ளொன்றோடொன்று முரணித்தோன்றுமென்றும், அவைகளுக்கு வேறுநூலகளைத் தழுவியே பொருள்கூறவேண்டுமென்றும், வான்மீகரைத் தழுவியுரைக்க முடியாதென்றும் நாவசைத்து மானமழியார். வான்மீகத்திற் சிலவற்றை நிஷேதித்தும், வான்மீகம் நிஷித்தமென்று விடுத்த சிலவாபாசங்களைப் பூஜ்யமாகத் தழுவி யுரைதது மொருநூல் ஜீவிக்குமானல் ஆட்டுத்தலையோச்சன்பாடிய அந்தக் கஞ்சாமாலைப்பாட்டை நமதன்பரே யநுபவித்து வாழட்டும், விரிக்கிற் பெருகும்.

பூர்வபட்சம்.

வான்மீகத்தி லிராமையால், அநுமான் சிவனென்றதை இதரநூல்களாலொப்பாத சைவர்கள் வான்மீகத்திலிராத இராமரது சிவபூசையைமாத்திரம இதர நூல்களைக் கொண்டே சாதிக்கிறார்கள். இதர நூறபிரமாணத்தை விரும்புமிவ்வன்னோர் விஷ்ணுவானவர் சிவனுககுக் கொடுத்திருந்த வரத்தின்படியேதான் இராமகிருஷ்ணாதி யவதாரங்களில் சிவனைப்பூஜித்து அவனுக்குக் கௌரவமுண்டுபண்ணினரென்று வராகபுராணங் கூறுவதை மாத்திரம் ஏன் அங்கீகரிப்பதில்லை?

சித்தாந்தம்.

இராமனது சிவபூஜை வான்மீகத்திலில்லையென்று வம்பளக்தார். "అత్ర పూర్వం మహాదేవః ప్రసాదమకరోత్ప్రభుః" என்ற வாக்கியம் வான்மீகத்தி லுள்ளது. இதில், பிரபுவாகிய மஹாதேவர் எனக்கிரங் கிப்பிரஸாதித்தார் என்று இராமன் கூறியவாய்மை வெளிப்பட்டது

சிவபராஞ்சுடரை மஹாதேவர் என்று பிரஸ்தாபித்துத் தமக்கு அவர் பிரபுவென்றும், தமக்குப் பிரஸாதித்தா ரென்றும் தாசரதி மகிழ்ந்துரைத்த வசன பங்தியை யோராமல் இவர்போலுங் கூசசலே யொருவரும் மதியார். பிரபுவாகிய சிவசந்நிதியில் அவரது பாதசேவை செய்யும் (அவருக்கு ஊழியஞ்செய்யும) இராமன் சிவபூசைசெய்தானென்றதையிழுக்காகக் கொண்டதென்னமதியோ? இராமாயணத்தி னுபப்ரஹ்மணமாக இதரநூலகளை யாமதழுவுவோம. இராமாயணத்திற் சிவபூசை யிலலையென்று வீண்வமபளப்பவர் வைஷ்ணவர்கள். இராமாயணததிலில்லாத சிவனது குரஙகவதாரததைச சாதிக கமுந்துவதுபோல இராமாயணததிலிருககும இராமனது சிவபூசையைப பேதிக்க முந்துவா நமதனபரும அவரினததவரும. மஹாதேவசப்தத்தைச் சிதைத்து வருணபரமாக்கி அவனகாலில் வீழ்ந்தா னிராமனெனறு கூறுவது அவருக்கு ஆசை. மஹாதேவசப்தம வேறு ஸநதர்ப்பத்திலும படிக்கப்படடிருககினறது. "సిద్ధార్థశ్శంసమానస్తే" என்று தொடங்கி "మహాదేవప్రసాదాచ్చ పిత్రామమసమాగమః" என்று அநுமானிடம இராமபத்திரர் பரதனுக்குத் தெரிவிக்குமபடி சொலலியனுப்புகிறார். இந்த மஹாதேவசப்தத்தால் சிவபராஞ்சுடரையே, இனிது விளககி அமமஹாதேவபிரஸாதததால் தாம் கிரமமாயடைந்த நனமைகளை இராமன் பிரகாசப்படுததியதாக ஏறபடடது. மஹாதேவ சப்தம் இராமாயணத்தி லெங்கெங்கு வருகிறதோ அங்கெல்லாம் சிவபராஞ்சுடரையே விளக்குகின்றனர் வான்மீகிபகவான். இராமன்சீதையினிடத்திலும, அநுமானிடததிலும மஹாதேவப்பிரஸாதத்தையே தானடைந்தபேறாகக்கூறிமகிழ்ந்தாலுகையால், இராமாயணத்திற் சிவபூசையிலலையென்று பூர்வபட்சி யுரைத்த பொய்வாதம் துச்சமா யொழிந்ததென்க. நிற்க.

வேறுநூல்கொண்டு இராமனது சிவபூசையைச்சா திக்குஞ்சைவர்கள், அந்தப்பூசைக்கு ஹேதுக்கூறிய வராக புராணத்தையுந் தழுவி, அதிற்பெறப்பட்ட வரதான பாலத்தையும் ஏனங்கீகரித்திலரென்று நமதன்பர் கடாவெழுப்பினாரன்றோ? இவருக்குப் புதிதிமாலினியம அதிகம்போலும். ஒருவர் தனக்கநுகூலமானகாரியங் தேடுவார்களேயன்றிப் பிரதிகூலததிற பிரவேசியார். வானமீகத்திற்போந்த இராமனது சிவபூசையை இதரநூலகளகொணடு நன்குவிளக்குவது ஆவசியகம. அவவாறு சாமபவாகள் செய்து மகிழ்கின்றனா. வராகபுராணம சிவஸாவோத்தமத்தை யழிககுமானல், அதன் முகத்திலேனே விழிபபார்கள் அப்பெரியோா? இராமன சிவபூசைசெயததுபோலச்சிவன் விஷ்ணு பூசைசெய்தாரென்று இவர்பிரமாணங்காட்டினு மிவரதுமனோரத மொருவாறு ஈடேறும. அப்படிக்கின்றி (அவதாரஙகடோறு முனனைபபூசித்து உனககுப்பெருமையுண்டுபணணுகிறேனென்று) சிவனுக்கு விஷ்ணு கொடுத்த வரத்தைப பிரதிபாதிக்கிறது அந்த இழவுப்புராணமென்று சாடசிபகாந்தது இவருககு ஸங்கடத்தையே தந்ததென்க. ஒரு அமபடடன வேதியனொருவனைப் பார்த்து எனக்கு நீ க்ஷவரஞ்செய்து என்னைப பெருமைப்படுத்தககடவீா என்று பிராாத்திததான். அபபடியே மறுநாள் வேதியன் அமபட்டனுககு க்ஷவரமசெய்து பெருமையுண்டுபண்ணினன் என்பதே நமதனபரது சித்தாந்தத்திற்கு நிதரிசனமாம. வேதத்தில் "நாராயண பரோ த்யாதா" என்றும, "ஶம்பு ர்த்யேய:" எனறு கூறபபட்டிருக்கின்றன. இதனுல, சிவபரஞ்சுடர் பிறரால தியானிக்கப்படுபவர் அல்லது பூசிககப்படுபவா என்றும விஷ்ணுவானவர் அச்சிவபரமாத்மாவைத் தியானிககினறவர் அல்லது பூசிக்கின்றவர் என்றும ஏற்படடது. விஷ்ணுமூர்த்தி சிவத்தியானஞ்செய்கின்றவர் என்று கோஷிக்கும் வேதமுணர்ந்தார்க்கு அவ்விஷ்ணுவினது அவதாரங்களாகிய

இராமகிருஷ்ணாதிகள் சிவபூசை செய்கின்றவர்களென்பதி லேனோ ஆசங்கையுண்டாகும்? அம்பட்டனுக்குப் பார்ப் பான க்ஷவரஞ்செய்து யாண்டுந் தன்மானமழியான். அம்பட்டனே பார்ப்பானுக்கு க்ஷவரஞ் செய்து கிருதகி ருதயனாவான். விஷ்ணுவானவர் சிவனைப் பூசித்து யாண் டுந் தனது மானமழியார். விஷ்ணுவே சிவபூஜை செய்து கிருதகிருதயராவரென்க. நமதன்பராவது அவரினத்துப் பண்டிதராவது விஷ்ணுவைத் தியேயரென்று வேதப்பிர மாணங்காட்டி இராமனது சிவபூசையை ரத்துசெய்யட்டும். சுருதி "శివఏకోధ్యేయః" என்றதுமாத்திர மன்றி "సఏకో రుద్రోధ్యేయః" எனவும், "కారణంతుధ్యేయశ్శంభుః" எனவும், "ధ్యాయీతేశానం" எனவும் பலவாறெழுந்து சிவனாது தி யேயத்வத்தைச் சாதித்தது. இவற்றை யுணர்ந்தால் இரா மாயணத்தில் சிவபூசை பேறப்படுவது அஸங்கதமென்று கொண்ட இவரது வலது துணிக்கப்பட்டொழியு மென்க. அநந்த சயனத்தில் விஷ்ணுவினது தக்ஷிணபக்கத்தில் சிவலிங்கம். இராமேசுவரத்தில் இராமனுக்கு எதிரில் சிவ லிங்கம். பத்திராசலத்தில் இராமனது தலையில் சிவலிங்கம். இவ்வாறு சிவலிங்க மயமாய் விளங்கும் இராமனது சைவக்காட்சியை நமதன்பர் பேதித்து விடுவாரோ? "உல கத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்-கல்லா ரறிவிலாதார்" என்பதற்கிலக்காகிப் பரிபவ மெய்தாது சுகிப்பாராக.

பூர்வபட்சம்.

தேவர்கள் அரக்கர் செய்யுந் துன்பத்தை உருத்திர மூர்த்தியினிடம் விண்ணப்பித்துக்கொண்ட காலையில், அ வ்வரக்கர்களை யாம் கொல்லமாட்டோமென்று சிவன் கூ றினர். அதனால் அச்சிவன் அநுமானாயப் பிறந்து அரக்க ர்களை யழித்தானென்ல யாங்ஙனம் என்று சைவர் கடாவு வர். ஜயவிஜயர்களை அவரெடுக்கும் பிறவிதோறும் விஷ்ணு வேதானறி யழிப்பதாக வரங்கொடுத்திருப்ப துணர்ந்த சிவன் விஷ்ணு செய்யப்போகிற காரியத்தைத் தாம் செய்

வதில்லை யென்று கூறியது ஸஹஜம். சிவன் அரக்கரைக் கொல்லோமென்றது ஜயவிஜயர்கள் பிறப்பாகிய இராவணை கும்பகர்ணாகளையேயன்றி யேனை யரக்கர் குழுவையல்ல. ஏனையரக்கர்களையுங் கொல்லேமென்று சிவன் சொன்னாரலோவெனின், "மல்லார் புயத்துச் சுகேசனறன் வழியினுதித்த வல்லரக்கர், எல்லாப் பிழையுஞ் செய்தாலு மெனையை யடைந்தோராதலினல், கொல்லே மவரை யென்றமையாற கொல்லுமுபாயங் களுமெல்லாம், வல்லோ னறிருமா லெனறவர்க்கு மங்கை பாகன விடைகொடுத்தான்" என்று கம்பர் கூறியது சத்தியம். ஆயினும், இயற்கை யுருவத்தோடேகிக் கோருமல் வேற்றுரு வெடுத்து (அநுமானுயபபிறந்து) அரக்கர்களைக் கொன்றனன் சிவனென்றுணாக. தாங்கள் கொடுத்தவரங்களுக்கு மாறாக விஷ்ணு-சிவன் முதலாயினோர் வேற்றுருக் கொண்டு அரக்கர்களை யழித்தலியற்கை யென்க. இரணியனை நரசிங்கமாகத் தோன்றி விஷ்ணு வழித்ததும, சூரபதுமனை முருகவேளாகத் தோன்றிச் சிவனழித்ததும உண்மை நூல்களிற் கண்டுணாக.

சித்தாந்தம்.

சிவன் அநுமானய்ப் பிறக்கவில்லையென்று பிரபல யுக்திப் பிரமாணங்களால் மேல் யாம ஸ்தாபிதஞ்ோ மாகையால், அவ்வநுமான் அரக்சர்களை யழித்தது முதலிய காரியங்கள் சிவபரஞ் சுடரைச் சென்றடையமாட்டா. சிவன் அநுமானென்று யாமொப்பாமையால, இவரது நீண்ட (பயனில்) பிரசங்கத்துக்கு விடையிறுக்கு மாவசியகங் கண்டில மென்க. நந்திபகவான தமதமிசத்தா லொரு உருத்திரரை விடுத்து அநுமானைகப் பிறக்கச்செய்தது சுவேச்சை. விஷ்ணுவை இராமனாக விடுத்து அவ்விராமனை யதிட்டித்து இராவணனை யழித்தது சுவேச்சை. கானுங்கண்ணுக்குக் காட்டுங் கதிரொளிபோலிருந்தியக்கும் பரமபுருஷனை விஷ்ணுவின துள்ள முணர்ந்தியங்குகின்றவரெ

ன்று தூஷித்த பூர்வபட்சி மதுனைக்கு யாம் அதிகமாக வி யசனப்படுகிறோம்.

பூர்வபட்சம்.

அநுமான் வாயுவின் கூறால வேகத்தையும், உருத்தி ரமூர்த்தியின் பூரணாமிசத்தால வீரம-விசுவரூபம-விசுவரூ பத்தில் ஐந்துமுகம-மூன்று ்கணகளையுந்தாங்கி விளங்கி னன.

சித்தாந்தம்.

நமதனபர் அநுமானைப பூரணாமிசம பூரணாமிசம் என்று பிரஸ்தாபிபபது கல்வியறிவு போதாமையெனறு யாமப லவிடங்களிற் கூறியுள்ளோம. எணடு மதனையே கொண்டி டுக. இவா பூரணாமிச மென்றதைச சிலவிடத்தில் மறநது அமிசாவதார மென்றுங குழறினர். இரண்டு விதமும அஸதயேயாகையால, அவரெபபடிக கூறுவதிலு மெமக குப் பாதகமிலலை. அநுமானுககு வநத விசுவரூபம-மூன் று கண்கள முதலியன சிவாவதாரததின விசேடமானால, கண்ணன கொண்ட விசுவரூபம்-வீரம, இராமன்கொண்ட "రామం త్రినేత్రం సోమార్ధధారిణం శూలినం పరం" என்ற உபநிஷத் போதகமான சைவகோல மித்யாதிகளை இவர் எவ்வாறு கொணடு கூறுவா? ஈசுவரப் பிரஸாத மெயதினோர்க்கு ஐசுவரியயோக மென்னுஞ் சைவ நலங்கள் நிகழ்வது ஸஹஜம. ஈசுவரப பிரஸாத மெயதிய இராமகிருஷ்ணாதி களிடத்தும் ஈசுவரப் பிரஸாத மெய்திய நந்திபகவானிடத் தும், ஈசுவரப் பிரஸாதமெய்திய வாமதேவர், மங்கணிகர், சௌபரி முதலிய சாம்பவமணிகளிடத்தும் விசுவரூபாதி விசேஷ ஸம்பவங்கள் நிகழ்ந்தன வெனல் சத்தியம். இவற்றை யோராது அநுமானுக்கே அது சொந்தம் போல வெண்ணி அவனைச் சிவாவதாரமென்று கூறத்துணிந்தது ஸர்வாஸங்கத மென்றறிக. விரிக்கிற் பெருகும்.

பூர்வபட்சம்.

விஷ்ணுவானவர் நரசிங்கமாக அவதரித்து இரணியனைக் கொன்றார், சிவன் சரபமாகவந்து நரசிங்கத்தை யழித்தனன். திருமால் கண்டபேரண்டமாக அவதரித்துச் சரபத்தைக் கிழித்தெறிந்தனன். சிவன் சர்வதோ முகமென்னு மவதார மெடுத்துக் கண்டபேரண்டத்தை யழித்தனன். திருமால் சர்வதோபத்திர மெனனு மவதார மெடுத்துச் சர்வதோ முகத்தை யழித்தனன் என்று முறையே விஷ்ணு புராணங்களும், சிவபுராணங்களுங் கூறுகின்றன. இவ்வவதாரங்களைக் குறித்து மந்திர சாஸ்திரங்களும் விரிவாய்க் கூறுகின்றன. இதனால், விஷ்ணுவுக்குப் பிறப்புண்டானது போலச் சிவனுக்கும் பலபிறப்புக ளுண்டாயிருக்கின்றன. இவ்வாறு பிறக்கத்தக்க சிவனைப் பிறப்பிலலாதவனென்றும், அவன் எப்படி அநுமானியப் பிறத்தல் கூடுமென்றுஞ் சைவராசங்கிப்பது நியாயமா? நரசிங்கத்தை விஷ்ணுவினது அவதாரமென்றபோது சரபத்தைச் சிவாவதார மென்றால் ஏன் கூடாது?

சித்தாந்தம்.

இரணியன் தேவகண்டகனான அசுரன். அவனைத் தேவர்களிற் சிறந்த விஷ்ணுவானவர் நரமடங்கலாய்த் தோன்றியழித்தனர். அப்படியழித்தபோது அவனது மார்பைக் கீண்டு, இரத்தத்தைக் குடித்தனர். அதனால் வெறிகொண்டு தன்னறிவுதப்பித் தேவர்கள்மேற் பாய்ந்து இம்சிக்கத் தொடங்கினர். அப்போது தேவர்கள் விஷ்ணுகர்வபஞ்சனனாய் விளங்கிய சங்கரனைச் சரணடைந்தார்கள். அந்தப் பரமதயாளு சரபமாய்வந்து, வெறிகொண்டு அங்குமிங்கு மலையும் விஷ்ணுமேற் பாய்ந்து ஊர்க்குருவியைக் கருடன் அடித்துக்கொண்டுபோவதுபோல, கீழே பறந்து வந்து காலினாற் கௌவிக்கொண்டு மேலே போய் உதறினர். நகங்களாற் பீறியத னுடல் பிளந்து தோலுரிபட்

டது. அதனைத் தேவர்கள்வேண்டலால அரையிலுடுத் தருக் ரகித்தனர் அம்பிகாபதி. நரசிங்கன் இரணியனைகொன்ற வெற்றி நரசிங்கதாபனியுபநிஷத்திலும், சரபமூர்த்தி நரசிங் கனைக் கொன்றவெற்றி சரபோபநிஷத்திலும முழங்கப்படு கின்றன. பிரமாணங்களில சிறந்தபிரமாணம் வேதாந்தம் அல்லது உபநிஷத்து. இதனின்மிக்க பிரமாணமொன்று மிலலை. நமதனபா மேலே காட்டிய புராணஙகளும், மந்திர சாஸ்திரங்களும உபநிஷத்தின் காலின்கீழடஙகின. ந்ருஸிம் ஹதாபனியைப பூர்வபட்சமாககி யெழுநத சரபோபநிஷத் தினமேல நமதன்பா பிரஸதாபிதத கண்டபேரண்டத்துக்கு ஒரு உபநிஷத்துண்டானலன்றே சரபோபநிஷத்துப பூர்வ பட்சமாகும ? சித்தாநதமாய்நின்ற சரபோபநிஷத்தை யசை க்க விஷ்ணுவாலும முடியாததாகையால, பொய்யையெலலா முடைநத கண்டபேரண்டம்-சாவதோமுகம்-சாவதோபத் திர முதலிய கலபனைகளைக சடைவீதியிற கொண்டுவந்து விலைகூறியது விவேகிகள் காலின்கீழொதுஙகியது. நதிர சாஸதிரஙகளில கண்டபேரணடாதி விஷணுஸ்வரூப விஷ யம் மருநதுக்குங் கிடையாது. நரசிஙகம்-சரபம இவைகளு ககு மாததிரமே மநதிரோபாஸனையுணடு. கிறக.

நமது பூரவபட்சியார் நரசிஙகத்தை விஷ்ணுவினது அவதாரமென்றபோது 'சரபத்தைச சிவாவதார மென்றல் ஏனகூடாது என்று கடாயினரன்றே ? விஷ்ணுவுக்கு நர சிங்கப பிறபபுநேர்ந்தது பிருகு சாபததால. சிவனுக்குச சரபகோல முண்டானதற்கு ஏது வென்னை ? சிவாநுக்ரஹத் தால நரசிங்கம் இரணியனைவென்றதைத தனதுவெற்றி யென்று கொண்டவகங்கையை யிரிக்கவே சரபகோலம வெ ளியாகியது. இதனல, நரசிங்கததைப்போலச சரபகோலத் தை ஸாமானியமாகக் கருதிய வைஷ்ணவரறியாமைககு விய சனப்படுகின்றனர் பெரியோர். சிவனரது சரபகோலத்தை நரசிஙககோலத்தோடு சேர்க்க வாசைப்பட்டநண்பர் கண்ட

பேரண்டம்-சாவதோபத்திரம் என்பவைகளையும் விஷ்ணுவவதாரங்களிற் சேர்க்கவேண்டியது ஆவசியகமன்றோ? அபபடிச்சேர்த்தால், விஷ்ணுவினது அவதாரம் பத்தெனபது போய்ப் பன்னிரண்டுஎனறு பிரஸித்தியுண்டாமன்றோ? பத்துக்குத்தான் பிருகுசாபங் காரணம். எஞ்சியவிரண்டிக்குமயாருடைய சாபங்காரணம்? இவ்வாறு அலக்கண்படுங் கண்டபேரண்டாதி அவதாரக்கதைகள் ஸாதுக்களுக்குத் தியாஜ்யமென்க. சரபகோலததைத் தேவாரமெலலாந் துதிக்கின்றன. கண்டபேரணடாதிகளைத் துதிததவோர்பாடல் நாலாயிரத்திற் கிடைக்குமா ! இரணியனைக் கொன்றகதைக்கு நாலாயிரத்தில் ஏராளமான பிரமாணமுண்டு. இவ்வாறு கதியிழநதலறும் பூர்வபட்சியார் ஏனிவ்வபத்தபஞ்சாங்கம்படிக்க முநதவேண்டும்? ஆஞ்சநேயாவதாரவைபவம கூறுகிறேனென்று பீடிகைபோட்டு எத்தனையாபாசங்களை இடையிறகொண்டுவந்து கொட்டியளக்கிறார்? "அரகோதண்டகண்டகன்" என்று சந்தடியோடு சந்தடியாக ஒன்று நுழைததார், இவ்வலங்க்ருதத்தை யெழுதி என்னவாரிக்கொண்டார்? சிவனுடைய வில்லை இராமனொடித்துவிட்டானும. இவர் இவ்வாறு எழுதினமையால, யாம "விஷ்ணுபுஜகர்வபஞ்சனன்" எனவொன்று எழுதிவைததோம. இன்னுமெழுதுவதென்றால் எணணிறந்தனவுள. கிறக.

இவரது கண்டபேரண்டாதிகள் வெறும்பொய்யென்பதற்கு வேறு நியாயமுங்கூறுகிறோம். விஷ்ணுபகவான் எதிரிசகுத் தெய்வம். சிவபெருமான் எமக்குத தெயவம். இருவரும் இரண்டு தெய்வங்களை யொப்பினும் உண்மையி லிரண்டு தெய்வங்களிருக்கமாட்டா. இவருள், விஷ்ணுவாவது, சிவனாவது, இரண்டுமொழிந்த வேறு ஒருபொருளாவது தெய்வமாகநிலைத்தல்வேண்டும. இப்போது யாம் (காரியம் முடிய வேண்டியதற்கு) விஷ்ணுவையே தெய்வமென்று ஒப்புகிறோம். விஷ்ணுதெய்வமானால், தான் நரசிங்கவுருவெடுதத

பின்னாச சரபந் தோன்றித் தன்னை ஜாடும் என்று தெரிந்து கொண்டிருக்கும சரபத்தால் ஜாடப்படுவது தெய்வமுமாகா து. அந்தச் சரபத்தைத் தான் கண்டபேரண்டவுருவெடுத்து அதன்பின்னரழிப்பதாகவுந் தெரிந்துகொண்டிருக்கும அந் தக கண்டபேரண்ட வுருவத்தைச் சாவதோமுகந்தோன்றி அதன்பின்னா நிர்மூலமாக்குமென்றும, அதன் பின்னர்த் தான் சாவதோபத்திரமாகத்தோன்றிஅந்தச் சாவதோமுகத் தையும அழித்தல நிஜமென்றுந தெரிந்துகொணடிருககும். உள்ளபடியே இந்தஸம்பவங்களையெல்லாமறிந்துகொள்ளத் தகக வொருதெயவத்துக்குப பினகேடுகளவரவேறதுவில்லை. இவர்கூறிய அவதாரமுறைமையும், சண்டையழிவுகளும் ஸாமானிய ஜீவதாமம் இவ்வஸங்காத்மவாதத்தை யாமொ ப்பவில்லையாகையால். விஷ்ணுவின் கதியைச் சிவனிடமு மேறறிய விவாதுபிரசஙகம எமது காறகடையின்கிழொது ஙகிபவாறறிக. ஜீவன்கள், தேவாசுரமனுஷ்யமிருகாதி பல ஜநமஙகளிலுழலும். விஷ்ணுவாகிய ஜீவன் தேவன்,இரணிய னுகிய ஜீவன்அசுரன்,இராமனுகிய ஜீவன் மனுஷ்யன்,வராக மாகிய ஜீவன் மிருகம. இந்த ஜீவபேதஙகளை யிடககிநடத்து பவர் பதி இவரே பசுபதியென்று வநதிககபபடுவா. அவவாறி யக்குங்கால் அவ்வச்சீவர்களது கன்மாநுகுணமாகச் சுகது க்கங்களையூட்டி யுபகரிபபர். சுகம் அவரதுஅநுக்ரகததாலும் துக்கம அவரது நிக்ரகத்தாலும் ஜீவாகளுககு ஸமபவிக் கும் இனி விஷ்ணுமூாத்தி ஒருகௌரவமான ஜீவன் இநத ஜீவனுககுப் பத்துபபிறவிகள் காமததால வாய்ததன. அப் படி வாயத்தபோது, பததில் ஆறுபிறவிகள நிக்ரஹத்தை யும், நானகுபிறவிகள் அநுக்ரஹத்தையுஞ் சிவபெருமானு லடைநதன. நிகரகமெய்திய ஆறுஜநமஙகளில நரசிங்கமொ ன்று. இந்தநரசிங்கத்தையே தூக்கியுபாவைககப்பாாக்கிறா நமதன்பர். இதனமானத்தைக் காககத தலைபபட்டதுபோல மீன், ஆமை, பன்றி முதலிய உருவஙகளைச் சிவன் அழித்த போதும மேலுக்குமே வினனுமவைகளுககுப் பிறவிகளைக்

கூட்டி வெற்றிப்பாட்டைத்தாபியாது இவரும், இவரினத்தவரு முறங்கிக்கிடப்பதென்னையோ? இவ்வுண்மையுணர்ந்தபேர் சிவசரபத்தை வந்தித்து உய்யுநெறி தேடுவரென்க.

இவரது நரசிங்கத்தைத் யாம் பசுவென்று கூறினேம். பசுவானால் பூரணத்வமதற்குண்டாகுமா? இரணியன் பொருட்டுத் தூணிலிருந்து தோன்றியதால், பதியெனப்படுஞ் சிறக்குமெனின், அதுகூடாது. ஏககாலத்தி லெல்லாவிடத்தும் ஆவிர்ப்பவித்த காட்சியை இவரது பிரசங்கம் தாபியாமையால், நரசிங்கக்காட்சி பூரணத்வத்தைச் சாதித்துக்கொடுக்கமாட்டாதென்க. வில்லடி - பிரம்படிகளைத் தாங்கியும், யோகிருந்தும், திருக்கண்கள் மூடப்பெற்றும் உலகமுழுதுந் தமதியக்கத்தை விளக்கிய சிவபரஞ்சுடரினது பூரணத்வத்தை யோசித்தடங்குக. நரசிங்கம் தம்பத்தின் மூலைத்தும், கண்ணன் கோபிகைகளில்லந்தோறுமிருந்து நாரதருக்குக் காட்சிகொடுத்ததும் சௌபரிமுனிவர் தமது மனைவியரில்லந்தோறுமிருந்து அவ்விடங்களிலவந்த மாமன் மாமிகளுக்குக் காட்சிகொடுத்த பண்பினையே நிகர்க்கும். இவ்வரியபேறு சிவாநுக்ரகத்தால் ஜீவர்களுக்குப் பிராப்தமாகத் தக்க ஐசுவரியயோகமாம். சிவாநுக்ரகத்தைப் பெற்ற ஜீவர்கள் சிவனைப்போலவே தோற்றம் - செய்கைகளைக்காட்டிப் பிரவர்த்திக்கினும் விசேட அறிவுடையார்க்கு உண்மை வெளியாமென்க. "மாலயனாதிபசுக்கள் கடவுளர், போலிருப்பாரவருந்தீபற, போற்றும்பதியாரருந்தீபற" என்பதனாலுந் தெளிந்திடுக. இனி "శ్రీవిష్ణుః పశవః । దేవాః పశవ ఇత్యపి । శ్యాయతే చశ్యతేర్బ్రహ్మ్ । దయః పశవ ఇత్యపి । రుద్రః పశూనామధిపః । ఇతిచ శ్యాయతే శ్రుతిః" என்னுஞ் சைவபுராண வசனமும் பசுக்களைப் போர்குறித்து விளக்கின. இவ்வுண்மைதெளியாமல இவர் பரம்பொருளாகக்கொண்ட நரசிங்கனைப் பிரதிபாதிக்கும் ந்ருஸிம்ஹதாபனியில், "సహోవాచ ప్రజాపతిః" என்றாரம்பித்து, "ప్రథమం పాదం జానీయాత్" என்று முடித்து, அந

ந்தரம் சூரியனை இரண்டாம் பாதமும், சந்திரனை மூன்றும் பாதமுமாகச்சொல்லி "సబ్రహ్మసశివస్సహరిస్సేంద్రస్సోక్షరః పరమ స్వరాట్" என்றறெருடக்கத்து வசனத்தால திரிமூர்த்தியுத்தீர்ணரான துரீயவஸ்துவையே நான்காவதுபாதத்தின் அதிஷ்டானமாக நிலைபெறுவித்து, பினனும இந்த ஸாமத்தின்து நானகுபாதத்தையுஞ் சொன்ன பிரஜாபதியானவர் "ఋతగ్ం సత్యం పరబ్రహ్మ। పురుషంకృష్ణపింగళం॥ ఊర్ధ్వరేతంవిరూపాక్షం శంకరనీలలోహితం॥ ఉమాపతిః పశుపతిః। పినాకీ హ్యమితద్యుతిః॥ ఈశానస్సర్వవిద్యానాం। ఈశ్వరస్సర్వభూతానాం" என்றித்யாதிமந்திரத்தையுஞ் சொல்லி, அந்தபிரகரணத்தை யுபஸம்ஹாரஞ்செய்திருக்கின்றனா. இதனல் நருஸிம்ஹதாபநீயம சிவபரத்வபோதகமே எனபது சொல்லாமேயமையும் இதின மாத்திரமேயனறி நாராயணோபநிஷத்து-இராமதாபநி-இராமரஹஸ்யம் இத்யாதியுபநிஷத்துக்களிலும சிவபரத்வமே கோஷிக்கபபடுகினறது. சிவபரஞ்சுடரை வேதமானது "ఏకలోప నిషన్నయః" என்றும் "సర్వశ్శ్రుత్యుక్త ఓంమ్యగ్యః। సర్వాగమమయశ్శివః" எனறும வந்திடபதிவருணரார் விரிக்கிற பெருகும.

இவ்வபண்டிதரத்ன மிவ்வளவிலமையாமல சிவனுக்குப் பிறப்புண்டென்பதைச் சாதிக்கிறேனெனறுகாசிகொண்டதிரிண்டுபாடலகளெழுதிக் கண்சாமபினா. அவைவருமாறு:

'   எரித வழ்ந்தெறி முததலைச் சூலவே லேந்து
    கருணை யங்கடல் குறுநகை கோட்டிமென் கமலத்
    தாசி ருககுரற் பணணவன் றியானமாற் றுழியிற்
    புருவ நாப்பணிற் றோன்றினன் பூவையோர பஙகாய் "

"   கொழுதி வண்டிமிர் கொன்றையான் றோன்றிய பின்னர்
    'அழுத லாலவற் குருத்திர னெனும்பெய ரமைந்த
    துழுது தேனின முண்டிடும் தாமரைக் கிழவன
    ரெழுது மங்கையோர் பாகனை நோக்கினன் றுணிவான்."

இந்தப் பாடல்களில சிவனழுதாரென்றும், அவருக்குப் பிறப்புத்துணியப்பட்டதென்றும் நமதன்பர் கொஞ்சி

யுரைத்தார் மாயா சீதை வெட்டுண்டு மாய்ந்தபோதழுதவனும், ஜலந்தரன்பெண்டைகளவிற் புணர்ந்ததனால் தனது கற்பழிந்ததென்று மானம்பொறு துயிர்துறந்த அவளது பிணச்சாம்பரின்மேல் விடுகாட்டிற்சென்று புரண்டழுதவனுமாகிய இவரது விஷ்ணுவின் கதியை யோராமல் எமதப்பன முகையை யிழிபொருளிற் கூறவந்ததென்னமதியோ? அந்தப்பாடல்களில், "கருணையங்கடல்-குறுநகைகோட்டி-(பிரமன்) தியானமாற்றுழி (அவன்) புருவாரப்பணிற் றோன்றினன் பூவையோர் பங்காய் - தாமரைக் கிழவன்றொழுது மங்கையோர் பாகனை நோக்கினன்" என்றமைந்தவமைதிகளை இவ்வன்பா சீராக்குவாராக இவரது அபிமதம் சிறக்கவேண்டின், "கருணையங்கடலமுதனன் - குறுநகைகோட்டியமுதனன் - பிரமனது தியானத்தில் அவன் புருவமத்தியிற்றோன்றியமுதனன்-இடப்பாகத்திலெழுந்தருளிய பூவைகாணவமுதனன் - தாமரைக்கிழவன் றொழுது வாழ்த்தவமுதனன்" என்று விரித்தியுரையெழுதி விவேகசூடாமணியாய் வெளிப்படுதல்வேண்டும். மேற்பிரயோகங்களமுகையைத்தூரத்தமியல்பினவாயமைந்துகிடந்த லறிஞர்க்கு விளக்கம். பிறரமுகையைத் தவிர்க்கவேயன்றோ கருணைததும்புவது? குறுநகையுடையான அழுதிடல் யாங்ஙனம்? பிரமனது தியானத்தில, தியாதாவாகிய அவனுக்குத் தியேயவஸ்துவாய் அவனது (தியானஸ்தானமாகிய) புருவமத்தியில ஆவிர்ப்பவித்த வமலமூர்த்தியி னழுகை இழிவேற்பது யாங்ஙனம்? தியானிக்கிறவன் குறைவுடையவனுவன். அந்தக் குறையை யகற்றுதலே தியேயமூர்த்தியினது தன்மை. அத்தன்மை யழுகையாலெழுமானால், அது பரப்பிரயோஜனத்ததாம். எமதப்பன் ஞானசம்பந்தனமுதருளியதை "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்-பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத" என்று விளக்கினார் பெரியோர். இதுபோற கொள்ளாக்காற் றாமரைக்கிழவன் மங்கையோர் பங்கனைத் தொழுதிடல் ஸம்பாவிதமோ? மங்கைபாகனழுதபோது மங்கையேனோ அழாளாயினள்? தியானமார்க்கத்தி லுபாசிக்

கின்றவர்களுக்கு வெளிப்படுந் தியேயவஸ்துவை "ఉమాసహాయం పరమేశ్వరం ప్రభుం-త్రిలోచనం నీలకంఠం ప్రశాంతం । ధ్యాత్వా ముని ర్గచ్ఛతి భూతయోనిం - సమస్తసాక్షిం తమసః పరస్తాత్" என்று கைவல்ய சுருதி அடையாளமிட்டுக் கூறியது. "குவளைக்கண்ணி கூறன்காண்க - அவளுந்தானுமுடனே காண்க - பரமானந்தப் பழங்கடலதுவே" என்று ஸ்ரீவாசகத் திருமுறையு மினிது பிரகாசப்படுத்தியது. இவ்வதிசயப்பாடு போதர வெளிவந்த காசிகாண்டத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு கபோதியுரை பகர்ந்தகண்பரினியேனுங் கண்டிறந்து பார்த்துக் கலுழ்ந்தன்மை யொழிந்து சுகிப்பாராக. இன்னுமிவரது அழுகைப்பொருளைக்கேட்டால், பின் வெண்பாவாலதனைத் தவிர்க்கலாம்

> "அழுதா னுருத்திர னென்றுயமா லின்றுன்ப
> பழுதா லிரங்குதலும் பண்பாம் - அழுதானே
> வேறொருத்தன் பெண்டை விரும்பி யிடுகாட்டில்
> மாறுரைத்தாய் நீயே மதி"

என்னு மிதனை யாம் செய்த "சிவதத்வசிந்தாமணியிற்" காண்க. இந்த நூல் பிள்ளைப்பெருமாளையங்கார் செய்த "பரப்பிரம விவேகத்தை" யழித்த பாசுபதாஸ்திரமென்றறிக.

இன்னுங் கொஞ்சமுரைக்கின்றோம். சிவனழுதது தன் பொருட்டழுகையாலல், அது அவருக்குக் குறைவு தியேயராகத் தியானத்தி லுதித்தவர்க்குத் தன் பொருட்டழுகை செல்லாது பிறர்பொருட்டான அழுகை அதுவென்லே சிறக்கும். அழுகை பிள்ளையழுதபோது தாய் கண்டிரங்குதலும், தாயே தனது துன்பத்தாலழுதலுமென இருவகைத்து ஆண்டெம் பெருமானழுதது பிள்ளைநோய் கண்டு தாயழுதது போலாம். பிரமன் சிருட்டித்தொழில் தனக்குக் கற்பிக்கவே சிவனைத் தியானித்தனன். இன்னுஞ் சிருட்டி தொலையவில்லையே. உயிர்கள் மலவலிமேலிட்டாற் படுந்துன்ப மின்னு

மொழிந்த பாடலிலேயே யென்றிரங்கினமையே அவரதழுகை யாம். பிள்ளையினது நோயகண்டு தாயழுதது அஞ்ஞானத் தால். உயிர்களது மலவலிநோக்கிச் சிவனழுதது மெய்ஞ் ஞானத்தால். நித்திரை - அஞ்ஞான நித்திரை ஆநந்தநித்தி ரை யென்று விளங்குமாறுபோல இதனைக்கொள்ளத்தக்கது சிவபரஞ்சுடர் தனது திருககண்களினின்றுஞ் சிநதிய நீர்த்துளிகளே ருத்ராக்ஷமாக முளைத்தனவென்று ஜாபாலா திசுருதிகள் கூறுமுண்மையும் இதனை நிறுத்தும். விரிக்கிற் பெருகும்.

இனி யெமது உமாநாதன பிரமனது நெற்றியிலாவிர்ப் பவித்ததைச சிவாகள் ஜநநமபோலக்கொண் டிங்கிதமபேச வந்த இழிவுரைக்குஞ் சிறிதிறை தநதொழிப்பாம். இவர கா டடிய பாடலகளில, பிரமனது புருமத்யஸ்தானததில, (அ வன தியானித்தபோது) கருணையங்கடல குறுநகை கோ டடி மங்கைபங்கனயத் தோன்றினன் என்று வெளிபபடை யாகத் தியேயவஸ்துவினிலக்கணததை இனிது போதிததிரு க்கவும், இவர் அநயதாகிரகித்தது அவற்றின் பொருள்விளங் காத காரணமேயாம. இவரது மதத்தில் தியேயவஸ்துவினி லக்கணம் பெறபபட்டவாறில்லை நாராயணோபநிஷத்து இவரது விஷ்ணுவை "నారాయణపరోధ్యాతా" என்று சிறபபு த்திவிட்டது. சிவனைத் தியானிக்கின்றவன் என்பதே அதன் பொருளாம. காசிகாண்டம பிரமனைக்கூறியவாறு நாராய ணோபநிஷத்து விஷ்ணுவைக் கூறிவிட்டது. தியாதாக்க ளது ஜநநமரணதுஸ்தரங்களைப போக்க வெழுந தியேய வஸ்துவினது ஆவிர்ப்பவநதைபு மோர் ஜநநமென்று துணி ந்த பண்டிதரது மதகைக்கு நாராயணனே கூலிகொடுக்கத் தக்கவன். மலவலிகொண்டு பிறக்குமோர் ஜீவன் கருணையங் கடலாய்ப் பிறக்குமோ? குறுநகைகோட்டிப் பிறக்குமோ? மங்கைபங்கனய்ப் பிறக்குமோ? பிரமனது தியானஸ்தா னத்தில் தியேயமூர்த்தியாய்ப் பிறக்குமோ? தாமரைக்கிழ

ன் தொழுதுவாழ்த்திட பிறக்குமோ? இவ்வாறு விய வஸ்தையுண்டாக விசாரியாததோஷமே நமதன்பரை அஸங் காத்மவாதத்திலிழிந்து அலலலுறச செய்தது இனியே னும் சிரதேடிக் கொள்வாராக

இவரெபபடியாவது இராமனைக் கர்மயோநிய பாக்கி ருர். அது முடியாதகாரியம ஏனெனின், "மாதாவுதரததிற் றங் கியுதித்த இராமகிருஷ்ணாதி அவதாரங்கள்போன்றதன்று பிரம னது நெற்றியிலெழுந்த உருத்திரமூர்த்தம் எனில, விஷ்ணுவினது திருவவதாரங்கள்யாவமே அயோநிஜம் - அப்ராகருதம்-சுக்லசுரோ ணித சமபநதமன்று, இச்சாமாத்திரையானெழுந்த ஜோதிசொரூபம்" என்று பிரசங்கித்துச சில பிரமாணங்தேடியொப்படைத்தார அந்தப் பிரமாணங்களைப் பின விசாரிபபோம். இபபோது இவரது நியாயாபாசவன்மையைச் சிறிதெடுத்துக் காட்டுவா ம். சிவன் பிரமனது நெற்றியிற் ருேன்றியது இராமகிருஷ் ணாதிகள் கர்பபயோநிசம்பந்தம பெற்றதுபோலாமோவெ ன்று இவரெயாசங்கை யெழுபபிக்கொண்டு இராமகிருஷ்ணர் கள் அயோநிஜர்கள், அவர்கள் அபிராகிருததேகிகள் என்று கூறி மகிழ்ந்தார. முதலிலே தோஷங்கூறிய சிவனுரது அவ தாரத்தை இபபோது கௌரவமாக வொப்பியவாறெனனே? "ஸ்ரீராமபிரான கோசலாதேவியின நெற்றியில் அவதரிததனன்" என்று இவர் பிரசங்கித்திருக்கிறுர கோசலையின முகததிற பிறந்தான் இராமனென்று தேடிய நவீனசித்தாநதம் நிலைக் கலேயன்ருே பிரமன முகததிற் பிறந்த சிவனை இபபோது லேசாக விடடுவிட்டார்? இவரது பாரபடசமான சமாதான த்தால் எமது சிவபரனுக்குடாமே இவரேறறிய தோஷமிறங் கியதே யன்றி இவரது தெய்வத்துக்கு இவரேறறிய கௌரவம் நிலைபெறவிலலை. இராமனைபபற்றிய நூல இராமாயணம். இதில, இராமனுக்குக கர்பபயோநிஸமபந்தங்கள் கண்டா கோஷமாய முழங்கப்படுகினறன. பிரதானமாகிய வானமீக த்தின மாத்திரமேயன்றி வேறு ராமாயணங்களிலும், நம தன்பருக்குப் பிராணபதமாகிய தமிழிராமாயணத்திலும்

(கம்பராமாயணத்திலும்) இராமன் பிறந்தவிடம் கோசலை யின் நெற்றியென்று காணப்படவில்லை. இத்தனை நூல்களின் கண்ணையும் மறைத்துவிட்டு நமதன்பர் கண்கட்டிவித்தை காட்டியது எங்ஙனே நிலைக்கும்? சிவன் பிரமனது நெற்றி யிற்றோன்றினன். இராமன் தசரதனது நெற்றியிலேன் பிற க்கவில்லை? பெட்டைமுகத்தைத் தேடிக்கொண்டது பெரு மையோ? பிரமன் முகத்திற் பிறந்த சிவன் அவனுக்கு அநுக்ரகம் பண்ணிவிட்டு உடனே மறைந்தனன். இராமன் உடனே மறையாமல் ஆகாரம் - நித்திரை - மைதுனங்களைத் தாங்கி யநுபவித்து, சத்ருப்பயத்தாற் குரங்குகள் காலையெல் லாங்கட்டிக்கொண்டழுது காடுமேடெல்லாந் திரிந்து சரயு நதியில் வீழ்ந்திறந்து முடிவுபெற்றவரென்னை? இதற்கு மத்தியில், பூதங்கொண்டுவந்து கொடுத்த பாயசத்தை போ குங் கதியென்னை? நமதன்பரது பிரசங்கத்தால் இராமன் முக்யமாயக் கோசலை மகனுகிறான்; அவள் கணவனை யநு சரித்து தாசரதியுமாகிறான். இவ்விருவர் மகனுவதோடு பூதத் தின்றிருமகனுமாகின்றான், இவனிடத்தில், செரிக்காதவிஷய ங்களையெல்லா மேற்றிச் சிந்துபாடினுல் யாவ ரங்கீகரிப்பவர்? இதனுல் சிவனுடைய தோற்றம் போன்றது இராமனது தோற் றம் என்ற வழுவாசகம் ஜீவிக்க இடம் பெறுதழிந்தது. இரா மனுக்குப் பெட்டைமுகத்தைக் காட்டியதுபோலக் கிருஷ்ண னுக்கு மொன்று காட்டாமல் வாய்பொத்திக்கொண்டாரி தெனகொலோ? கிருஷ்ணன் கர்ப்பயோநிகளைப் பெற்றுப் பிற ந்திடல் தோஷகரஸ்தமாகாதுபோலும். சிவன் பிரமன் முகத் திற் றேவியோடாவிர்ப்பவித்ததுபோல இராமனுந் தேவி யோடு கோசலை முகத்தில் ஏன் ஆவிர்ப்பவிக்கவில்லை? இரா மனது தேவி யார் முகத்திலாவிர்ப்பவித்தனள்? அவளுக்குக் கர்ப்பயோநிசம்பந்தங்கள் தோஷக்ரஸ்தமாகாதுபோலும். இப்படியே விஷ்ணுவினது ஏனையவதாரங்களின் கர்ப்பயோ நிஸம்பந்தங்களுக்கும் நமதன்பர் கதி காட்டுவாராக.

இனி இவர் தேடியபிரமாணங்களைச் சிறிது ஆராய் வாம். இராமனது அவதாரம் அயோநிஜம்-அப்ராகிருதம்-சுக்லசுரோணிதசம்பந்தமன்று - சோதிசொரூபம என்று கூறிய பிரமாணங்கள் இந்லாடியிற போந்தனவாம

"இராமபரத்வ நிர்ணயோபநிஷத்து
இராம ப்ரஹ்மோபநிஷத்து
ப்ரஹ்ம நிர்ணயோபநிஷத்து
இராமதாரக ப்ரஹ்மோபநிஷத்து
தத்வ நிர்ணயோபநிஷத்து
பாரமார்த்தோபநிஷத்து
மந்திரஸாரப் பிரகரணம்
சதுர்வேதசிகை
இராமதாரகோபநிஷத்து."

என்று கோவையாக அசத்வாக்கியங்களைத் திரட்டி இவருக்கு எழுதிக்கொடுத்தவனயாவனே அறியேம. அவன் வார்த்தையை நமபி இவர் மதிமோசம போயினர். உபநிஷத்துக்கள் நூற்றெட்டென்று வைதிகாகள யாவருமொப்பியிருக்கிறாகள. அந்த நூற்றெட்டுபநிஷத்தும தெலுங்கு-கிரந்தம்-நாகரமென்னுமெழுத்துககளில அச்சிடடபபட்டிருககின்றது. இந்த வுபநிஷத்துக்கோவையில் பூாவபட்சி யெழுதிக்கொண்ட வுபநிஷத்திலொன்றுங்காணேம. இவரொருகால ஆயிரத்தெட்டுபநிஷத்துக்கோவையில் அவை யிருக்கின்றனவென்று வாதிக்கலாம. மத்வர்கள் "தத்த்தம காட்டராயணே - தத்த்தம் மாட்டராயணே" என்று தஙகள் நூல்களில எழுதிககொண்டிருக்கிறாகள். அவைபோலவனவாகவே இவையுமொதுங்கும். ஆயிரத்தெட்டுபநிஷத்துக்களடங்கியஒருபநிஷத்து ஏட்டுப்பிரதி இப்போது கிடைக்குமா? ஒரு பிரதி மாத்வன் காட்டியதாகக் கொள்வோம். அதில், சைவ ஸ்மார்த்த வைஷ்ணவர்கள் கொண்டாடுமெ பெயாகளில்லாவிட்டால மாத்வனது பிரதி பொயயென்று தள்ளுவார்கள். இபபடியே தத்தமக்

குரிய உபநிஷத்தின் பெயர்கள் காணுவிடின், சைவன் காட்டிய பிரதியை மற்றையரும், ஸ்மார்த்தன் காட்டிய பிரதியை ஏனையோரும், வைஷ்ணவன் காட்டிய பிரதியைப் பிறரும் பிரக்ஷிப்தமென்றொதுக்குவார்கள். இவ்வெல்லாமதஸ்தருமொப்பக்கூடிய வொரேவிதமான (ஆயிரத்தெட்டுபநிஷத்துக்களடங்கிய) பிரதிகளைத் தனித்தனி யொவ்வொருவருங் காட்டிச் சபையேறமுடியாது. ஸர்வஸம்ம பிரதிபந்நமான உபநிஷத்துக் கோவையிற் காட்டமுடியாத பொய்யுபநிஷத்துப் பெயர்களை இந்தப் பூர்வபக்ஷியார் பிரஸ்தாபித்து விட்டதனாலேயே எம்மனோர் பிரமியார்கள். இராமனுக்கு ஏற்றமுமுண்டாகாது. பூர்வபக்ஷியினது தலைவனையும் நிமிரப்போகிறதில்லை. நூற்றெட்டுபநிஷத்துக்கோவையோ ஸர்வஸம்மபிரதிபந்நமாய் வைதிகர்யாவரிடத்துங் காணப்பட்டுப் பூஜ்யமாய் வழங்கப்பட்டு வருகின்றது. இதில், "இராமதாபநியுபநிஷத்து - இராமரஹஸ்யோபநிஷத்து" என்று இராமநாமாங்கிதத்தோடு இரண்டுபநிஷத்துக்கள் பிரகாசிக்கின்றன. இன்னும் வைஷ்ணவோபநிஷத்துக்கள் பல இருக்கின்றன. இவற்றுளொன்றிலேனும் இராமன் கோசலையின் நெற்றியிற் பிறந்தானென்று பொய்யுபதேசம் செய்யத்தில்லை. அன்றியும் உபநிஷத்துக்களுக்குப் பொருளுரைக்கவேண்டியது உபப்ருஹ்மணங்களைக்கொண்டு. இவருதரித்த உபநிஷத்துக்களுக்கு உபப்ருஹ்மணமான புராணேதிகாசங்கள் யாவை? ஒரு புராணத்திலும், இதிகாசமாகிய பாரதராமாயணங்களிலும் பெறப்படாத கோசலை நெற்றியை இராமனுக்குப் பிறப்பிடமாகப் பொய்யுரைபுனைந்து பொங்கிவழிந்த பூர்வபக்ஷி வித்வசபைகளி லினி யெப்படித் தலைகாட்டுவாரோ தெரியாது. இராமனுக்கு அதிஷ்டானமாகிய விஷ்ணுவை வேதமானது "వాసుదేవః పరః ప్రకృతిః" என்றும், புராணமானது "ప్రకృతిః పరమో విష్ణుః" என்றும் பண்டிதபாமரரஞ்ஜிதமாய்க் கூறியிருக்கும்பகுதிகளை மறுப்பா

ரில்லை. பிரத்யக்ஷசுருதியாதிகள் விஷ்ணுவைப் பிரகிருதி யென்றும், "யோऽஜநார்த்தந:" என்றும் பிரகாசப்படுத்தியதுணர்ந்தவர்கள் இராமகிருஷ்ணுதிகளை அப்பிராகிருதவிக்ரகங்கள், சுக்கிலசுரோணித பரிணாமதேகமெய்தாத ஜோதிசொரூபர்கள் என்று எங்ஙனே ஸ்தாபிக்கத்துணிவார்கள்?

இனிச் சிவபரஞ்சுடரை வேதாதிகள் "அஸம்ப₄வம்" என்றும், "அஜாதஶத்ரும்" என்றும் பிரகாசப்படுத்தின. சுவேதாசுவதரம் "நதஸ்ய கஶ்சித்பதிரஸ்தி லோகே" என்று தொடங்கிச் சிவனுரது பிறப்பின்மை முதலிய பதிதாமத்தை நன்குபரிஷ்கரித்தன. ஆனெரோட்சிகளெண்ணிலவேனும ஸ்ரீ காளமேகப்புலவர் "பிறப்பிறப்பிலே" என்று சிவனுருக்குஞ் சிட்டுக்குருவிக்கும் ஸாமயாதிசயங்கூறிக் களிப்பித்தனர். சிவனுருக்குப் பிறப்பு-இறப்பு இல்லையென்றும், சிட்டுக்குருவிக்குப் பிறப்பு இறவாணத்திலென்றும் பொருள்விளங்கவமைத்த அருமையை அவர் விஷ்ணுவினிடம் ஸமாதித்திருந்தால் நம தன்பரைக் கையிற பிடிக்கலாமா? இனி விஷ்ணுவின் கதியைப் பராங்குசமல்லையதேவரென்னும் பண்டிதர் பின்வருமாறு கூறுகின்றார்.

"பிறப்புண்டென்பதற்கு ஸ்ரீஜயந்திசாட்சி, பெருஞ்சமுசாரமுண்டென்பதற்கு மறப்பில சீதைசாட்சி மரணமுண்டென்பதற்கு வனவேடன சாட்சியுண்டிதுவாய்மையே" என்னுமிதனை மறுக்க யார்தரம்? சிவனர் பிரமனமுகத்தி லாவிர்ப்பவித்ததைக் காமாதீனமான வொருபிறப்பு என்று கொண்டால், அந்தப் பிறப்புக்கு இறப்புக்கூறவேண்டும். அவர் செத்த கதை கேட்டிருந்தால வாய்திறக்கட்டும். இராமகிருஷ்ணுதிகள் செத்தகதைகள் ஜகத்பிரஸித்தம. நரசிங்கம் சரபத்தாலழிந்ததுபோல மீன-ஆமை-பன்றியாதி அவதாரங்களும் கணபதி-சுப்பிரமணியர்-பைரவர் முதலிய சிவஸூநுக்களாலழிந்தன. (சரபத்தையழிக்க நமதன்பர் கண்டபேரண்டத்தைத் தேடியதுபோல மத்ஸ்யாதிகளையழித்த சிவமூர்த்

தங்களுக்கும் இடர்விளைக்கத்தக்க விஷ்ணுஅவதாரங்களை யேனோதேடி யொப்படைக்காராயினர்? நர்சிங்கத்தினை னேலை யுரித்துத் தரித்ததுபோல மீனினது கண்ணைப் பிடுங்கியும், ஆமையினது ஓட்டைப்பறித்தும், பன்றியினது கொம்பையுடைத்தும், திரிவிக்கிரமனது முதுகெலும்பை முறித்தும் சிவனார்தரித்திருக்கும் அடையாளங்களைக் கண்டேயன்றோ "ഏകംവിഷ്ണുമയംജഗത്" என்று மேலோர் துதித்தனர்.

இதனையே இரட்டையர்கள் தமது தெய்வீகவுலாவில "தண்ணென வேயாழிபுகுஞ் சோமுகனைச் செற்றிடுமீன-கண்ணையு கிராற்களைந்தவரார், கண்ணனார்-ஆமைவடிவந்தனினு மாதிவராகந்தனினு-மாமுதுகோட்டைக்கரத்தால வாங்கினரார், தூமறையும் பேசரிய சிமபுளாயப் போராடகனையடுங்-கேசரியை வளருகிரா றகிண்டவரார்" எனவும, "படிவினை முழுதளந்த மாயன முதுகெலுமபைச்செநீ-ரொழுகவே வாஙகினா வேறுணடோ" எனவுங்கூறிச சாஸநமபண்ணினாகள. இவைகளுக்குச கதி கூறவகையறியாத பூர்வபட்சியாருககு இனனுமொன்று சொலலுகிறோம்.

எனனெனின, பிறந்து சாகிற வாழ்வினையுடைய விஷ்ணுவின்கதியை எமது பராங்குசயலலையதேவா பினனு முரைத்திருக்கினறனா. விஷ்ணுவை யாரோ ஸபஹாரமூாத்தி யென்றாகளாம. அது சகியாமல "குறறததால் முனபெறற பத்துப்பிறவியினுங் கூற்றன்வநது-வநது தன்னுயிரை, மிகப்-பறறிக கொண்டேபோகும் அரியே கொலவானென்றால பதியிலயாரிசழார் குண சிலனே" என்று கூறிய அருமையே அதுவாம. இவைகளை யோசிக்கும ஸாதுக்கள் பிரமனது நெற்றியிற் றோனறியது சிவனுக்குப் பிறபபாகாதோ என்று தொடுத்த வாததகின் முகத்தை இனிச் சுட்டெரிப்பது அருமையோ? சிவனார் பிரமனதுநெற்றியி லாவிர்ப்பவித்தா ரென்பதனுண்மையை இனிச் சிறிதுவிளக்குவாம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

ஆதித்யபுராணம் "త్వామేవపుత్రమిచ్ఛామి. త్వాంయామిసదృశంసుతం. త్వన్మాయామోహితశ్శంభో-నవేద్మిత్వాంపరంశివం" என்னும் வசனத்தால், ஹேபரமசிவா! தேவரீர் எனக்குப் புத்திரராக வரக்கடவீர் என்று பிரார்த்தித்து, உமமுடைய மாயையால் மோகிதனாகியபான உம்மைப் பரமசிவனென்று தெரிந்துகொள்ளாமலிருக்கிறேன் என்று பிரமன் விண்ணப்பஞ் செய்துகொண்டானென்று பெறப்பட்டது அதற்கு "అహంతేనభవతా-పుత్రస్సపితామహ॥" என்னும் வசனத்தால உனக்கு நான் எனது அம்சத்தால புத்திரனாய்வருகிறேன் என்று பரமசிவன் சொன்னதாகவெளிப்பட்டது. அன்றியும், "తపస్తప్త్వాపరం-నకించిత్ప్రత్యపద్యత, గతేబహుతిథేకాలే-స్వయంభూఃక్రోధమూర్ఛితః, ప్రాణాత్మకసముద్భూతో-లలాటేబ్రహ్మణోహరః" என்னும் ஸ்காந்த வசனத்தால பிரமன் அநேககாலந் தவஞ்செய்தும் அவனுடையதவம பலியாமையால் கோபத்தால மூர்ச்சித்தான், அப்போது பிராணாத்மகராகிய ஹரன என்னும உருத்திரமூர்த்தி அவனுடையலலாடத்தில் ஆவிர்ப்பவித்தனா என்றும், "లలాటేచింతయేద్బ్రహ్మ-తపస్యుగ్రేవ్యవస్థితః, తల్లలాటాదభూచ్ఛంభుః-సృష్ట్యర్థం తన్మమాషితం" என்னும வசனத்தால் மகத்தான தவத்தையுடையவாகள முகத்திற்குமேலாயிருக்கிற லலாடஸ்தானத்தில பிரமத்தைத் தியானிப்பாகள். அப்படிப்பட்ட தன்மையிற்சிறந்த பிரமனது நெற்றியினின்றும ஸ்ருஷ்டியின பொருட்டு உருத்திரமூர்த்தி ஆவிர்ப்பவித்தனர் என்றும வெளிப்பட்டது. இந்தப்பிரமாணங்களைப் பரியாலோசிகையில பிரமனிடமபிறந்த உருத்திரா குணருத்ரரே எனவும, அவரும பிரமனுக்கு அநுக்ரஹார்த்தமே யாவிர்ப்பவித்தனரெனவும, அவருக்கும் துரீய சிவனுக்கும் நாமரூபவொற்றுமைகளாற பேதங்காணாமையால் அவரையே சிவனாகக்கொண்டு சிலவிடங்களில வேதாதிகள் கூறுமெனவும், பிரம விஷ்ணுவாதிகளும் அவரையாச்சிரயிப்பதுகொண்டு அவரையதிஷ்டித்துவிளங்கும் ஸ்ரீபர

மேசுவரப் பிரஸாதத்தை யடைவதுண்டாகையால், அந்தக் குணருத்ரோபாஸ்திக்கு அதிகமாகப பிரம நாராணயர்களுபாஸ்தியை வைதிகோததமர்கள் கொள்ளமாட்டார்களெனவும் அறியத்தக்கது. இவ்வுண்மைகளாலும், "பிறப்பில் பெருமானைப்-பின்றாழ்சடையானை" எனவும, "பித்தரோழியேன் பிறவாவுருவானை" எனவும போந்த சைவத்திருவாளர்க ளமுதவாக்காலும சிவனா பிறநதாரென்னும் வாதம் இறந்துவிட்டதாகையால "செததுப் பிறக்கின்ற தெயவங்கண்மணவாளசெங்கிரையாம்பருளே" என்பதைச சிந்தித்து இனியேனுங் குணபபட்டு வாழவாராக. விரிககிற் பெருகும்.

நமதன்பர் இம்மட்டிலமையாமல் பகவத்கீதையி லிறங்கினர். ஷெ கீதை எ-வது அத்தியாயம உசு வது சுலோகத்தில் "பிரபஞ்சாதிதனுயும் ஐகத்ரக்ஷணார்த்தம லீலையினலே பிரகாசிக்கின்ற பலவித ரூபமுடையவனுயும சுத்த சததுவ சொரூபனுயும இருக்கின்ற என்னைக் கருமத்தினுலுண்டான பாஞ்ச பௌதிக தேகத்தையுடையவனுயும தேவதைகளுக்குச சமானனுயும் நினைக்கின்றார்கள்" என்று கண்ணன் சொனனதாகப பெறப்பட்டிருக்கிறதாம. இதனை ஸ்ரீதரஸ்வாமிகள வியாககியானத்திற்பார்க்கும்படியும நமது பூாவபட்சியார் தெரிவிககிறார். அன்றியும, கூ-வது அத்தியாயம சக-வது சுலோகத்தில் "என்னுடைய சிரேஷ்டமான ரூபததை அறியாத மூடாகள் ஆத்மகோடிகளுக்கு ஏகநாயகனுயிருககிற என்னை மனுஷ்யதேகத்தை யெடுத்திருப்பவனுக மதிககின்றார்கள" என்று கண்ணன் கூறியதாகப் பெறப்பட்டிருககிறதாம். இதனையும் நமதன்பரெழுதிக்காட்டிக் கண்ணன் பரமாத்மாவென்று ஸ்தாபிககிறார். எடுத்துககொண்ட சுலோகங்களுக்கு இவரெழுதியவுரை துரைசாமிமூப்பனா வெளியிட்ட "பகவத்கீதை வசனம்" என்னுஞ் சுவடியிலிருநது எடுததுக்கொண்டதெனவறிக. இந்தமூப்பனர் தமது சிவத்ரோகத்தை ஷெ சுவடியில் விஸ்தாரமாய்ப் பரப்பியிருககிறார். அதனையுஞ் சமயம்வாய்த்தபோது விசாரியாமல்விடோம். அது நிறக.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஆஞ்சநேயராமவைபவபங்கம்.

நமதன்பரது இரண்டுவசனங்களுக்குங் கதிகூறுகின்றோம். பாரதத்திலொருகூறு கீதை, இந்தக்கீதையும் பாரதந்தான். இனிப்பாரதம், "జన్మకర్మతపోయోగా-స్తథాయోస్తవచ పుత్రకాః, తేభ్యోంగార్చిభ్యశ్శంభుః-త్వయార్చాయాంవిశేషతః" என்று கூறுகின்றது. இதில் வியாசரானவர் அசுவத்தாமரை நோக்கி, சேளும அசுவத்தாமரே! கிருஷ்ணார்ஜுனர்களுக்கு எவ்வாறு உற்பத்தி-காமம-தபசு-யோகங்கள் கிடைத்திருக்கின்றனவோ, அவ்வாறே உமக்குங்கிடைத்திருக்கின்றன. அந்தக் கிருஷ்ணார்ஜுனர்கள் சிவலிங்கத்தினிடமாகப் பரமசிவாராதனஞ் செய்கின்றார்கள். நீர் விக்கிரகவடிவத்தில் ஆராதனஞ்செய்கின்றீர் என்று கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதனைப் பரிஷ்கரிக்கையில் கிருஷ்ணருக்கு ஜந்மம் காமம் தபசுகள்-கேட்கப்பட்டன. இப்படியே அசுவத்தாமார்ஜுனர்களுக்குங் கேட்கப்பட்டன. இவை ஜீவதருமம். இவைகளையுடையவர்கள் ஜீவர்கள். மூன்று ஜீவர்களை யோரினப்படுத்திக் கூறினமையால் ஒருவரிலொருவர் உயர்ந்தவரும் தாழ்ந்தவருமாகார். ஜந்ம கர்ம தபசுகளிலிவரொத்தவராயினும் சிவாராதனையில் விக்ரகபூஜைசெய்யும் அசுவத்தாமரை நோக்க இலிங்க பூஜை செய்யும் கிருஷ்ணார்ஜுனர்கள் உயர்ந்தவர்களாயினது சத்தியம். ஜந்மகர்மங்களை யொப்பிய இந்தவசனத்துக்கு ஒருகதி தேடாமல், இதனோடுமுரண்படவெறுமனே ஏகதேசவசனங்களை யுதகரிப்பதி லென்னபயன்? பாரதமொன்றிலேதானே கிருஷ்ணனை மனுஷ்யனல்லவென்றும், கர்மாதீனமான மனுஷ்யனென்றுங் கூறியிருத்தலுக்கு இப்போது கதிதேடவேண்டியதே முக்யம். இன்னும், பாரதம் "నైవస్వం[illegible] మోహితా మమమాయయా, తపోహంస్వాత్మనోమూలం - జ్ఞాత[illegible]నూన్యత యాసితం" என்று கூறுகின்றது. இதில், கிருஷ்ணமூர்த்தி அப்படிப்பட்ட தெய்வத்தை எனதுமாயையால் மோகித்திருக்கிற பாஷண்டிகள் பார்க்கவறியார்கள். ஆகையால்,

என்னுத்மாவுக்கு மூலகாரணரென்று சகலருக்குந் தெரியப்படுத்துகிறவனாக அந்தசிவனை நான் பூஜிக்கின்றேன் என்று சொன்னதாக வெளிப்படுகின்றது. சகலருந் தெரியாமையால் எனக்கு அந்தராத்மா கிடையாதெனறும், நானே அந்தராத்மாவெனறும் பிராந்தியடைந்திருப்பதால், அதை நிவர்த்திக்கும்பொருட்டே நான் சிவனை என்னுத்மாவென்று பிரசித்தப்படுத்துகிறேன் என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் பரிஷ்காரப்படுத்திய இந்த வசனத்துக்கு முன்னே நமதுபூர்வபக்ஷி தேடியவசனங்கள் நிலைபெறுமாறு யாங்ஙனம்? ஆயின், கீதாவசனங்களுக்குப் போக்கென்னையெனின், கீதை பீஷ்மபர்வத்திலுள்ளது. இந்தக்கீதையை நாம் சத்தியமாய்க் கொண்டால், பீஷ்மத்துரோணுதிகளும் சத்தியம். துரோணத்தில் கிருஷ்ணனும், அர்ஜுனனும் கைலாசயாத்திரைசெய்தகதை வியக்தம். யாத்திரையில், பசியால் வருந்திய அர்ஜுனனுக்குக் கிருஷ்ணர் சிலகிழங்குகளையுங் கனிகளையுங் கொண்டுவந்து கொடுத்தார். அதற்கு அர்ஜுனன் நான் பூஜையைக் கொண்டுவரவில்லையே! பூஜையின்றி நான் எப்படி ஆகாரங்கொள்வது என்று மறுத்தான். அதனை மறுக்கவஞ்சிய கிருஷ்ணர் சிவபூஜை பாவனையேயாகையால், என்னிடத்தில் சிவபாவனை செய்து பூஜிக்கக்கடவாயென்று கூறினார். அந்தப்படியே கிருஷ்ணரிடத்திற் சிவபூஜை செய்தான் அர்ஜுனன். இப்படியே சங்கரனும் சிவபூஜை செய்திருந்தான். இவைகளுக்குக் கதியென்னை? அன்றியும், கண்ணன் "ఈశ్వరస్సర్వభూతానాం హృద్దేశేஉర్జునతిష్ఠతి, భ్రామయన్సర్వభూతాని యంత్రారూఢాని మాయయా. తమేవశరణంగచ్ఛ సర్వభావేన భారత, తత్ప్రసాదాత్పరాం శాంతిం స్థానంప్రాప్స్యసిశాశ్వతం" என்று கீதையிலேயே பிரகாசப் படுத்தியிருக்கின்றனர். இதில், தனக்கு வேறுயுள்ள ஈசுவரனைப் பிரஸ்தாபித்து, அர்ஜுனா! நீ அந்தப் பரமபுருஷனையே சரணடையக்கடவாய். அவருடைய பிரஸாதத்தால் சாசுவதமான (அவருடைய திருவடிப் பேறுகிய)

மோக்ஷஸ்தானங் கைகூடுமென்று உபதேசித்ததைப் பூர்வபட்சிகள் கிளுஷ்டகல்பனம் பண்ணிக் கேடுசூழப்பெறுகின்றார்கள். தச்சப்தத்தினாலே பட்டாக்கையிட்டதனுக் ஈசுவரனை விளக்கியதுமாத்திரமேயன்றி "ఉత్తమః పురుషస్త్వన్యః" என்பதில், உத்தமனும் புருஷனுமாகிய அந்தப் பரமேசுவரனை "அந்ய:" என்று கூறித் தனக்குவேறானவரென்று பரிஷ்கரித்தனர். இவைகளையெல்லாம் யோசிக்கிறபோது பூர்வபட்சி தேடிய வசனங்கள் கண்ணனது ஸோஹம்பாவனையாற் கூறியவையென்பதே அமைவுடைத்து. வாமதேவரிஷி "யானே எல்லாமாயினேன்" என்றும், இந்திரன் "நானே பிராணனாயிருக்கிறேன்—நானே அறிவுமயமான ஆத்மாவாயிருக்கிறேன்" என்றுங் கூறியிருக்கிறார்கள். ஏனைய கீதாசாரியர்களும், பிரமன் ரிபு அநுமான் முதலியோரும் கண்ணனைப்போலவே ஸோகம்பாவனை மேற்கொண்டு தாமே பரமாத்மாவென்று கூறுகின்றார்கள். அநுமானது கீதையைத் தெலுங்கர் "கோதிகீத" (కోతిగీత) என்கிறார்கள். சைவவைஷ்ணவ மரியாதையை நாம் பர்யாலோசிப்போம். இவர்கள் பெரியோர்களைக் கண்டால் "ஸ்வாமீ" என்று அழைப்பார்கள். ஐயங்கார்சுவாமிகள் ஒருவருக்கொருவர் "பெருமாளே" என்று அழைத்து வந்திக்கின்றார்கள். சாம்பவர்கள் சிவனடியார்களைச் சிவனென்றே வழிபட்டு உய்யும்வழி தேடுகிறார்கள்-கண்ணன். கீதாசாரியனாயிருந்து செய்யு முபதேசஸந்தர்ப்பத்தில் தன்னைச் சிவபாவனையாற் கிரகித்துத் தானே ஈசுவரனென்றுகூறியது சைவசித்தாந்த முடிவாயினதறிக. இந்த ஸோஹம்பாவனைலட்சணம் வைஷ்ணவர்களுக்கும், மாயாவாதிகளுக்குந் தெரியாது. தெரிந்திருந்தால் இராமாநுஜாசாரியரும், சங்கராசாரியரும் "స్థానం ప్రాప్స్యసి శాశ్వతం" என்றபகுதியை ஒருவர்க்கொருவர் மாறுபட்ட நிலைமையுடையவர்களாய்க் கெடுத்திருக்கமாட்டார்கள். இனி ஸோஹம்பாவனை இன்னதென்று பின்வரக்

லியத்தா லுணாத்துகிறோம். "கண்டவிவையல்லேனென்ற வன்று காணுக்-கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த, தொண்டினெடுமுளத்தவன்று னின்றகலப்பாலே - சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி, விணடகலு மலங்களெலாங் கருடதியானத்தின-விடமொழியுமதுபோல விமலதையு மடையும் பண்டை மறைகளு மதுநானானென்று பாவிக்கச்சொலலு மதிப் பாவகத்தைககாணே" என்னும இந்தவாய்மைதோன்ற வே கண்ணனும கீதையில "பச்யமே யோகமைச்வரம்" என்று கூறினர். ஈச்வரம=ஈசுவர ஸம்பந்தமான, மே=என்னுடைய, யோகம=ஐசுவரியயோகத்தை, பச்ய= நீபார்க்கக்கடவாய் என்று வெளிபபடுத்தியதுணாந்தவர்கள் ஈசுவர சம்பந்தமென்றதை ஈசுவரப்பிரஸாதத்தால அவ்வீசுவரனுகப பாவிக்கபபடுந்தன்மை யென்று தெளிவார்கள். இதுபற்றியே கண்ணனை ஈசுவரனென்றும, சிருஷ்டிமுதலிய சாவகர்த்ருத்வமுடையவனென்றும் கீதைமுழுதுங் கோஷிக்கு நிலைமையையுணாந்திடுவா பெரியோரென்க. சுருதிஸூக்திமாலையில, ஸ்ரீ ஹரதத்தசுவாமிகள் இதனை நனகுபரிஷ்கரித்தனரெனக.

இனி நமதனபா வாமனபுராணம-பிரமாண்டபுராணம-கௌதம சங்கிதை-ஸஹஸ்ர நாமம-தமிழ்க்கூர்மபுராண முதலியவைகளைப் பிரஸ்தாபித்து, அவை விஷ்ணுவினது பிறப்பை அப்பிராகருதம-அயோநிஜம-சுக்ல சுரோணிதமானதன்று என்று கோஷிப்பதாகச் சாதித்தார். இதுகாறும் யாம செய்திருக்கும் பிரசங்கங் கேட்டவர்களுக்கு ஈண்டிவர் காட்டிய பிரமாணங்களில் ஸத்யபுத்தியுண்டாகாதென்க. இவரது பிரமாணங்களில், முதலெடுத்துக்கொண்ட வாமனபுராணம் விஷ்ணுவுக்குத் தசவித அவதாரங்களைப் பிரதிபாதிக்கிறதாம். அவ்வவதாரம் அம்சாவதாரம்-அம்சாம்சாவதாரம்-ஆவேசாவதாரம்-பூரணுவதாரம்-பூரணதமா அவதாரம்-வியூகாவதாரம்-விபவாவதாரம்-அர்ச்சாவதாரம்-விர்த்தியவதாரம்-பூரண

தாரவதாரம என்பவைகளாம். இவ்வெல்லா அவதாரங்களும் அயோநிஜம்-அப்பிராக்ருதம் என்று பிரஸித்திபெய்தினவாம். இனி யிவ்வவதாரங்கள் அப்பிராக்ருதங்களாகுமானால், யாவும ஸமமரியாதையுடையனவாதல் வேண்டுமே. இவர் பூரணதமாவதாரமெனக் கொண்டராமனும, ஆவேசாவதாரமெனக் கொண்ட பரசுராமனும ஒருவருக்கொருவர் சண்டைபிடித்து, பரசுராமனை இராமனுஜைக்கவேண்டியவாவசியகமில்லை. இவ்வுணைததராமனையும, சாலுவயுத்தத்திலுதைபட்ட கிருஷ்ணனையும பூரணதமாவதார மெனக்கொணட இவர் மீன்-ஆமை-பன்றிமுதலியவைகளைப பூரணாவதாரமெனறு கொஞ்சிமகிழ்கின்றார். இந்த மிருகாவதாரங்களிற் றணிந்தனவாகப பரசுராமாதி மனுஷ்யாவதாரஙகளைக் கொணடாடிக் கொடிபோடுகிறார். அனறியும, பூரணத்துக்குமேல தாரதமங்களை யெடுபபி, பூரணதமாவதாரம-பூரணதராவதாரம எனறு ஆபாசமழை பொழிகின்றார். தாரதம பாவஙகள குணத்தின் மேலேறத்தக்கன. வஸ்துவின்மே லேறமாட்டா. மந்தம-மந்தரம், தீவ்ரம-தீவ்ரதரம எனபனபோற்கொண்டு தெளிக. சூரியனை ராம கிரகணகாலத்திற்பார்த்து, இது பூரணகிரகணம-முக்காலகிரகணம - அரைககிரகணம - காலகிரகணம்-வீசங்கிரகணம் என்று பிரஸ்தாபிக்கிறபோது அந்தப் பேதஙகள் ஸ்வரூபத்தின்பேரி லேறிவிளஙகுமே. சூரியனைக் கிரகணம ஸபர்சிக்கிறபோதுமாத்திரமே அதுசிறக்கும். அந்த ஸூரியன் பூமியில்வந்து பிறந்தானெனகையில,முழு ஸூரியனபிறந்தான்என்பது மாத்திரமேபொருந்தும. முக்கால்ஸூரியன் பிறந்தான எனறுகூறி அவமானபபடுவரோ அறிவிற் சிறந்தோர்?அதற்குமேல ஒன்றரைச் சூரியன் பிறந்தான-ஒனறேமுககாற் சூரியன பிறந்தான் எனறு கூறித தடுமாறிபபோவரோ தக்கோர்? தாரதமஙகள் பூரணாவதாரத்திறகு மேலிட்டனவாகப் பிரசங்கித்தது பகுத்தறியும் பணபிழந்தமையினா லென்றறிக. பூரணத்துக்கு மேல், தமாவதாரங்களாய்க் கொணடவர்களில், கிருஷ்ணன்

விஷ்ணுவினது கறுப்புமயிரொன்றின் அவதாரம என்று கூறிய வேதம-பாரதம என்பவைகளை அஸத்தென்று தள்ள இவரது வாமனபுராணவாக்கியம போதித்தலால், அவ்வாமனபுராணவாக்கியத்தை வைஷ்ணவர்கள முடைந்துகொண்ட அஸத்வாக்கியமென்றொதுக்குதலே சிஷ்டர்களபிமதமென்றுணர்க. நிற்க.

இவரது பிரமாணபுராணமு மிவரைத்தெருவிலேயே தியங்கவிட்டது. எங்ஙனமெனின், அந்த வாக்கியத்துக்கு "அரசனே விஷ்ணுவினது எல்லாவ வதாரங்களும் அயோநிஜம் என்று எவவண்ணம் முனிவர்கள் சொல்லுகின்றார்களோ, அவ்வண்ணமே உனது பாரியாளான சந்திரமதியும் தாமரைப்பூவில் உதித்தவள் என்று கூறுகின்றது" என்று அரிச்சந்திரனைப பார்த்துப் பிரமதேவர் சொன்னதாக இவரே பொருள்விரித்தார். இதில், விஷ்ணுவினது அயோநிஜத்வத்தோடு ஒத்த அயோநிஜையென்று சந்திரமதி கேட்கப்பட்டனள். விஷ்ணுவும, சந்திரமதியும அயோநிஜர்கள். அப்பிராகிருதர்கள-சுக்ல சுரோணித சம்பந்த மெய்தாதவர்கள். இவ்விருவருஞ் சமநிலைபெறுவார்களாலை, சந்திரமதியைக் காட்டிலும விஷ்ணுவுக்குண்டான ஆதிக்யம் யாது? இவரதுவாக்கியம விஷ்ணுவுக்கு ஜீவஸாம்யங் கூறினமையால, விஷ்ணுவைப் பரமாத்மாவென்று மாரடித்துக் கொள்ளு மிவரதுவாதம நிஷ்பலமாயினதறிக. இவரது விஷ்ணுவோடு பாஞ்சாலியுஞ் சேர்ந்து கணம்பெறத்தக்கவளா மென்றுணர்க. இவர் காட்டிய கௌதம சங்கிதையு மிவருக்கு உபகாரஞ் செய்திலது. எங்ஙனமெனின், இதில் கோசலையைப் பகவான் தனது யோகமாயையால் கர்ப்பவதியாகச் செய்தார், நாராயணனுக்குக் கர்ப்பவாசம் இடையாது என்று பொருள்விளங்குவதாகப் பூர்வபட்சியார் பிரசங்கித்தனர். உலகில மகான்கள் பலர் கர்ப்ப மெய்தாதவர்களுக்கு விபூதிபிரஸாதங் கொடுத்தலும்,

மஞ்சள் மந்திரித்துக்கொடுத்தலும், மந்திரசித்தியால்வீக்ஷித்து அநுக்கிரகித்தலு மாகிய யோகமாயைகளால் புத்திரஸந்தான முண்டாகச் செய்திடலநுபவஸித்தம். குந்திதேவி-மத்திராதேவிகளுக்குத் தூர்வாசமுனிவர் மஞ்சள்கொடுத்தருளிய யோகமாயையே யன்றோ புத்ரோற்பத்திக்குக் காரணமாய நின்றது? இதனால், அந்த ஸதிரீகளுக்குப் புருஷஸம்பர்க்க மில்லையென்னவாவது, பிறக்குஞ் சிசுக்களுக்குக் காமயோநிஸம்பந்தமும்-சுக்ல சுரோணித பரிணாமதேகமு மில்லையென்னவாவது வாதிடல ஸம்பாவிதமோ? அதவா அவையிலலாவிடினும், சந்திரமதியோடு ஸாம்யம் பெற்ற விஷ்ணுவவதாரங்கள் காமாதீன முடையனவாகவே பொதுங்குமியலபினவாயினவெனக் சந்திரமதி பாரபபானுக்கும், அவள் கொழுநன (அரிச்சந்திரன) பறையனுக்கும அடிமைப்பட்டார்கள். அவரினத்திற படிக்கப்பட்ட இராமன் (தனமனைவியை மீட்டுக்கொடுக்கவேண்டிக)குரங்குகளவயப்பட்டும், சீதை இராவணனவயப்பட்டும வருந்தினார்கள். இன்னோ பட்டபாடுகள் தெயவதகுக்கே வெளிச்சம். இவ்விராமன பாயசத்தாறபிறந்தவனென்று எல்லா இராமயணங்களுங் கூறுகின்றன. இந்தப்பாயசத்தை யொரு பூதங்கொண்டு வந்து கோசலைக்குக் கொடுத்தது. இதலுல, அவளுடைய கர்ப்பம ஒரு பூதத்தின யோகமாயையா லுண்டாகியது என்றும் அந்தப் பூதத்தையே நமதனபாகாட்டிய கௌதமசங்கிதை பகவானென்று ஒருகால சொல்லியிருந்தாலு மிருக்கலாமென்றும விவேகிகள தீர்மானிக்கின்றனர். இவைகளுக்குக் கதிதேடுவதோடு இவரது விஷ்ணுஸஹஸ்ரநாமம விஷ்ணுவைக் கௌரவித்தது உபசாரவழக்கென்றுமறிந்து மயக்கொழிவாராக.

இதற்குமேலிவர் கம்பராமாயணம-பாகவதமுதலியன இராமனுக்குக் காப்பவாஸாதிகளை வர்ணித்தது யாதென்று சங்கித்து, உலகியலை நோக்கி அவ்வாறு கூறியபடியாமென்று

ம், கண்டியாசிரியர் கல்லாடர்முதலியோர் மாதருகர்ப்பவாஸஞ் செய்யாத விநாயகர்-சுப்பிரமணியரிருவரையும் பார்வதீ தேவியார் திருவயிற்றிற் பிறந்ததாகக் கூறியிருப்பதே தமது பட்சத்தை நிறுத்து மென்றும் பிரசங்கித்துத் திருப்தியடைந்தார். இதுவு மஸங்கதமாம். கம்பராமாயணம இராமனையே பிரதிபாதிக்க வெழுந்தது. இதில், இராமன் புகழைக் கூறுமல் அவனது இகழைக் கூறினுன கம்பனென்றது ஏற்ற ஸமாதானமாகாது. இராமன் கோசலைமுகத்திற் பிறந்ததை முடிவாக அவன சொல்லியிருப்பானுயின், அத்துடன் காப்பவர்ணனை கூறினுனென்றசமாதானத்தையு மொருவாறு அங்கீகரிக்கலாம. நமதன்ப ரபிமதப்படிக்கோஸலைமுகத்திற் பிறந்தது மெய்யும், அவனது காப்பயோ நிஸம்பந்தங்களைப் பெறறது பொய்யுமாம. முக்கியமாய்ச் சொல்லவேண்டியது மெய். அந்த மெய்யை வாயில் போடடுக்கொண்டு (சொல்லாமல் விடுத்து) பொய்யை ஒன்று பத்து நூறுகப் பெருக்கிப் பிரகாசப்படுத்தினுன் கம்பனென்றது பதியாமா? இதனைத் தெளியாமல கடவுளியலுக்கு விரோதமாக உலகவியலை நோக்கி இராமனபுகழைக் கம்பன் கெடுத்தானென்றது இவர் கம்பனை மூடனென்று தூற்றியபடியாம. தண்டி - கல்லாடா முதலினேர் சிவஸுனுக்கள சரித்திரங் கூறவநதிலலை. அவர்களது பிரபந்தங்களிற் கூறினவெல்லாம் ஸ்காந்தாதி முக்யபிரமாணங்களோடு முரணியவழி யமக்குப பிரமாணமாகா. அன்றியும பார்வதியாருக்கு விநாயகர் முதலியோர மக்களென்றது ஸர்வஸித்தம. எத்தனையவதாரங்கள அவர்க்குக் கூறினும், எங்குப்பிறந்ததாகக் கூறினும் "சத்திதன் வடிவேதென்னிற்-றடையிலாஞானமாகும்" என்ற சிந்தாந்தப்படி ஞானகனமாகிய திருமேனி கொண்டெழுந்தருளிய அவ்வம்மையினது மக்களாய் அவர் வருவரேயன்றி (இராமன்கோசலைக்கும், கிருஷ்ணன் தேவகிக்கும், பரசுராமன் ரேணுகைக்கும பிறந்தபடிக்) கண்டகண்டஸ்திரீகளுக்கு மக்களாய்ப்பிறந்து தெய்வவியல்

கெட நில்லா ரென்க. அன்றியும், அம்மையினது அங்கப் பிரத்யங்கங்களில், நூறுதிக்யப் பிரசங்கஞ்செய்தது மிவருக்குச் சிவாபராதத்தை விளைத்த துணர்க.

இனியிவர் கூர்மபுராணத்திற் சில பாடல்களை யெழுதிக்காட்டி "ஸ்ரீராமபிரானால் சரபங்க முனிவரும், அயோத்தி நாட்டுள்ள சராசரங்களும், கண்ணபிரானால் வேதியரும, அவர் பன்னியரும், மாலாகாரனும் கஞ்சனும் முத்திநல மெய்தினமை சிவானுபூதிச் செல்வராகிய அதிவீரராமபாண்டியன் திருவாக்கானு முணர்க" என்றுசெருக்கித்தருக்கினார். அதிவீரராமபாண்டியனார் பாடியது கூர்மபுராணத்தின் மொழிபெயர்ப்பு. மூலத்திலிருந்ததைத் தமிழிற் பாடியதேயன்றி அவரது சொந்தக்கருத்து ஒன்றுமில்லை. இவ்வாறு விளக்கவறியாது அவரது சொந்தக் கருத்துப்போல இராமகிருஷ்ணர்களது மோக்ஷதாத்ருத்வத்தை நமதன்பர் பிரஸ்தாபித்தார். பாண்டியர் பெருமான் இராமகிருஷ்ணர்களை மோக்ஷப்பிரதாதாக்களாகத் துணிந்திருக்கும் பட்சத்தில் விஷ்ணுவையே அவராசிரயித்து இன்பங் கைகூடப்பெற்றிருப்பர். அப்படி யடைந்திருந்த பட்சத்தில், அவரை நமது பூர்வபட்சியார் "சிவானுபூதிச் செல்வர்" என்று புகழ்ந்தது மிகையாம்! சிவாநுபூதிமானாகிய அவருக்கு முத்திநலங் கைகூடியது அச்சிவபரஞ்சுடராலென்பது திண்ணம. பாண்டியர் பெருமானைச் "சிவாநுபூதிமான்" என்று நமதன்பர் பூஷித்தாரன்றே? அவ்வநுபூதியுடையார்க்குச் சிவப்பேறேயன்றே இவரொப்பத்தக்கது? அப்படி யொப்புவாராயின், அதனை முத்தியென்று இவர் துணிவாரா? அல்லது ஸாமானியமான வொருபதவி யென்று துணிவாரா? உண்மை முத்தியென்று துணிவாராயின், இதற்கும இராமகிருஷ்ணர்கள் கொடுத்ததாக இவரொப்பிய உண்மை முத்திக்கும் பேதமென்னை? சிவனும் முத்திகொடுப்பவர் - விஷ்ணுவும் முத்திகொடுப்பவர் என்று இவர் துணிந்து கூறுவாராயின், சிவன் குரங்காகி மனுஷ்யனாகிய இராமனைச் சுமந்

தானென்றதன் பயன் யாது? விஷ்ணுவே முத்திகொடுப்பவர், சிவன் பதமுத்தி கொடுப்பவர். அந்தப் பதமுத்தியையே அதிவீரராமபாண்டியன் அடைந்தானென்று கூறுங்கால் வேறுகதியில்லை. அதனை யாமொப்புவோமா! ஒருக்காலு மொப்போம். இனிக் கூர்மபுராணத்தில இராமகிருஷ்ணர்களால் முத்தி பெற்றவர்களாகப் பிரஸ்தாபிக்கப்பட்டவர்கள் பதமுத்தி பெற்றவர்களென்று துணிந்து கூறினமையே பாண்டியா பிரானது உண்மைக்கருத்தென்று துணிந்து அடங்குக. விஷ்ணுவுக்குப் பதமுத்தியேயன்றி உண்மை முத்திகொடுக்கும் யோக்யதையின்றெனினுஞ் சைவபட்சத்தை யொருவாறு ஈண்டு விளக்கிக் காட்டுவோம்.

இருசமய விளக்கத் தெளிவு.

"ஆகாயந்தனைத்தோல்போற்சுருட்டிடமவனேசிவனை
யடையாதென்றும்
போகாவெந்துயர்நீங்கிப்பொருந்துவனின்பநிலெனப்
புகலுமேபொய்
யாகாச்சுவேதாச்சுவதரமிதறசென்பகர்வா
யணங்கேநீதான்
கூகாவெனறமுமொழிசிற்சிலகூறிமழுப்பினைநின்
கொடுமையென்னே"

"முகுந்தனெனல்வீண்கண்டாய்முத்திதரமாட்டானை
முதனூல்காட்டா
தகந்தைமொழிகூறியதா லாவதெவனெங்களறு
பதது மூவ
ரிகபரஙகள்கடந்தபரமுத்தியையேயெய்தினரிவ்
வியல்புதேரா
துகந்துரைத்தாய்மாலடியாரமுத்திபெற்றாரெனல்பொய்யா
யொழிந்ததன்றே"

"முத்தியெனல்பிறந்திறக்குந்துயாகடத்தலெனவேத
முழங்குமின்மால
செத்துதித்தலியல்பாமச்சிறுதெய்வம்பிறந்திறவாச்
செல்வந்தனைப்

பத்தர்தமக்கீயுமெனல்பொய்யாமகின்றூழ்வார்கள்
    பாசிலேற்ற
முத்திபதமுத்தியெனவோராய்மெய்ம்முத்திபெற
    முடியாதன்றே"

"அரியருளும்பதமுத்திதானுமவன்றனையதிட்டித்
    தாலின்மேய
பானுதவுமன்றியுமால்பங்கயனிந்திரன்வாழ்வும்
    பரிந்துபோற்றிக்
கரமழுமானுடையானை யருச்சித்தேயெய்தினாக்
    கடவுளேமெய்ப்
பரமெனவேதங்கள்பகர்ந்திடுமுததிசருமவனைப்
    பணிவாமன்றே"

என்று கூறிய வாக்கியங்கள் நமதன்பருக்குக் கண்ணைத்திறந்து வழிகாட்டுமென்க. இதுகாறு மிவர் "இருசமய விளக்கத்தை" நம்பி மோசம்போனவர், இப்போது நல்ல காலம் பிறந்ததாகையாலின்னுங் கொஞ்ச மிவருக் கெடுத்திசைப்பாம்.

இவருதகரித்த கூர்மபுராணத்தி லொரு விசேடசரித்திரமிருக்கின்றது, என்னெனில் பிரகலாதன் அரசு புரிந்திருக்குங் காலததில் துருவாசர் அவனிடம வந்தனர். அவரைக்கண்டெழுந்து வழிபடாமல் வாளாவிருந்தனன் இரணியகுமாரன். அப்போது அவனைப்பார்த்து உனக்கு விஷ்ணுவினது தயையிருக்கிற தென்கிற மமதையால் சிவ பக்தாகளை நீமதித்திலை போலும். அந்தவிஷ்ணுவைச் சிவபக்தரென்று நீ யறிந்திலை. சிவபக்தராகிய அவரிடத்தும் உனக்குத் துவேஷமுண்டாகக்கடவது என்று சபித்து அப்புறம் போயினர் முனிவர் பெருமான். இந்தப் பைத்தியக்காரனென்னவோ உளறுகிறு னென்று அப்போது முதாசீனமா யிருந்துவிட்டான் பிரகலாதன். பின்பு சிலநாள்கழித்து முனிவர்சாபமுதிர்தலும் அவ்விராக்கதனுக்கு ஒரு யோ

கனை பிறந்தது. எங்ஙனமெனின், என்னுடையபிதாவை அநியாயமாய் விஷ்ணு கொன்றுவிட்டான். பிதாவைக்கொன்றவனை நாம் விரும்பிவாழ்வது நீதியா? பிதாத்ரோகியென்று பேரெடுத்து வாழ்வதைக்காட்டிலும் உயிர்துறத்தல் தகுதியாம். இப்போதேபோய் எனது பிதாவைக்கொன்றவனைக் கொன்று பழிக்குப் பழிவாங்குவேனென்று ஆவேசத்துடனெழுந்துபோய்த் திருப்பாற்கடலையடைந்து விஷ்ணுவைச்சண்டைக்கழைத்தனன். விஷ்ணு மூர்த்தி அதிசயித்து இது சிவனடியாருக்கிழைத்த தீங்கின்பயனுமென்றுணர்ந்து அவனுக்குப் புத்திபுகட்டி அம்முனிவரைச் சரணடைய வுபதேசித்தனர். என்னோடு போர்புரியவஞ்சியோ நீ போக்குக்காட்டுகிறாய் என்று பரிகசித்துச்சண்டைக்கே அழைத்தனன் அவ்விராக்கதன். அதற்குமேல், முனிவாசாபத்தைத் தெளிந்த விஷ்ணுபகவானெழுந்துவந்து சதுரங்க சேனைகளோடு சண்டைக் கெதிர்பார்த்துக்கொண்டிருந்தவனை யெதிர்த்துப்போராடினர். அவன் அவரோடு போராடமாற்றலிழந்து உதைபட்டுத்திசைதடுமாறி யோடியொளித்துப் பின்வருமாறுயோசித்தனன். நாம் விஷ்ணுவை நம்பியபலன் அவலமாகியது. முனிவர்பெருமானிட்ட சாபத்தைக்கடக்கமுடியாமல் இந்தக் கதியாயினோம். சிவபத்தராற்றலின் முன்னர் விஷ்ணுபத்தராற்றல் தலைதூக்காதென்ப தின்றுகண்டோம். இனிச்சிவபெருமானுக்கே நாமாட்பட்டுப் பிழைக்கவேண்டுமென்று துணிந்து முனிவர்பெருமானைத் தேடிச்சென்று பணிந்து அவருபதேசத்தாற் காசியையடைந்து சிவலிங்கபிரதிட்டை செய்து பூசித்துய்ந்தான் என்று பிரகாசப்படுத்திய கூர்மபுராணத்தை மொழிபெயர்த்தருளிய பாண்டியர்பெருமான் விஷ்ணுவை முத்திநாதனெனத் துணிந்தாரென்று இவ்வசங்காத்மவாதியார் (பூர்வபட்சியார்) பிரசங்கித்தது நிஷ்பலமாயினதறிக. இதற்குமுன்னர்க் காட்டிய வாமனபுராணம் “నారాయణాదినామాని విసృజ్యనవిచారతః। జపేచ్ఛివాదినామాని శుద్ధ్యేముక్తింయదీచ్ఛతి” என்று கூறி நாராயணாதிநாமங்களை யொதுக்கிச்

சிவாதிநாமங்களை யுச்சரித்து ஸாதுக்களுய்யடக்கடவர் என்று பிரகாசப்படுத்தியது. இவற்றையெல்லாம் நமதன்பர் நன்குபரியாலோசித்து விபரீதம்விலகிச்சுகிப்பாராக. நிற்க.

இவர் சிவபெருமானுக்குப் பலபிறவிகளுண் டென் று சாதிக்கத் தொடங்கினர். எங்ஙனமெனின், சுகர்-அத்திரி-அசுவத்தாமர்-ஔரவர்என்பவர்கள் ருத்ராவதாரங்களென்று கருடபுராணங் கூறுகிறதென்றும், அதிற்றனே ஏகாதச ருத்ரருள் விஷ்கம்பன் என்பவர் கிருபாசாரியாராகவும் பத்திரதாமன் என்பவர் சோமதத்தராஜனுகவும் பிறந்ததாக கூறப்பட்டிருக்கிற தென்றும் பிரசங்கித்தனர். அன்றியும், பாரதவெண்பாவில் சிவனுரது அவதாரம அசுவததாமர் என்று சொல்லப்பட்டிருக்கிற தென்றும, பாகவதத்தில் அததிரி முனிவருககுச் சிவன துர்வாசராகத் தோன்றினுரென்று கூறப்பட்டிருக்கிறதெனறும, சதபதப்பிரமாணத்தில சிவனுக்குப் பிறப்புண்டென்று சாதிககப்பட்டிருககிறதெனறும் நமதன்பராசைதீரப் பேசியொழிததார். இநத ஸந்தாப்பத்தில் அநுமான சிவாவதாரமென்று சாதிபபதிவருக்குப் பெருமையாகவும், இவா தேடிய நூல்களிவரை யேமாறறிவிட்டன. வடமொழிப்பாரதத்தில ஜமதக்னியுஞ் சிவாவதாரமென்று கூறுவதாக வொன்று பிரஸ்தாபித்தாா. இந்த ஜமதக்னி மகன் பரசுராமன். இதனுல, சிவனுக்கு மகன் விஷ்ணுவென்பதே சித்தித்தது. இனி யிவர்காட்டிய பிரமாணங்களில் அத்திரி சிவனென்றூா. மீண்டும் அத்திரிமகன் (துர்வாசர்) சிவனென்றூர். இவை புத்தி சுவாதீனமில்லாதவனெழுத்தேயன்றிச் சுவாதீன புத்தியுடையவனெழுத்தாகாது. இவ ரெவ்வளவெழுதினும்விஷ்ணுவுக்குப் பிறப்பில்லை யென்பதற்காதாரமாயினதில்லை. சிவனுக்குப் பிறப்புண்டாயிருப்பது போல விஷ்ணுவுக்கும்பிறப்புண்டாயிடுதல் குற்றமாகாதென்று சாதித்ததே இவர் துணிவாயிற்று. சிவனுக்குப்பிறப்புகளுண்டென்றும், அவை நிர்த்தோஷமானவையென்றும் யாம்

கௌரவிப்பதாயின, அதனையிவா தழுவித்தலையெடுக்கலாம். சிவனுருக்குப் பிறப்புகளிலலையென்றும், பிறபபுண்டாயிருத்தல் ஸாமான்ய ஜீவதருமமென்றுங்கொணடு பிரவர்த்திக்கு மெமது மததகோடொட்டிப் பின்றொடர்த விவருக்குத் தலையிடியாமென்றுணர்க. இவரே இவரது பிரசங்கத்தில் ஏகாதசருத்ரருள், விஷ்கம்பன் - பத்திரதாமன் என்பவர்கள் பிறப்பையெடுததெழுதினர். இவ்வேகாதசருத்திரர்கள் சிவஸாரூப்யம் பெற்றுச சிவபாவனை யெயதினவாகள். இவர்களைப்போல் சதருத்ரர் - ஸஹஸ்ரருத்ரர் - கோடிருத்ரர் முதலினோரது பிரஸ்தாபங்கள் நூல்களிற் கேட்கப்படுகின்றன. திருக்கழுக்குன்றத்தில், ருத்ரகோடியென்றொரு திவ்யாலயமிருக்கின்றது அதுகோடிருத்ரர்கள் சிவாராதனஞ்செய்துய்ந்த பெருமிதமுடையது. ஸ்தாணுருத்ரர் - விசாலாட்சருத்ரர் முதலிய உருத்திரர பிரஸ்தாபங்கள் பாரதத்திற் கேட்கப்படுகின்றன. இவ்வாறு எண்ணிறந்த வுருத்திரர்கள் கேட்கப்பட்டவிடத்தும், இவர்களையெலலாம் சிவனென்றே சாஸ்திரங்களுபசரிக்கும் இதற்கு வேறுஸாட்சி வேண்டியதில்லை. திருக்கோயில்களி லெழுந்தருளியிருககுஞ் சிவமூர்த்தஙகளைச் சிவஸாரூப்யமெய்தியிருத்தல கண்டு ஸாக்ஷாத் சிவமென்று யாம் வழிபட்டு இஷ்டஸித்திகளையும்பெற்று வாழ்கிறோம். இவைகள் சிவமாகியும், அல்லவாகியும் விளங்குந்தன்மையே மேற்குறித்த உருத்திரபேதங்களிடத்துங் கொள்ளத்தக்கது. இதனால், நமதன்பர்காட்டியஅவதாரங்கள் சிவஸாரூப்யமெய்திய குணருத்ரர்கள் பரமாயொதுங்கினவென்க. திரிமூர்த்திகளி லொருவராகிய உருத்திரரே பரமசிவமாகாத பெற்றியை மேலே யாம் பிரகாசபபடுத்தினோ மாகையால், நமதன்பர்காட்டிய அவதாரங்களுக்கு அதிஷ்டானமான உருத்திரபேதங்களைப்பற்றிய கவலை எமக்கின்றென்க. இவர்காட்டிய அவதாரங்களில், தூர்வாசர் திரிமூர்த்திகளிற்சேர்ந்த உருத்திராவதாரம். இந்தவுருத்திரர் எல்லாவுருத்திரர்களினும் மிகச்சிறந்தவர்.

இவருக்குக் கர்ப்பயோநிஸம்பந்தங்கள் கிடையா. இவரது அவதாரத்தை "ఏకోంశోవాస్యసుకరం" என்னும் வாக்கியத்தால் ஸ்ரீஹாரீதத யோகிகள் தமது சுருதிஸூக்திமாலையில் வியந்து துதித்திருக்கின்றனர். அத்திரி பத்னியாகிய அநஸூயாதேவியினது தவத்துக்கு இரங்கித் திரிமூர்த்திகளுந் தரிசனந்தந்தனர். நீவிர்மூவரும் எனக்குப் புத்திரர்களாக வரக்கடவீர்களென்று வரங்கேட்ட அவ்வம்மையாருக்கு அப்படியே வருவோமென்று வாக்களித்தனர் மூவரும். இவ்வாறு அநுக்கிரகித்து மறைந்த மூவருள், நடுநின்ற சிவன் அஞ்சலியோடு நின்ற அவளுடைய கூப்பிய கையினின்றும் சிசுவாக உடனே கீழே குதித்தார். அப்படிக் குதிக்கிறபோது "துர்வாஸ:" என்று சொல்லிக்கொண்டே வந்தனர். உன்னுடைய கர்ப்பத்தில் வசித்தலும், யோநிவாயப்பட்டு வருதலும் எம்மாலியலா அவை துர்வாஸம் என்று சொல்லிக்கொண்டே வந்தமையால் "துர்வாஸர்" என்னுந் திவ்யநாமம் அவருக்குண்டாயிற்றென்று வெளிப்பட்ட சத்தியார்த்தத்தைச் சநற்குமார ஸம்ஹிதையில் "స్వల్పాంశేనాపిగర్భస్య" என்று பிரகாசப்படுத்தியிருக்கின்றது. இங்கே வந்தவர் குணருத்திரரானமையால், இவர் துரீயருத்திரரல்லரென்பது போதரவே இவரை "స్వల్పాంశే" என்று விளக்கி அம்சாவதாரமென்று போதித்தது. ஸ்வல்பாம்சத்துக்குங் கர்ப்பயோநிஸம்பந்தங்களும், ஜநநமரணங்களுங் கிடையாவென்பது இதனாலேற்பட்டது. துணாரது விஷ்ணுவைப் போலச் சிவனும் பிறந்தாரென்று துர்வாசரையெடுத்துக் காட்டிய வஸங்காத்மவாதம் இத்தோடே தொலைந்ததென்க. பாராசரபுராணத்தில், "యో஽పకర్షోహరేర్దృష్టస్సాంబస్యాభిశేషత:" என்னும் வாக்கியம் புராணங்களில் சிவனுக்குக் கூறிய அபகர்ஷங்கள் குணருத்திரர் பரமெனவும், அவருக்குக் கூறிய உத்கர்ஷங்கள் ஸாக்ஷாத் அவருக்கே யெனவும், விஷ்ணுவுக்குக் கூறிய அபகர்ஷங்கள் அந்த விஷ்ணுவுக்கே யெனவும்,

அவருக்குக் கூறிய உத்கர்ஷங்கள் ஸதந்தரியாமியாகிய சிவ பராஞ்சுடருக்கெனவும் வியவஸ்தையுண்டாகத் தெரிவிக்கின் றது. இதனால், சிவனார் பிறந்தார் என்னும் அபகர்ஷமும், விஷ்ணு பிறக்கவில்லை என்னு முத்கர்ஷமும் ஜீவிப்பது கஷ் டதரமென்றடங்கி யொடுங்குவாராக. இனி யெமது சிவபர மாத்மாவை "బ్రహ్మవిష్ణురుద్రేన్ద్రాస్తే సమ్ప్రసూయన్తే న కారణం। కారణం తు ధ్యేయశ్శంభుః" என்று வேதமறுதியிட்டுரைத்தது. பிரம விஷ்ணு ருத்ரர்களை "நகாரணம்" என்று தள்ளி, அவாகள் பிறப்பிக்கப்பட்டவர்களென்றும், அவாகளைப் பிறப்பித்தவர் தியேயராகியசம்பு சப்தவாச்யரென்றும பிரகாசப்படுத்திய துணர்ந்த சாம்பவர்களுக்கு (எங்களுக்கு) எத்தனை சிவாவ தாரமுனிவர்கள் பேரை யிவரெடுதெழுதிக்கொண்டாலுந் துக்கமுண்டாகவாவசியகமில்லை யென்றறிக. அவ்வுருத்திரக் கூட்டங்களை இவரது விஷ்ணுவுக்கு அபகர்ஷ மூர்த்தஙகளா கமதித்து வழிபடப பின்னிடேமென்க. கேவலம பாஷா ணத்தைச் சிவபாவனையால வழிபடும யாம் நாமரூபவொ ற்றுமைகளால் சிவபாவனை மேலிட்டு விளஙகிய திரிமூர்த்தி யுருத்திரனை ஸாக்ஷாத் சிவமென்றே வந்தித்துச் சிவப்பிர ஸாத மெய்தியின்புறுவே மென்க. பிரம விஷ்ணு ருத்ராகளை "நகாரணம்" என்று முன்சுருதி யொதுக்கியதுபோல வே றொரு சுருதி "బ్రహ్మవిష్ణ్వీశానేంద్రాదీనామత్యాస్సవర్ణాంజీవః" என்று எழுந்து அவர்களை ஜீவாகளென்று பிரதிஷேதித்துவிட்ட து. உருத்திரமூர்த்தியைப்போல விஷ்ணு பிரமர்களும் ஜீவர் களாயிருந்துகொண்டே கிருத்ய காத்தர்களாய் அதிகாரஞ் செலுத்துகின்றனர். இவருள், பிரமனுக்குச் சிருட்டியும், விஷ்ணுவுக்கு ஸ்திதியும், உருத்திரருக்கு ஸம்ஹாரமும் சா ஸ்திரங்களிற் சொல்லப்படினும், உருத்திராதிஷ்டானமே யேனையிருவரிடத்தும் வியாபித்து யாவும் நடததுமென்க. பிரமனுக்கும், விஷ்ணுவுக்கும் அதிகார பாக்யங்கிடைப்பினும், சிவரூபப்பிராப்தி இன்னும் வரவில்லை. வரப்பெற்றுக்கொண்

டவர் சங்காரமூர்த்தியே. இம்மூவருள், பிரமனைக்காட்டிலும் விஷ்ணுவும், விஷ்ணுவைக்காட்டிலும் உருத்திரரும் அந்தஸ்தி லுயர்ந்தவர்கள். இவர் செய்யுங்காரியங்களில், பிரமனையதிஷ்டித்துச்சிருட்டியையும், விஷ்ணுவை யதிஷ்டித்து ஸ்திதியையும் உருத்திரமூர்த்தியேசெய்திடுவர். தமது சங்காரத்தைத் தாமே செய்வர். ஆதிவாரம் - சோமவாரம் - மங்களவாரம் - புதவாரம்-குருவாரம்-சுகரவாரம்-சநிவாரம் என்று வாரங்கள் தனித்தனிப் போவாரியாய்ப் பிரிந்திருப்பதன்றி அந்தந்த வாரங்கள் அவைகளைப் பேராகவுடைய கிரகங்களால் பிரகாசிப்பதில்லை. ஆதிவாரம் அல்லது ஆதித்யவாரத்தில் ஆதித்தன் றேன்றிப் பிரகாசப்படுத்துகிறன். சோமவாரத்தில் சந்திரன்றேன்றிப் பிரகாசப்படுத்துகிறனு? மங்களவாரத்தில் அங்காரகன் வெளிவந்துலாவி யுபகரிக்கிறனு? இப்படியே மற்றவாரங்களினுங் காண்க, எல்லாவாரங்களிலும் சூரியனெருவனே தோன்றி அவர்கள் மானத்தைக்காபபதுபோலச் சிருட்டிஸ்திதிகளிரண்டையுங்கூட ஸம்ஹார கர்த்தாவே செய்து நடைபெறச் செய்கின்றரென்பது வைதிக ஸித்தாந்திகள் துணிவென்றுணர்க. இவ்வுருத்திரருக்கு மேலிட்ட (சதுர்த்த) மூர்த்தியை "శివమద్వైతం శాంతం చతుర్థం మన్యన్తే" என்று வேதம் பிரதிபாதிக்கின்றது. இத்துரீய சிவமூர்த்தியை நமதன்பரெங்கே யறியப்போகிறர்? அவர் சந்நிதியிலொன்றுக்கும் பற்றுத விஷ்ணுவைக் கையிலே பிடித்துக்கொண்டு அவர் வேஷம்போட்டுக் கூத்தாடும வேஷகோலங்களாகிய இராமகிருஷ்ணுதிகளை அளவுக்கதிகமாக மெச்சி இவர் சிவதூஷணையிலிறங்கிச் சீரழிவது மிகு பரிதாபமெனக.

இவர் விஷ்ணுவினது பிறப்புகள் பிருகு சாபங்காரணமாகத்தோன்றின வலலவென்றுசமாதானங்கூற வெழுந்தார். இவ்வாறு கிளம்பியவர் "அரிஅரன் அயனுதிவானவர்களில் முனிவர் கொடுத்த சாபத்தைத் தழுவாது நின்றோர் யாவர" என்று வழுக்கி விழ்ந்தார். இவரது விஷ்ணுவுக்கு மானபங்கம் வராமற்

காத்துக்கொள்வதொழிந்து அந்த விஷ்ணுவைப பிடித்த சநியின் கையில் பிரமருத்ரர்களையும பிடித்துக்கொடுக்கத் தலைப்பட்ட தென்னையோ ? உருத்திரமூர்த்தியை யொரு சநியுந் தொடருமாற்றல் வகித்திலதென்க. முதல விஷ்ணுவைச் சாபமணுகுமென்றொபதியதைப பினனா மறுத்து"இறைவனது திருவவதாரங்கள் யாவும் சங்கற்பமாத்திரையானே நிகழ்ந்தனவன்றிச்சாபத்தாலல்ல" என்று சந்தோஷித்தார். இதனைவிரிக்கவேண்டி மத்ஸ்யாதி நான்கு அவதாரங்கள் தாய் வயிற்றில்லாமலும், வாமனாதி ஆறு அவதாரங்கள் தாய் வயிற்றிருந்தும் பிறக்குமாறு முனிவா சாபமோ ? என்று கடாயினா. இது ஒரு கேள்வியா ? மத்ஸ்யாதிநான்கு அவதாரங்களில் தாயைத்தேடாமலும், வாமனாதிஆறு அவதாரங்களில் தாயைத் தேடியும் பிறந்துழல விஷ்ணுவுக்கிச்சையோ ? என்று யாம் கடாவுகிறேம். இதற்கென்ன விடை ? தாயில்லாத அவதாரங்கள் மிருகங்களும், தாயுள்ள அவதாரங்கள் மனுஷ்யப் பிறவிகளுமாயின. தாயில்லாத கௌரவம் மிருகத்தன்மையாலும், தாயுள்ள அகௌரவம் கர்ப்பயோநிஸம்பந்தங்களாலும் அழிந்தன. இரண்டுவிதமுங கேட்டுக்கே காரணமாயினதுணராமல் நமதன்பர்வாய்திறந்தது தோல்வித்தானத்திலேயே அவரை நிறுத்திய தென்க. இனி மத்ஸ்யாதிகளுக்குத் தாயில்லையென்று இவரெங்கே கண்டார் ? யாதேனுமொரு மீன்-ஆமை-பன்றிகளின் வயிற்றிலேதானிவர் பிறந்திருப்பர். தாய்ப்பன்றியாதிகளு மிவரைப்போலப் பிரஸித்தமாயிருந்தால், இன்ன பன்றி - இன்ன மீன் - இன்ன ஆமையென்று சுட்டி விவகரிக்கலாம். அநாமதேய ஜடங்களாகிய விஷ்ணுவினது பிறப்பிடங்களை(கர்ப்பயோநி வடிவங்களைப்) பிரகாசப்படுத்தாததுகொண்டு மத்ஸ்யாதிகளுக்குத் தாயில்லையென்றது அஸத்வாதமாயினதறிக. நரசிங்கனுக்குத் தாய் கருங்கற்றூணென்றறிக. இத்தூண் மிருகாதிகளினுந் தாழ்ந்த இடமாம். இதனாலெல்லாப் பிறப்புகளுந் தாயையிடமாகக்கொண்டு கர்மாதீனமான சாபத்தாற் பிறந்தன வெனலே

வியக்தமாகியது. இநதப பிறவிகள் கர்மாதீனமாகாதன வெனின், இவை செத்தகதை கேட்கப்படாதிருத்தல் வேண்டும். இவாது இச்சாவதாரங்கள் போனகதிக்கு ஒருகதி தேடி எந்தக் கபோதியுபநிஷத்தாவது கொண்டுவரட்டும் பார்ப்போம். இந்த மத்ஸ்யாதிகளடைந்த கதியை "ಯೋಮತ್ಸ್ಯ ಕೂರ್ಮವರಾಹಸಿಂಹ | ರೂಪಃ ಕ್ರಮಂತಂಬಾಮನಮಾಹವಿಷ್ಣುಂ | ನವಿದ್ಮಹಿಂಸ್ಥೇಶ್ವರಮಾನಂ" என்னுமுபநிஷத்வாக்கியத்தாலறிந்து ஸாதுக்கள் ஸந்தோஷிக்கின்றார்கள். இவ்வாறு அலகக்கணெய்திச் சாவது கர்மாதீனமாகாது வேறு யாதாகும்? இவாது பரிகாரம் பல்லிலியிளித்துக்கொண்டிருபபதறியாது சேஷாவதாரமாகிய இலக்குமணனை என் பததில சேர்க்கவில்லையென்றும், அச்சேஷாவதாரமாகிய பலராமனை மாத்திரம் சேர்த்தவிதம் யாதென்னும், இவ்வாறுசாபமிட்டவர் யாரோவென்றும் ஒரு கேள்வி பிறபபித்தார் இவர் கேட்டவிதங்களுக்கு யாவர்சாபங் காரணமோ எமக்குத்தெரியாது. தெரிந்திருந்தால இவரே சொல்லிச சாபத்தைப் பூர்த்தி கட்டட்டும. ஆதிசேஷன் விஷ்ணுவினது பாயலான வொரு ஜீவன் விஷ்ணு வொரு ஜீவன். விஷ்ணுவுக்குப் பிருகுவிடட சாபம் சேஷனுககு மிட்டிருந்தால அவன் பிறந்து செததகதைகளும வெளிப்படும். சிவனே யென்று படுத்துப் புரண்டு தூஙகிக்கொண்டிருக்குமவனை யிங்கேநமதனபரிழுத்துபபோடடது பரிதாபமென்க. பலராமனைசசேஷனென்றது வைஷ்ணவ ஸித்தாந்த வழக்கு. பலராமனை இவரே விஷ்ணுவவதாரமென்று பலதரங்கண்டாகோஷமாய் முழங்கியதை இங்கே மறந்தார். இவாது ஊழற சமாதானததில "பரசுராமாவதாரமிருக்கும் போதே ஸ்ரீராமாவதார மெடுதததும, பலராமாவதார மிருககும்போதே கிருஷ்ணாவதாரமெடுத்ததும இச்சாமாத்திரை யன்றோ" என வெழுதிக்கொண்டதில், பலராமனையும கிருஷ்ணனையும சாக்ஷாத் விஷ்ணுவினது அவதாரங்களென்று சாதித்தது என்னுவது? இப்படி வார்த்தை புரண்டு பேசும் வழக்கம் கமதன்பரினத்தவர்க்குப் பாலன்ன முண்பதுபோலாம்.

இனியிவர் "தசாவதாரம் சாபவயத்ததாயின், ஒன்றொழிந்த பின்னன்றோ மற்றொன்று வருதல்வேண்டும். இறைவன் நினைப்பின் ஒருநிமிஷத்தில் முனிவர் சாபப்படி பத்து அவதாரத்தையு மெடுப் பினுமெடுப்பன், எடுக்காதொழிப்பினு மொழிப்பன், கிருஷ்ணாவதாரம் சென்ற இந்த ஐயாயிரம் வருடம் வரைக்கும் பத்தாவது அவதாரம் எனெடுக்கவில்லை? அவன் சர்வ சக்தனாகிய ஜகதீசனாதலாலே சாப வசத்தனல்லனென்பது பெறப்பட்டது" என்று முடிவுரை கூறி யுப சாந்தியடைந்தார். சாபங்காரணமாகாமல் இச்சைகாரணமாகிப் பிறவிகளெடுத்ததாயின், ஒரே காலத்திலிருந்த பரசுராம ரகுராமர்கள் கைகோர்த்து விளையாடி மகிழ்தல் வேண்டும். பரசுராமனை ஸ்ரீராமனுதைத்ததெற்றுக்கு? பரசுராமனுதைபட்டது இச்சையோ? சாபமோ? கர்மமோ? விவேகிகள் சொல்லட்டும். ஒன்றிருந்த காலத்திலொன்றிருக்கச்செய்து வினையை மூட்டியதே சாபத்தின் பயனென்றுணர்க. பலராமனும், கிருஷ்ணனுமொத்து வாழ்ந்தார்களா? சுபத்திரையை அர்ஜுனனுக்குத் திருட்டுத்தனமாகக் கிருஷ்ணன் கொடுத்தனுப்பினான். பலராமன் அதை விரோதித்து அர்ஜுனனைக் கொல்லக் கலப்பையைத் தூக்கிவந்தான். இதற்கிடையில் பலராமகிருஷ்ணர்களுக்கு ஒரு துவீபத்தில் சிவராதனை மஹோத்ஸவ வைபவங்கள் கேட்கப்பட்ட சைவ நலம் அதிக வியப்புடைத்தே! இதனால, விஷ்ணுவையும், அவரது அவதாரங்களையும் கர்மத்தினடியாக வியக்குமெமது கருணாநிதியின் செயலே எவற்றிற்குமாதாரமாய் நின்றவாறறிக. "அரியீரைக தவதாரச் செயல்கள் யாவு மரன்செயலா மாலறியாதகத்தை கூறல்-திரிவாகு முடல்வால தருண மூப்பின் செயலுயிரின் செயலாகுஞ் செய்தி போலும்-விரிவாமைந் தொழிலையு மெம்மிறைவன்றனே மிகுபடர்க்கை முன்னிலைத்தன் மையிலுண் டாக்கும்-தரியாதன் றிராமனுடன் பரசு ராமன் சமர்பொருத கதையுலகிற் சாற்றீரோ" என்ற வமுதவாக்கியத்தை நமதன்ப ரினியேனுந் தரிசித்து இன்பவாழ்வெய்துவாராக.

இனியிவர் "இறைவன் நினைப்பின் ஒரு நிமிஷத்தில் முனிவர் சாபப்படிப் பத்து அவதாரத்தையுமெடுப்பினு மெடுப்பன்

எடுக்காதொழியினு மொழிப்பன்" என்றானன்றே? இது பெரியவிநதையாம. எடுப்பினுமெடுப்பன் என்றதனால், அவ்வாறெடுத்தல அவ்விறைவன் சம்மதவாறுகினறது. இதற்கு மாறாக நமதனபா எடுக்காதொழிப்பினு மொழிபபன் என்றது எனனமதி? எடுப்பினு மெடுப்பனென்பதற்கிணங்கவே அவர் பத்துப பிறப்புகளெடுத்தமையால, எடுக்காதொழியினு மொழிபபனெனறது அஸத்துரையாயழிந்தது. அவ்விறைவன் பிறத்தற்குச் சாபத்தையுங் காரணமாககிவிட்டு "அவாநினைபபின" எனறு மீண்டும அவரது நினைவைக் கொணடுவநது குறுக்கேநிறுத்துத லஸமபாவிதமாம. அவர் நினைத்தாலும, நினையாவிடடாலும பிருகு சாபம் பிடரியைபபிடித்துத் தளளிக்கொண்டுவந்து பல கர்மயோநிகளிற செலுத்திப பிறககச்செய்யுமெனபதே தீர்மானம. இம்மடடி லஸமையாமல இறைவன நினைபபின "ஒரு நிமிஷத்தில்" பிறபபனெனறும சாபஙகாரணமானால "கிருஷ்ணவதாரஞ் செனற இநத ஐயாயிரம வருடம வரைககும பத்தாவதவதாரம் எடுக்கவிலலை" எனறுங் கடாவியதும நிஷ்பலமாம. வராகம்பிறநதது வராககலபம - வாமனன்பிறந்தது வாமனகலபம். இவவளவு தூரத்தை யபேக்ஷித்தகாலங்களிற் பிறந்த விஷ்ணுவுக்குக் கிருஷ்ணவதாரங்கழிநத இநத ஐயாயிரம் வருஷம அதிக காலமாயவிடடதாக நமதனபர் மனஸ்தாபப்படடது விசாரணையின் குறைவேயாம. இனனுமெத்தனை ஐயாயிரவருடம சென்று பத்தாவது அவதாரமெடுக்க விஷ்ணுவை முனிவர் சாபஞ்செலுத்துமோ அதனையாமறியேம். ஒரு நிமிஷத்திற்பிறவிகளெடுப்பதானாலும, கற்பங்கள்கடந்து பிறவிகளெடுப்பசானாலும் முனிவர் சாபமே முன்னின்று செலுத்துமென்றறிக. இறைவன இறைவன் என்று நமதன்பர் மாரடித்துககொள்ளுகிறார். இறைவனை முனிவர்சாபந்தொடராது. லீலையாயேனும இறைவன் அதனையேற்று நாடகம்புரியான். "இருவினைக்கு முரியவனு மிப்பிறந்து பமெரியை யிறைவனென்று-சுருதிமுறை யிடுமோயி னுமுமரி யாகுமெனச்சொற்றனென்

னே" என்று கூர்மாலய தேவாகூறியருளிய திருவாக்கும் நமதனபர்வாய்க்குப பெருமபூட்டாயினதறிக, நிறக.

இவர் பிருகுமுனிவர் விஷ்ணுவுக்குக் கொடுத்த சாபம அவரிடமேறுமல கொடுததவரையே துன்பப்படுத்தியதென்றும, அதனுலம்முனிவர் விஷ்ணுவை வெகுகால மாராதித்து அபராதம் நீங்கபபெறறதன்மேல விஷ்ணுவான வர் முனிவரைபபாரத்து லோக ஸமரக்ஷணார்த்தம் உமது சாபததை நாமங்கீகரித்து அவதாரங்களெடுக்கிறேமென்று வாககளித்து, அவ்வாறே யவதரித்தாரென்று வானமீகம உத்தரகாண்டங கூறுகிறதென்றும ஒரு பொயப்பிரசஙகஞ்செய்தனா. முனிவாகொடுதத சாப மேறவிலலையெனறு இவர் முதல் தடைகூறினும், முடிவில ஏறியதாகவேயன்றோ முடிந்தது? இடையி லிவா செய்தது ஜாலவித்தையேயாம. கடைசியிலங்கீகரிததுக்கொண்ட விஷ்ணுவானவா முதலிலேதானே ஏனங்கீகரிக்ககூடாது? அனபாவாக்கைப பரிபாலிபபதானுல இடையில் முனிவரையலக்கணுறச்செயதல கூடுமோ? அமமுனிவா விஷ்ணுவுககு அனபரானுல அவர் சாபங் கொடுக்கத்துணிந்தது அஸங்கதமாம, தனது சாபஞ் செல்லக்கூடிய இடத்தை ஒருவன தெய்வமெனறு கோடலுனும் எபபடிக்கூடும? இவ்வஸமபாவிதங்களுக்கு நமதனபர் சுதிகூறமுடியாதாகையாலும, "ஜானகியைக கொண்டது மோசாபத்தாலமமானே" என்பு இவா மெச்சிய பிளளைபபெருமாளையங்காரே பாடினமையாலும, இவா பிரஸ்தாபிதக வானமீகம உததரகாண்டம இவரிஷ்டமபோற கூறியதின்றுகையாலும இவர்செய்த பிரசங்கம யாவும் ஊஷரபூமியிறசெயத கிருஷியாயிற்றெனவறிக.

நமதன்பரிதனை யிவ்வளவினிறுததிப பழையகடையைக் கொஞ்சம் பாட்பிக்கொண்டார். என்னெனின, இராமோபநிஷத்தில், "எ உருத்திரமூர்த்தி! நீயே வாயுபுத்திரனு

அவதரித்து நமது ஏழாவது அவதாரத்துக்குத் தூதனாகவும், தொண்டனாகவும், அமைச்சனாகவும், வாகனமாகவும் எப்பொழுது மிருக்கக்கடவாய். நாம் உனக்கு நவவியாகரண பண்டிதத்வமும், விசுவரூபமும், கல்பாந்தத்தில் அமிர்தத்வமும் கொடுக்கிறோம்" என்று சிவனைப் பார்த்து விஷ்ணு சொன்னதாக விரிவுரை கூறியதன்றியும், தாரகோபநிஷத்தில் "ஸ்ரீராமஷடாட்சரங்களுக்கு அதிதெய்வங்களைச் சொல்லுமிடத்தில் மகாராக்ஷரத்துக்குச் சிவாவதாரமாகிய அநுமான் அதிதேவதையென்று இரண்டிடத்திற் கூறப்பட்டனன்" என்றும் பிரசங்கித்துத் திருப்தியடைந்தார். சந்திரனிடத்தில் முயற்கறை யுண்டென்று பெரியோர் கூறுவர். அதற்கு இவர்காட்டிய இரண்டுபநிஷத்துக்களும் இரண்டு கொம்புகளாம். இவ்விரண்டில் முதற்கொம்புக்குக் கோவிந்தாசாரி யென்பவர் தங்கப்பூண்கட்டி விநோதசாலையில் வேடிக்கைபார்க்க வைத்தாராம் அதாவது ஷை யுபநிஷத்தை இவரது சுவடியின் கடைசியிற்சேர்த்து அச்சிடச்செய்தவர் அவராம். அவராயினும், இவராயினும், எவராயினும் பொய்யுரைபுனைந்து முன்னுக்குவருதல் கூடுமோ? நூற்றெட்டுபநிஷத்துக் கோவையிற் படிக்கப்படாத இவ்வுபநிஷத்துக்களை நமக்கனுப்பினிரியேனுந் திலதர்ப்பணம்பண்ணி இன்புறக்கடவர்.

இனிக் கோவிந்தாசாரி யுபநிஷத்திலுள்ள கோணலைச் சிறிதெடுத்திசைப்பாம். விஷ்ணுவானவர் சிவனைநோக்கி நீ எனது ஏழாவதவதாரத்தில் தூதனாகவும், ஸேவகனாகவும், வாகனமாகவும் குரங்குருபமாகப்பிறந்துழலக்கடவாய் என்று பணித்தாரென்று கூறியது சாலவழகுடைத்து. எனது ஏழாவதவதாரத்தில் என்று பிரஸ்தாபித்தமையால் ஒரு அவதாரமுமெடுப்பதன் முன்னரிந்தக் கட்டளை பிறந்ததாக எண்ணவேண்டியிருக்கின்றது. முந்திய ஆறு அவதாரத்திலும் சிவனது சகாயம் வேண்டியதில்லைபோலும். அப்படி வரக்கூடிய தூதனைக் குரங்காயவர் ஏனோ விரும்பவேண்டும்? ஏழாவது அவதாரம் மனுஷ்யரூபம். தனக்குச் சத்ரு

வோ இராக்ஷஸன். தான் விரும்பத்தக்க தூதன் அல்லது அமைச்சன் மனுஷ்யனாகவாவது, இராக்ஷஸனாகவாவது அமைக்கிடலே ஸங்கதம். இந்த நியதிக்குமாறாகவெழுந்த விஷ்ணுவினது குரங்குப்பிடி சாலச் சிரிப்புடைத்து. இதற்கு மேல விஷ்ணுவானவா சிவனுக்கிட்ட வேலைகளை "நீ எப்போதுஞ் செய்துகொண்டிருக்கக் கடவாய்" என்று விதித்ததாகவுந் தெரியவருகின்றது. இராமன் சலத்தில் (சரயூநதியில்) வீழ்ந்துமாண்டான். அவன் மனைவி மண்ணில் (பூமியினகீழ்) படிந்து மடிந்தாள். இவர்களுடைய தூதன் - சேவகன - அமைச்சன்-வாகனம என்று சொல்லத்தக்க அநுமான் (நந்தியநுக்ரம பெற்றதனால்) சிரஞ்சீவியாய் இன்றுமிருக்கிறான். இவன் இராமனுக்கு எப்போதுந் தூதுவனாகவும், ஸேவகனாகவும, அமைச்சனாகவும, வாகனமாகவுமிருந்து ஏவல்செய்வதைக் கோவிந்தாசாரியுபநிஷத்துக் காட்டவேணடியது. அவ்வுபநிஷத்தைக் கையிலே பிடித்துவந்த பூர்வபட்சியாவது இராமனை யுணடுபண்ணி அநுமான் பக்கல விட வேண்டியது. குரங்கு க்ஷேமமாயிருக்கிறபோது இராமன்மாண்டது அதிக பரிதாபமென்க. குரங்கு க்ஷேமமாயிருப்பதற்கு நமதன்பர் காரணமறியார். ஏனைய வைஷ்ணவருமறியார்கள். இந்தக் குரங்கு ஒரு (சிவரூபமபெற்ற) உருத்திராவதாரமாகையால் சாகாது. உருத்திரவடிவமெய்திய எத்தனைகோடி ஜீவர்களும் நாசமுறார்கள். இந்தச் சிரஞ்சீவியை இராமாயணயுத்தம் முடியும்பொருட்டுச் சிவனார் தந்தருளியதுபோலப் பாரதயுத்தம் முடியும்பொருட்டு மற்றொரு சிரஞ்சீவியை (அசுவத்தாமாவை) உருத்திராம்ச மெய்தினவனாகத் தந்தருளின ரவ்வெம்பெருமா னென்றுணர்க. தசாவதாரங்களும் துச்சம் என்று வாதிட்டுவருந்தும் வாதியார் எந்த அவதாரத்தையாவது சாகாமல் நிலைக்கப்பார்த்தாரா? துஷ்டர்களைச் செயித்த மூர்த்தங்கள் அந்தத் துஷ்டர்கள் செத்ததுபோல

(அப்போதில்லாவிடினும்) பின்னர்ச்செத்தது கர்மாதீனமுடையனவென்றதையே ருசுப்படுத்தியது. இராவணனுஞ்செத்தான் இராமனுஞ்செத்தான் என்றது அதிக ஈனமன்றோ? கம்ஸனுஞ்செத்தான் கண்ணனுஞ்செத்தான் என்றது ஸாதுக்கள் மனசுக்கு அதிக் கஷ்டமன்றோ? இந்தத் துஷ்டர்களைச் சிக்ஷித்த விஷ்ணுவவதாரங்களைக் கர்வபங்கப்படுத்த வந்த விநாயகர் - ஸ்கந்தர்-வீரபத்திரர்-பைரவர் முதலிய சிவ பராக்ரம விக்ரகங்கள்பேரில ஒரு தோஷாரோபிதமுண்டா? இவை சிவனாது நித்யமங்கள விக்ரகங்களாம். இவ்வுண்மை தேராது நமதன்பா ஐச்சவாதம்பேசி நைச்சிகம்பண்ணுவது ஏச்சுவாதமாகவே முடிந்ததறிக.

இவரிததோடே நிலலாமல் அநுமானுககு நவவியாகரண பண்டிததவம - விசுவரூபம் - அந்ததிலமிர்தத்வங்களை விஷ்ணுபகவான் பிரஸாதிபபதாகக கோவிந்தாசாரியுபநிஷத்துக்கூறியதை யெடுத்திசைததாரனறோ? இதையுஞ சிறிது விசாரித்து ஒழுங்குபடுத்துவாம். இநத வியாகரணோபதேசம் இராமன்செயதானோ? விஷ்ணுவே யுள்ளிருந்துணர்ததினாரா? அல்லது வேறு யாரைககொண்டாவது செய்வித்தாரா? இவ்வுபதேசம (பகவத கீதை சணடை ஸமபிரமத்தில நடந்தது போல) இராமராக்ஷஸ யுத்தகாலததில நடந்ததா? சீதையை மீட்டுககொண்டு வீடுவந்து சேர்ந்த சாவதானத்தில நடந்ததா? அநத வுபதேசத்தால் அவனுக்கு என்னலாபம்? அவன் யாதேனும் வியாகரண சந்திரிகை தன்பேர் விளங்கச் செய்தானோ? நமது இலக்குமணப்பிள்ளை தமக்குக கொஞ்சமிலக்கணங்தெரிந்த மாத்திரத்தானே இரண்டுபிரபந்தஞ் செய்து குரங்குக்கு முன்னே யொன்றும், இராமனுக்கு முன்னே யொன்றும் போட்டு மகிழ்வாரானால் ஒன்பது வியாகரணங்களை யொக்கப்படித்த குரங்கு வீரன் சும்மாவிருக்க

முடியுமா ? குரங்கு யாண்டுஞ் சும்மாவிராது. இந்தக் குரங்கு சிவனென்பது பூர்வபட்சிகள் மதம். சிவனையோ "ஜ்ஞாநமிச்சேத் மஹேச்வராத்" என்று கூறி, யாவரும் ஞானத்தின்பொருட்டுச் சிவனை யாசிரயிக்கவேண்டியது என்று அன்னோர் கொண்டாடுவர். பிறருக்கு ஞானத்தைப் பிரஸாதிக்கத் தக்க (சிவாவதாரமான) குரங்குக்கு வியாகரணோபதேசம் பரிகாசத்தை விளைக்கத் தக்கதன்றோ ? இதற்கு மேற் போந்த விசுவரூபம் கோவிந்தாசாரி யுபநிஷத்தில் அநுமானுக்கு ஆகாதுக்கென்று கூறியிருக்கிறது நமது பூர்வபட்சியார் தமது பிரசங்கித்தினோர் மூலையில் அநுமான் வாயுவினது அம்சத்தால் வேகத்தையும், உருத்திராம்சத்தால் விசுவரூபத்தையும் பெற்றானென்று கூறியதை அவ்வுபநிஷத்து உணர்த்துகின்றது அல்லது அவ்வுபநிஷத்தை நமதன்பர் வாதம் உரைத்தருளுகிறது என்று பிறர் சொல்லத்தகுமில்லை. நக்ஷயம்சம் அல்லது அநுக்ரகம் பெற்ற அநுமானுக்கு ஸர்வஞானமும், விசுவரூபமும், அம்ருதத்வமும் ஸித்திப்பது ஸித்தமாகையால் பூர்வபட்சியாரது கபிமீமாம்ஸாபநிஷத்துக் கலிகல்மஷாந்தகார வுபநிஷத்தாயினது சத்தியமென்றறிக. வரிக்கிற பெருக்கும். நிறக.

இவர் ஸ்காந்தாந்தர்க்கத ஸநற்குமார ஸம்ஹிதை யொன்றும், ஸ்காந்த பஹிர்க்கத ஸநத்குமார ஸம்ஹிதையொன்றும் பிரமாணங்களாகத்தேடி மீண்டுங் குரங்கு விஷயத்தில் இறங்கினார். முதல், அந்தர்க்கத ஸம்ஹிதையில் சிவன் தேவர்களை நோக்கி நான் அநுமானய்த் தோன்றி இராமதூதனும், இராமஸேவகனும், இராமவாஹனமாயுமிருந்து இராவணாதிகளை யழித்து உங்களை ரக்ஷிக்கிறேனென்று வாக்களித்ததாயும், இரண்டாவது பஹிர்க்கத ஸம்ஹிதையில் பிரமன் சிவனை நோக்கி நீ அநுமானய்த் தோன்றி இராமனுக்குச் சகாயமாயிருந்து தேவர்களை ரக்ஷிக்கக்கடவாயென்று கூற

தலும், அதற்கிசைந்து நான் ஸர்வ ஜாக்ரதையாயிருந்து இராமகாரியங்களை நடத்துவேனென்று சிவனொப்புக்கொண்டதாயும் நமதன்பர் மகிழ்ந்து வெளியிட்டதை நிர்மூடனும் மதியான். விஷ்ணுவே சிவனை நோக்கி நீ அநுமானாகப்பிறந்து எனக்குத் தூதுவனும், ஸேவகனும், அமைச்சனும், வாகனமாயுமிருந்து ஊழியஞ்செய்யக் கடவாய் என்று பணித்ததாக நமதன்பர் மேல் கூறியதற்குத் துணைக் கையொப்பங்களாக இங்கே சிவனையும், பிரமனையும் ஸாக்ஷிபோட்டுக்கொண்டார். ஸ்காந்த பத்மாக்கத ஸம்ஹிதையைப்பற்றி எமக்காவசியகமில்லை. ஸ்காந்தாக்கத ஸம்ஹிதை எமது (சைவர்களது) தஸ்தாவேஜாகவேணும். ஸ்காந்தம் சிவபுராணம் பத்தனுட சிறந்து விளங்குவது. இது லக்ஷங்கிரந்தமுடையது. இதிலடங்கிய ஸம்ஹிதைகளாறனுள் ஸநற்குமார ஸம்ஹிதையொன்று. இந்தச் சைவஸம்ஹிதையில் சிவநிந்தை கிடந்ததாக நியாயவாயப்பு கடந்து கூறிய விவரத்து வார்த்தைக்கு யாங்களே கனமுண்டாரும்? இவர் தேடிய பத்மாக்கத ஸம்ஹிதையைப்போல தூவரது அந்தாக்கத ஸம்ஹிதையை யாம் (பத்மாக்கத ஸம்ஹிதையென்று) தள்ளிவிடுதலே நியாயவாதிகள் சபையில் மணந்திடத்தக்கதெனக. இந்தப் பிரமாணங்களோ டினமாகத்தக்க (வழவழராமாயணம்) யாகயவல்கயராமாயணம் (குழகுழராமாயணம்) பிருகத்ராமாயணம் (லபலபராமாயணம்) மஹாராஷ்ட்ரராமாயணம் (சளசளராமாயணம்) தெலுங்கு ராமாயணம் இவைகளைத்தேடி "பலவுமி தினரூல ஒரு அவிழ்கட்டாதா" என்பதற்கிணங்கச் சிவனைக் குரங்காக விளக்கிக் கும்மாளம் போட்டுக் கூத்தாடினார். இலக்குமணப்பிள்ளை ராமாயணம்—துரைசாமிமூப்பனார் ராமாயணங்கடோன்றிச் சிவிப்பதற்கதிகமாக இவர் தேடிய குப்பைராமாயணங்களை வான்மீகம் படித்தவர்கள் மதித்துப் பிரஸ்தாபியாரென்க. கம்பராமாயணமே காலைக்கிளப்பிக்கொள்ளும்போது இந்த வம்புராமா

யணைகள் வரிசைபெற்று வாழ்வதெங்கே? இடையில் அவர் பட்டதும் படாததுமாகப் பிரஸ்தாபித்த வாயுபுராணம் சிவபராக்ரமங்களைக் கூறுவது. இதிற் குரங்குச்சேட்டை கிடையாதென்றறிக. இதற்குமேல் கம்பனது (வாதசேயைப்) "புராரிமறறியானே வாதசேய்" என்ற துண்டை வாயிற் கௌவிக்கொண்டு வந்து எமக்கு மீண்டுமிவர் புதுமைகாட்டுகிறார். இதற்கினமானதும், (கிலுஷ்ட கல்பனத்தால்) இதறகினப்படுத்தக கூடியதுமாகிய வேறு இரண்டொருபாடல்களையுந் தேடிவந்து வெளிசசங் காட்டினார். பின்னவையெலலாம வாதசேயி லந்தாக்கதமாகையால, "வாதசேய்" வாதசசேய் என்று இக்கணவிதியேற்று நிலைபெறத்தக்க சமயத்தில் அதனோடு கூண்டோடே தொலையுமென்க. வாதச்சேய், வாதசேயென்றாகியது தொகுத்தல் விகாரமென்பார் போலும். கவிச்சகரவர்த்தி பாடலில் விகாரங்காணுதல் கூடாதகாரியம். பிசகாயப் பாடிவிட்டு, பின்னரதற்கு ஸமாதானந்தேடுதல கௌரவக் குறைவெனவறிக. "புராரிமற்றியானே வாயுபுத்திரனென்று" என்றெழுதினால் ஸாதுவாகுமே. அது கம்பர் பாடியதாயிருந்தால், சரியாய்த் தானிருக்கும். அவரது மானங்கெடவாரோ வொருவமபன)பாஞ்சராத்திரி திருத்திவைத்ததாகையால், அதை கேடினைத்தென விண்டறிவித்ததாயிற்றென்க. இவரித்தோடே கம்பனைத் தொலைத்துச் சொழிஅருணசலக கவிராயரைத் துணைதேடிச சற்று இளைப்பாறினர். இவருக்கு யாம் ஸாதுவாகவே பதிலளிக்கிறோம்.

இவரது கவிராயர் "அதிகமான ருத்ரனக்கிசனநமலேன்" என்று பாடியதால், அநுமான் சிவனென்று சித்தித்தது என்றும், அவர் அநுமார் பிள்ளைத்தமிழ்பாடியதில் அநுமானைச் சிவனென்று விளக்கினுரென்றும் புகழ்ந்தார். கவிராயா "அதிகமான ருத்ரனக்கிசனநமலேன்" என்றாரேயன்றி "அதிக

மானருத்ரனநுமனாகத் தோன்றி'' என்று கூறவில்லை, "அதிகமான ருத்ரன" என்றமையால, பரமாத்மா ருத்ரனென்று அவர் கொண்டதுணிபு வெளிபபட்டது. அவர் பிறவாதவராகை யால, அவரது அங்கிசன் (அநுக்ரகததைப் பெற்றவொரு வன்) அநுமசீலனென்று தெரிவித்தனா. இந்தப்பிரசங்கத் தால் நமதன்பருக்குண்டான ஸாதகம் யாது? இவரோ அநு மான் சிவனது பூரணாமிசம பூரணாமிசம் என்று பொங்கி வழிகின்றவா. இவரது பூரணககுரஙகை அமிசகட்கததாற் கவிராயர் சேதிததுவைத்தாராகையால், இவரது எண்ணத் துக்குக் கவிராயா பாடல் விகாதம்பணணியதாகவே முடிந் தது. பிள்ளைத்தமிழு மிதனோடுதானே யினைபபடடொதுஙகிய வாறறிக. இந்தககவிராயா அநுமான் சிவனானெனறதைப் (புத்திசாலிகள் தெளியும்பொருட்டு) பின்வாககாலும இனி து பிரகாசபபடுததினா. அநுமான் சஞ்சீவி பர்வதங்கொ ண்டு வரப்போன ஸங்கர்ப்பததில ஸ்ரீ கைலாசததைநெருங்கி யவனைச்சுட்டி ஸ்ரீபாாவதியாருக்கு ஸ்வாமி காடடியதாகவும் அப்போது அவன் ஸ்சுவாமியைத்துதிகது அப்பாறசென்ற தாகவும "துலங்கும வெள்ளியங்கைலையீசன - உமைக்குக் கையா லே - வாயவின சுதனிவனெனறு காட்ட, அவரைத்துதிசெய்தப் பாலே" சென்றானென்னும் பகுதியால் நன்கு விளக்கினர். "வாதசேய்" என்று கமபனவாக்கு இழுக்கடைந்ததுபோலா காமல "வாயிவின் சுதன்" எனறு இவாவாககுச செழித்தோங் கியததறிக. அம்மையிடம வாயுசுதனைப பிரஸ்தாபிததபகவான் எமது அமிசமாகிய அநுமான் என்று ஏன்சொல்லவில்லை? அவ்வநுமான் தானாகியசிவனை ஏன் துதிசெய்து போயினன்? கம்பராமாயணக்கடலைக் கரைகண்டவராகப் பூர்வபட்சிவழு த்திய சீகாழிக்கவிராயர் கம்பன் கூறாகாத "ருத்ரனங்கிசன நுமசீலன்" என்ற (தனது) சித்தாந்தத்தை காட்டி நமதன்ப ருக்குத் துக்கத்தை யூட்டியவாறென்னை? இந்தக்கவிராயர்

இராமநாடகமாத்திரமேயன்றி வேறுநூல்களுஞ் செய்திருக்கின்றனர். அவற்றுள், தமது ஸ்வக்ஷேத்திரமாகிய சீகாழித் தலபுராணமொன்று. இந்தப்புராணத்தில், "பிறந்திறந்துழல் தெய்வமாம் பிணங்களைப் பாடி-யறந்துறந்தலைந் தொழிந்தனை யரும் பெருங் காழி - சிறந்த மான்மியம் பாடெனச் சிதம்பர முனிவன் - அறைந்த சொற்கொடு சொற்றனன் அன்பினு லிதையே" எனனுமிந்தத் திருவாக்கால் இராமனையே பிறந்திறக்குந் தெய்வப்பிணமென்று வெளிப்படுத்தினா. இராமனையே திண்டாட்டத்தில் விட்டிருக்கும்போது அநுமானை அவா மதித்தாரெனல் யாங்ஙனம? இராமநாடகம் பாடிய தோஷத்தை கவிராயா பரிகரித்துக்கொண்டமையால், ஸ்ரீகைலாசபரம்பரைத் தருமபுர ஆதீனம் ஸ்ரீ சிதம்பரநாதமுனிவருக்கு அடிமை பூண்ட அவருக்கு விஷ்ணுபாதவபுத்தி யாண்டுமுண்டாயினதின்றெனவறிந்திடுக. "இனைய காதையீண் டியம்பவும் வல்லனோ தருமை-முனைவனைபுசால சிதம்பர நாதமா முனிவன் - வனையு மாரிய மொழிவழி யருந்தமிழ் வகையால் - எனைவிளம்புகென் றேதனுமிது துணிந்தனனயான" என்னுந் திருவாக்கால், சைவசித்தாந்த சிகாமணியாய விளங்கினா கவிராயரென்று தெற்றென விளங்கியது. விரிக்கிற்பெருகும். நிற்க.

நமதன்பர் சைவ பரமாசாரியா நூலகொண்டு அநுமான் சிவனென்று தாபித்ததாக மகிழ்ந்தாா. எங்ஙனமெனின், ஸ்ரீமத் அருணகிரிநாதரருளிய திருப்புகழில 'கருவடைந்த' என்னும் பாடலில "கெடுபீலனா-எரியனென்று கைப்பற்றுகண்டனுமனென்று மொப்பற்றவண்ட - ரெவருமிந்தவாக்கதது வந்து" என்று கூறப்பட்டிருக்கிறதென்றும், இதனை யநுஸரித்தே அனந்தபாரதியாரெனபவர் தாமியற்றிய இராமாயணத்திருப்புகழில் அநுமான் சிவாம்சமென்று கூறினரென்றும, இந்த

வுண்மைகெடுமாறு மழவை மகாலிங்கையரும், புஷ்பரத செட்டியாரும் ஷை பாடத்தைத் திருத்தினார்களென்றும், அவ்வாறு திருத்தியும் அவர்கள் திருத்திய பாடங்கள் சந்தச் சிதைவுகொண்டு விளங்குவதால் அன்னோரது மனோரத மீடேறவில்லையென்றும் கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்தார். ஈண்டிவரது சிரிப்பு அழுகையாய்ப் போகும்படி எமதுண்மையைச் சிறிது பிரகாசப்படுத்துவாம்.

இவரெடுத்துக்காட்டிய "மைப்பற்றுகண்ட னனுமனென்றும்" என்னும் பாடம் எந்த ஆதீனத்து ஏட்டுப் பிரதியிலுள்ளது? அல்லது எந்த பூர்வீக சைவவித்வான்களிட மிருந்த பிரதியைப்பார்த்து எழுதியது? அல்லது எந்தப் பெரிய பண்டிதர் வெளியிட்ட அச்சுப்புத்தகத்திலிருந்து எடுத்தெழுதியது? இதற்கொரு கதிகாட்டாம லிவரெழுதிக்காட்டிய பாடம் (அநுமானமேல் ஆணை) முக்காலுந் தப்புப்பாடமேயாம். எடுத்துக்காட்டொன்றுமின்றி இவர் கிறிவைத்தது சபையேற மாட்டாதென வறிந்திலர்போலும். இவர் பிரஸ்தாபித்த பாரதியார் இராமாயணத் திருப்புகழ் பாடியபோது இராமாயணத்தை யநுஸரிக்க வேண்டியது கடமை. அப்படிக் கின்றித் திருப்புகழை யநுஸரித்தாரெனல் யாங்ஙனம்? அந்தப் பாரதியார் நான் அருணகிரியார் திருப்புகழை யநுஸரித்து இதனைப் பாடினேன் என்று யாதேனுஞ் சொன்னரா? வீணப்வாதத்தைப் பாரதியார்மேலேற்றிக் களித்தது அவரைத் தூற்றியதாகவே முடிந்தது. ஒருகால் அவர் சிவனே அநுமான் என்று பாடியிருந்தால் அது வான்மீகத்தாலுதையுண்டு அழியுந் தன்மையாய்க் கேடுசூழப் பெறுமென்க. "திருப்புகழ்" என்பது "கருப்புகழைக்கேட்குமோ காணமயில்வீரன் திருப்புகழைக்கேட்குஞ் செவி" என்ற திருவாக்கானு மறிந்தி

டுக. பாரதியார் திருப்புகழோடு வைபைத திருப்புகழொன்று உலகில் வழங்கிவருகின்றது. இந்தத்திருப்புகழ்கள் ரூடியால் வெளிவரத்தக்க யோக்யதை பெறுதனவாம். யோகத்தினால் ஒருவாறு அந்தந்த நூல்களை அபிமானித்தவர்கள் சொல்லிக் கொள்ளலாம். எமது (அருட்டலைவர்) அருணகிரியார் திருப்புகழொன்றே யோகத்தினாலும், ரூடியினாலும் "திருப்புகழ்" என்று சிறந்து விளங்குவதை மறுப்பா ரொருவருமில்லையென வறிக. ஒருவன் புத்தகக்கடைக்குச் சென்று திருப்புகழ் வேண்டும் என்று கேட்டால், கடைக்காரன் அருணகிரிநாதர் திருப்புகழையே எடுத்துக் காட்டுவன். வேறு எந்தத் திருப்புகழையும் அவன் தனது நினைவிலே கொள்ளான். இன்ன பாரதியார் திருப்புகழ் - இன்னவைபைத திருப்புகழ் என்று சுட்டிக்கேட்டால் அவை உண்டு அல்லது இல்லையென்று பதில்கூறுவன். இவ்வுண்மை தெளிந்து ரூடித்திருப்புகழைக் கைக்கொள்ளும் பெரியோர் அத்திருப்புகழாசிரியராகிய (எமதுசுவாமிகள்) அருணகிரிநாதர் "கைப்பற்றுகண்டனனுமன்" என்று சிவநிந்தை தோன்றக் கூறினரென்பதை யாங்ஙனமொப்புவர்? சிவனை அப்பனே என்றது அவருக்கு அங்கீகாரமாயின்; சிவனார் பரபாதகரல்லரென்பது அவரது துணிவாக வேண்டும். அப்படியாகுங்கால், "காணமயில்வீரன்" வெறும் புகழினாலேயே பெருக்கத்தக்கவனாவன். சிவன் அருமான என்று அவர்பாடியருளும் அவருக்குச் சிவபரத்துவவுண்மையே சிறந்ததென்னின். உண்மை இதுவென்று தெரிந்தும் நடுநிலைகோடாமல் சிவனையும், அவரது மனைவிமக்களையும் வந்தித்துச் சைவநலம் பேணிநின்ற குற்றம் அவர்மேலேறிக் கூத்தாடும். இன்னும் இத்தகைய பல அபாயங்களுக்கிடஞ் செய்வதாகிய பூர்வ பட்சியினது (திருப்புகழ்ப்) பிரசங்கம் தூர்த்தப்பிரசங்கமா யொதுக்கத்தக்கதென்பதே அமைவுடைத்து.

மேல் நியாயங்களால் இவரது தப்புப்பாடத்தைத் தொலைத்தோமாகையால், சைவர்கள் உண்மையைத் திருத்தினார்களென்ற இவரது அசட்டுரையையும அடியோடே தொலையச்செய்வாமென்க. இவாகாட்டிய மகாலிங்கையர்-புஷ்பரதசெட்டியார் என்னும் இருவரே யன்றிப் பின்னுந் திருப்புகழை அச்சிட்ட பெரிய வித்வான்களாகிய திருப்பாதிரிப்புலியூர்-சிவசிதம்பரமுதலியார், அவரைச்சேர்ந்த வடக்குப்பட்டு—த. சுப்பிரமணியபிள்ளை இவர்களும் இவரது தப்புப்பாடத்தைக்கறறு வெளிவந்தாரிலலை. இவர்கள் நிஷ்பக்ஷபாதிகளென்ற சத்தியத்தை ஈண்டு விளக்கிக்காட்டுகிறோம்.

மகாலிங்கையர்

"நெடுநீலன எரியதென்று மருதநிற் சிறந்தவனுமன"

என றுதிருததினரெனவும,

புஷ்பரதசெட்டியார்

"நெடுநீலன்—எரியனும மருத்துச் சிறநதவனுமன"

என் றுதிருததினரெனவும,

அவ்வண்ணந் திருத்தினோ தாம திருத்திக் கொணடவைசந் தச்சிதைவால் அழிநதமையை நோக்கலாபோலும் எனவும நமதன்பா பழிமொழிகூறிய பாழ்த்தமொழிக்கு யாம் இனித் தக்க பரிசளிபபாம. மேற்கூறிய சைவபண்டிதாகள் எப்படியிருந்த மூலபாடததைத தமதிஷ்டம்போற் திருத்தினாகள்? இவரது சுத்தபாடததை முன்ன ரெழுதிக்காட்டி, பின்னர் அது திருத்தப்பட்ட அசுத்தநிலையை யெவர்க்கும் விளங்கக்காட்டுத லாவசியகம. அவ்வாறு செய்வதொழிந்து "திருத்தினார்கள்-திருததினாகள்" என்ற திருத்தியில்லாத வார்த்தை சிரித் தொதுக்கப்பெற்றவாறறிக. முதல் இவர் பாரதியாருக்கு ஆதாரமென்று காட்டியபாடத்தில் "மைப்பறறுகண்டனனுமன்" என்றதே சுத்தநிலையென்னும், அது "மருத்திற் சிறந்தவனுமன்-மருத்துச் சிறந்தவனுமன்" என்று திருத்தப்பட்டமையே அசுத்தநிலையென்றும் இரு

கால் சமாதானம் பிறக்கலாம். இந்தச சமாதானம் நிலைக்காதவகையை முன்னரே யாமெடுத்துக்காட்டி அலசியுள்ளோமாகையால், இனி வேறுகதிகூறியே பிழைக்கவேண்டியது. இவருக்குத தேறத்தக்க வேறுகதி யாது? பகரேர்ந்தோன் பாதசேவை பண்ணிக கிடத்தலே இவருக்கு முடிவில் பிராப்தமாகத்தக்க உயர்கதியாம.

இவர் பாரதியார் தேடியதாக வொப்பிய பாடத்துக்கு வேறானதெல்லாம் திருத்தியபாடம என்று கூறுபவராகையால், சிவசிதமபரமுதலியாரும், வ. த. சுபபிரமணியபிள்ளையுஞ்சேர்ந்து அசசிட்டபுத்தகத்தில "நெடுநீலன்-எரியதென்றும்-ருத்ரறசிறந்தவனுமன்" என்று வெளியிட்டிருப்பதையும் திருத்தியதென்றே கொண்டு தள்ளவேண்டியது. அங்ஙனஞ் செய்திலா. எதனாலெ? "ருதரற சிறந்தவனுமன்" என்று அவாபதித்தது "மைப்பற்று கண்டனனுமன்" என்றதனோடு கருததுவகையால விரோதியாமையால. அவ்வளவேயன்றிப பாடபேதம ஒன்றைபொன்று சீறுவதால், இரண்டிலொன்று தேறவேண்டியது. இரண்டிலெதுதோந்தாலும, சிவன் அறுமான என்றது நிலைக்குமேயெனின, பொருளறிந்தாாமாட்டு நிலைககாது. பொருளறிந்தார்மாட்டு நிலைக்குமபாடநதான யாதெனின், "ருதரற் சிறநதவனுமன்" என்ற பாடமேயாம. மற்றது (மைபபற்று கண்டனனுமன் எனறது) வேரறறதேயாமென்றுணர்க. அதனை யுணாததவேணடுமெனின், இவ்வொருபாடமேயனறிச சைவர் வெளியிட்டிருக்கும் ஏனையபாடங்களையு மொருசேரத்திரட்டிககாட்டி எமதுண்மையை நிறுத்துவாம்.

"எரியதென்றும-ருத்திற்சிறந்த"
"எரியனும்ம-ருத்துச்சிறந்த"
"எரியதென்றும்-ருத்ரற்சிறந்த"

என்னு மிந்தமூன்று பாடங்களும் பொருள்விளஙகாமையால் சேர்ந்த (எழுத்துப் பிறழ்வினுலாய) பாடங்களாம்,

கூர்ந்து நோக்கினர்க்கு அந்தப்பாடங்களை யெவ்வுமாறு அமைத்துக்கோடல் சுலபமாம். முதல் ருத்திற்சிறந்த என்பதன்முன்னுள்ள மகரத்தைச் சேர்த்துப் படித்தால் "மருதத்திற் சிறந்த" என்றும், இரண்டாவது ருத்துச்சிறந்த என்பதனமுன்னுள்ள மகரத்தைசசேர்த்துப் படித்தால் "மருததுச சிறந்த" என்றும, மூன்றுவது ருத்ரறசிறநத எனபதனமுன்னுள்ள மகரவொற்றைச் சேர்த்துபபடித்தால் "மருதரற் சிறநத" என்றும் அமையும். மகரவொறறிற் புள்ளியைத்தள்ளிவிட்டால "மருத்ரற் சிறந்த" என்று கோடலாம். மீணடும, ருத்ரற் சிறநத என்பதில் ரகரததை ஏனைய பாடஙகளைபபோலத் தகரமாக்கி "ருத்திற சிறநத" என்று அமைத்து, புள்ளிநீககியமகரத்தை முன்வைத்துப பாாததால "மருத்திற சிறந்த" என்று நிலைத்து, எலலாப்பாடஙகளு மொரோபொருளினின்று, மருததுவானவன் சிறநதஅனுமானுயினன் என்னும் ஸத்தியததையே நிலைநாட்டும். மூனறுவது பாடத்தார் மருத்துவைச் சந்தசசிதைவின்றி வைத்துப்பாாககப பாலமுறி வைஷ்ணவா வழங்குந தபபுக்கதையைத்தழுவி ருதரனைப்புணாததிவைததாா. "ருதரறசிறந்த" என்றபோது ருத்ரனென்பது இரண்டாம வேற்றுமையாகி, இரவி-இந்த்ரன் உந்தியிறைவன்-நெடுநீலன என்று முதலவேற்றுமையிலமைநத ஏனைய சொறகளோ டிணஙகாமல் பிசகாகின்றது. முதறபாடத்தாரும, மருத்திற் சிறந்த என்று ஏழாம் வேற்றுமை விரித்திடர்ப பட்டு மயஙகினர். இவ்வாறு இன்னோபா னிகழ்ந்தபேதங்கள் திருத்துதலல்ல. பொருததும் வகைதெரியாமல அமைத்துக்கொண்டபடியாம். ஆயினிவறறின் சநதச்சிதைவுக்கு யாதுகதியெனின், கூறுதும.

புஷ்பாதசெட்டியார்பாடம்.

"எரி - யனும் - ம - ருத்துச் - சிறநத - வனுமன்" என்ற பாடத்தில், எரி=நிரை. யனும்=நிரை. ம=நேர். நிரை நிரை நேராகவமைந்த கருவிளங்காயை இந்தக்கவிராயர் கவனி

யாமல் சந்தச்சிதைவு என்று பந்தயம்போட்டது அந்தக வியாபாரமாகவே முடிந்தது. இந்தப்பாடத்தில் "மருத்து" என்பது எழுவாயாகவேநின்று வேற்றுமைப் பேதங் கொள்ளாது சந்தசசிதைவுமின்றி நிலைத்தவாறறிந்து, இவரது "மைப்பற்றுகண்டன்" என்னுமஅலைத்துப்பாடத்தைத் திலதர்ப்பணம் பண்ணி அடங்கிவாழ்வாராக.

"எரியதென்று மருத்திரசிறந்த"
"எரியனும் மருத்துச்சிறந்த"
"எரியதென்று மருத்ராற்சிறந்த"
"எரியனென்று மைப்பறறுகண்டன"

என்னு மிந்தநான்குபாடங்களையு மொருசேரத்திரட்டிப் பார்க்கும் விவேகிகளுக்கு முதன்மூன்றும் ஸஜாதியும், கடையிலுள்ளது கடையான விஜாதியுமென்பது சொல்லாமலே அமையும். அம்மூன்றினுமுள்ள "சிறந்த" என்பது பொய்ப்பாடத்திற் சிறவாமல பறந்தவாறு முணர்க. விரிக்கிற்பெருகும்.

இவர் முடிவாக ஒரு பெரியபிரமாணந்தேடி யுபாதியடைந்தார். என்னெனின், சிவத்துரோகியாயிருந்து மாய்முட்டிச்செத்த பிள்ளைபெருமாள் என்னும் ஒரு தூர்த்தனது பாட்டைத் துணைகொண்டெழுந்ததேயாம். பரம பாஷண்டியாகிய இவனது ஈனப்பிரபந்தத்துக்கு யாம் பதிலுரைக்க மனமின்றி விடுத்தாம். இவனுக்குத் தலைமாட்டுக்கொள்ளியா யிருந்தவர் சைவ-எலலப்பநாவலரென்று இவரறிந்திலர்போலும். இவனது "பரப்பிரமவிவேக"த்தை "பரப்பிரமவிளக்க"த்தால் காளமேகப்புலவர் கட்டறுத்தொழித்தனர். அதினையே யாம் "சிவதத்வசிந்தாமணியாற்" சிதைத்து நிர்மூலப்படுத்தியிருக்கிறோம். இவைகளை இனியேனும் பூர்வபட்சியார் படித்துத்தெளிந்து குணப்படுவாராக.

அதவா சிவனே அநுமானென்று கொள்வோம். எவ்வாறாயம்? சிவனுக்கு நந்திபகவான் வாகனம். விஷ்ணுவுக்குக் கருடன் வாகனம். இன்னோர் எப்போதும் ஒரேநிலைமை

யினராய் விளங்குகின்றனர். அநுமானுய்ப் பிறந்தசிவன் எப்போதும் அந்தநிலைமாறுதிருந்தால் பூர்வபட்சிமதம் பெரிதும் மணக்கும். அப்படிககின்றி அந்தச்சிவனுக்குப் பலபிறவிகளை நமதுதோழுரொப்பிக் கூத்தாடுகின்றவராகையால், பலருக்கு அடிமையாகத்தக்க சிவனை இராமதூதன், இராமசேவகன், இராமனது வாகனம் என்று கொணடாடித் திண்டாடுவது வெறும்பேதமையென்னுது வேறு யாதென்று கூறுவர் பெரியோர்? பாணனுக்குச் சிவன் தூதுவனுயும், ஸேவகனுயுமிருந்து ஒழுகியதுபோல இராமனுக்கும அருள்புரிந்தானெனறு சிலா கூறுகின்றனர். இதற்குப் பூரவபட்சியாா முகததைநெயஙகேவைத்துக்கொள்வாரோதெரியாது. இவரதுதுர்வாதம தலைதூககமாட்டாமல பலவிதத்திலும் நாசமாகியதால, இவரது ஆஞ்சநேயபரத்துவத்தை இம்மட்டினிறுத்தி இவர்சாதிதத இராமவைபவத்தையுஞ சிறிதுவிசாரித்தொழிபபாம.

இந்தராமவைபவம பசையிலலாதது. இவரது குரங்கு மகிமையிலேயே இராமனது வைபவம விஸ்தரிககப் பட்டது. அதனை அவ்விடததிற்றுனே குமைத்து நிர்மூலப்படுத்தினேம. இவர் தனியே பதிதத இராமவைபவத்தில், குரங்குவைபவத்தில வந்ததற்கதிகமாக வொன்றும் வரவில்லை. கோசலை முகத்திற் பிறந்தானிராமன், அவன் அயோனிஜன், அபபிராகிருதன் என்பனவாதிஅஸங்காத்மவாதத்தை நிரப்பிய கோவிந்தாசாரியுபநிஷத்தும், அதுபோன்ற வேறுவிஷயங்களும் மூடர்கள் பார்வைக்கு முழுதும்நிரப்பி வெளியிட்ட நமதன்பரது இராமவைபவசிந்தாமணியைத் தொடாமல்விடுத்தல் மரியாதையன்றுகையால், அதிற்சிறிது விசாரிப்பாம. கோவிந்தாசாரியென்பவர் மூடைந்துகொடுததமையால், யாம் கோவிந்தாசாரியுபநிஷத்தென்று அதனைப பரிகசித்தோம்.

இந்தக் கோவிந்தாசாரியுபநிஷத்தில், இராமனை அப்பிராக்ருதன் - அயோநிஜன் என்று கூறியதைத் தகி

பரமாகக் கொண்டாலும் கோசலைமுகத்தி விராமன் பிறந்தான் என்றது மாத்திரம் கேவலம் அநுசிதமென்க. அப்படியொருகால் இராமன் பிறந்திருப்பானாயின், அவனுக்குப் பால்ய கௌமாராதி தேகவிகாரங்களும, மரணயாதனையுங் கேட்கப்படுதல் கூடாது: பிரமன்முகத்திற் பிறந்த உருத்திரனுக்குக் குழந்தைப்பருவம்-தேகவளர்ச்சி-ஜராமரணங்கள் முதலியன கேடகபபடடனவா? உமையோடு பிறந்ததாகவன்றோ அவரது அவதாரங் கேட்கப்படடது? இவைகளையெலலாம பகுத்தறிந்து நூலியற்றும புத்தியிருந்தால், கோவிந்தாசாரி முனஜாக்கிரதைப்பட்டிருப்பர். அவருக்கே யிலலாததெளிவு நமதுபூரவபட்சியாருக்கு எங்கிருந்துவரப்போகிறது? அவரெழுதிக் கொடுத்ததே போதுமெனறு துடைதட்டிக்கொணடு இவா வெளியில் புறபபடடுவிடடாா. இபபோது பசபசவென்று விழிப்பதிற் பயனில்லை, ஒருபணடிதசபை சோத்து இன்னோதேடிக்கொணட "குணடகோளகோபநிஷத்து-கண்டபேரண்டசண்டாளோபநிஷத்து" முதலியவைகளைப் பிரக்ஷிப்த மல்லவெனச்சாதித்து முன்னுககுவருவாராக. நிற்க.

கம்பராமாயணத்தில்,

"இறுவரம்பினிராமவெனறேரும்பர்
நிறுவரென்பதுநிச்சயமாகலான்
மறுவின்மாக்கதைகேட்பவாவைகுந்தம்
பெறுவரென்பதுபேசவுமவேண்டுமோ."

என்று கம்பன்கூறியதற்குப் பூரவபட்சியார் ஒருபுத்துரையெழுதி இறுமாந்தனர். என்னெனின், "சரமதசையில் இராமவென்று உருத்திரமூர்த்தி நிறுத்துவரெனப்படுவது திண்ணமாதலால், குற்றமற்ற அப்பெருங்கதையைக்கேட்பவா பரமபதமடைவா ரென்னப்படுவது சொல்லவும் வேண்டுமோ" என்று பொருள்விரித்து, மேல் "கண்ணுதற் கடவுள் காசியில் தன் காதலியாகிய மலைமகள் செவிக்கண் இத்தாரகமந்திரத்தை யுபதேசித்தனாலும், அவ்வாறே ஆண்டிறக்குநர்க்கும் அருளலானும் அப்பெற்றிநோக்கியன்றே 'இறுவரம்பினிராமவென்றேரும்பர் - நிறுவ

ரென்பது நிச்சயம்' என்றார்" என்று பதயோஜநி வியாக்யானங் கூறித் தமது பண்டிதநிலையை நிறுத்தி மகிழ்ந்தார். அந்தப்பாட்டில் காசிபிரஸ்தாபமே கிடையாது. சாகிறவர்கள் (எங்குச்செத்தாலும்) நிரியாணதசையில் இராமவென்று ஸ்மரிப்பார்களாயின், மேலுலகவின்பத்தை யெய்துவர், சாகிற சமயத்தில ஸக்ருத்தாய் ஸ்மரிப்பவர்களே மோக்ஷ நலத்தைப் பெறுவார்களானால், அவ்விராமனது கதையை ஸாங்கமாய் (உயிரோடிருக்கிறகாலத்தில்) ஒருவர்பாராயணஞ்செய்யக்கேட்பவர்கள் வைகுந்தநாடெய்துவரென்பதிற் சந்தேகமுண்டோ? உறுதியாய் அடைவார்களென்று பிரகாசப்படுத்தினமையே அந்தப்பாடலின் கருத்தாம். இதனைவிடுத்து, "சரமதசையில் இராமவென்று உருத்திரமூர்த்தி நிறுத்துவர்" என்று பிரசங்கித்ததற்கு ஆதாரமென்னை? "ஒரும்பர்" சிவனென்றும், "நிறுவரென்பது" காதிலே நிறுத்துவாரென்றும் என்று கம்பன்பாட்டிற் கருத்துரை கற்பித்தநண்பர் அந்தக்கம்பன் நூலில எங்காவது இராமநாமத்தை இறக்கின்றவர்கள் காதிலும், மலைமகள்காதிலுங் காசியில சிவனுபதேசிக்கின்றாரென்னும் விளக்கத்தை எமக்குக்காட்டி முன்னுக்குவருவாரா? கம்பன் மனதிலேயே நினையாத அஸத்விஷயங்களை அவன் பாட்டிலுள்ளதாக மனம்போல குடித்தெழுதிய அந்நண்பரை பிடித்தாட்டுங் கலிபீடையின்பயனென்றே துணிந்தனர் பெரியோரென்க. இந்தக்கம்பனுக்கு முதநூலென்று துணியப்பட்ட வான்மீகத்தில இந்த அவலட்சணக்கதைக்கு அணுத்துணையாதரவு கிடைக்குமா? யாரோ வழிபோக்கர்கள் (அசிஷ்டர்கள்) அவிவேகத்தாற் பரப்பிவரும் அவலக்கதையைக் கம்பனுங் கருத்திற்கொண்டானென்றிவர்கரைந்தது நல்ல தவமில்லாமையின்பயனேயாம். இனிக் காசியிலிறக்கின்றவர்களுக்குச் சிவனார் தாரகோபதேசஞ்செய்து தமது ஸாரூபயந்தந்தருள்வரென்பது சத்தியம், தாரகமென்றது தமது பிரணவதாரகமாம். இராமதாரகமன்றும். இராமதாரகமாயின், இராமஸாரூப்யம்

பிராப்தமாகவேண்டும். இராமனதுரூபம் சரயுநதியிலழுகி நாற்றமெடுத்து நிர்மூலமாய்ப்போகுமானால், அந்தரூபத்தைப்போல வொருவனுக்குப் பேறுண்டாயிடுதல் ஸங்கதமாவது யாங்ஙனம்? இராமன் பிறப்பதற்குமுன்னும், இறந்ததற்குப்பின்னும் அவனது ரூபப்பிரஸத்திக்கிடமேயின்றாகையால், அத்தகைய அஸத்ரூபப் பிராப்தியை சாஸ்திரமொப்பித் துதியாதென்க. இராமன் தாரகப்பொருளாகானாயின், “இராமதாரகம்” என்றுபிரஸ்தாபமுண்டாயினவாறென்னையெனின், உண்டாயினதால வைஷ்ணவர்களுக்கொருவாழ்வும வந்துவிடவில்லை. நிகண்டுவில் விஷ்ணுநாமக்கோவையில் (கிருஷ்ணநாமத்தைப்போல்) இராமநாமங் கிடையாது. இதனால், இராமநாமம விஷ்ணுவுக்குசசொந்தமெனல் சோர்வடைந்துபோயிற்று. விஷ்ணுஸஹஸ்ரநாமத்தில இராமநாமமுண்டு. அவ்வாறே சிவஸஹஸ்ரநாமத்திலும் இராமநாமமுண்டு. இவ்வுண்மையாலும், காசியிலிறக்கின்றவர்கள் இராமஸாரூபயம் அல்லது விஷ்ணுஸாரூப்யத்தை அடையாமல் சிவஸாரூப்யத்தையேஅடைகின்றமையாலும், இராமதாரகப்பிரஸ்தாபம் பிரணவதாரகத்துக்குப் பரியாயமாகிச் சைவமந்திரமாகச் சாதிக்கப்பட்டமையே நிலைபேறாயினதுணர்க. அதனை விஷ்ணுவாசகமாகக் கொண்டால், பரசுராம பலராமர்களுக்கும் அது சிறந்திடல்வேண்டும. அவ்விருவர்கதியோ “மாவிடத்துவென்னை மயிராமிராமனையும், மாலடுத்த மாதாவை மானவே-மேலெடுத்த, வென்றிபரசாற்கொன்ற வீரனையும் விட்டனையே” என்ற “சிவதத்துவசிந்தாமணி” யில், சிதைவுண்டவாறறிக. பரசுராமனைப்பெற்ற ஜமதக்கினியும், இரகுராமனைப்பெற்ற தசரதனும், பலராமனைப்பெற்ற வசுதேவனும் சிவபக்தர்களாகையால், தமது மக்களுக்குச் சிவவாசகமாகிய இராமநாமத்தையிட்டு மகிழ்ந்தார்கள். இராமநாமம் இவர்கள் பிறப்பதற்கு முன்னும், இறந்ததற்குப்பின்னும் சிவநாமமாகவே நிலைத்து ஜீவிக்குமாறறிந்தடங்குக.

இனி யாமிவரிஷ்டம்போல விணங்கி விவகரிப்போம். காசியில் (இறுவரம்பிலுபதேசிக்கப்படும்) இராமமந்திரத்துக்கு வேறுதலங்களி லாதிக்யமெப்படி? அந்தப்பதியிலுண்டாகுந் துறக்கவின்பம காசிக்ஷேத்திரத்தினதா? இராம மந்திரத்தினதா! காசியில விஷ்ணுவுக்கு ஒருபாத்யதையு முண்டாயினதிலலையறிக. சிவன விஷ்ணுவினிடம காசியைப பிரஸ்தாபிக்கையில "[illegible]" என்றும், விஷ்ணுவானவர் சிவனிடம காசியைப் பிரஸ்தாபிக்கையில, "[illegible]" என்றும் வெளிப்படுத்திய உபநிஷத் வாய்மைகளை நமதன்பரறிநதிருநதால, இராமமந்திரத்தால் காசியின்கண்ணே துறக்க முண்டாவதாகச் சொப்பனங்கண்டதை வெறுத்து, சினந்திடுவரென்க. சிவனூ காசிக்ஷேத்திரத்தில, தமது பிரணவதாரகமநதிரத்தை யுபதேசித்து, சிவ ஸாரூப்பியத்தைப் பிரஸாதித்து அருள்புரிநதுவருகின்றாரென்பது ஸித்தம். இவர் எடுத்துக்கொணட "இறுவரம்பில்" என்றபாட்டில, காசியி லிறக்கிறவர்களுக்குச் சிவன் இராமநாமத்தை யுபதேசிக்கின்றா ரென்பது ஒருகால் பெறபபடினும "கண்ணுதற்பிரான் தனது காதலியாகிய மலைமகள்செவிக்கண இத்தாரகமந்திரத்தை யுபதேசித்தலானும்" என்று இவாபோட்ட பேய்க்கூச்சலுக்கு ஆதாரவ்யாது? மலைமகளார்க்குஞ் சிவபெருமான இறுவரம்பிற்று ளுபதேசித்து இராமநாமவைபவத்தை இனிது விளக்கினார் போலும். உபயுக்தமலலாத ஸ்தானங்களிலெல்லாந் தலைதுறுத்துக் கொண்டு தனதபீஷ்ட மீடேறவிரும்பிய பூர்வபட்சியினது விஷயத்தில் வித்வான்கள் சபைசேர்ந்து, என்னபரிசளிக்கலாமென்று யோசிக்கின்றனரென்க.

இனி அதர்வசிகையில், "[illegible]" என்றதற்றொடக்கத்து வாக்கியம் ஆத்மஜ்யோதியை [ஆவர்த்திப்பிக்கின்றமையாலும், உச்சாரணமாத்திரத்தில பாசத்தினின்றுந்தாண்டி யுபரச்செய்கின்றமையாலும் ஓங்காரமாகுமென்றும், பரமாத்மாவினிடத்தில் நமஸ்கரிப்பிக்கின்றமை

'யாலும், சேர்ப்பிக்கின்றமையாலும பிரணவமாகுமென்றும் விசதப்படுத்தி யிருக்கின்றது. ஜாபாலோபநிஷத்தில "అత్రహిజన్తోర్మరణేమూర్ఛః" என்னும்வாக்கியம பிராணோத்கிரமணகாலத்தில, காசிபபதியினகண்ணே மூாச்சிதர்களாகிய ஸாவப்பிராணிகளுககும ஸ்ரீருத்ரபகவான தாரகமாகியபிரணவத்தை யுபதேசிக்கின்றாரென்று கூறுகினறது. பாராசரபுராணத்தில "తత్రైవతోజన్తోర్మరణస్య" என்னும் வாக்கியம் உமாதேவியைப்பாாத்து, சேவலமாகிய ஜநதுககளுக்குங்கூடக் காசியில் உதகிரமணகாலத்தில வேதவேதாநதஸாரமானதும, பிரணவமென்னும பிரஹமமாகிய எம்மை அர்த்தமாகவுடையதும, ஸமஸாரத்தைக கடபபிப்பதும, பரிபூரணமானதும், மேலானதும், தாரகமானதும், இருளைககடநததும், தோற்றமில்லாததும், ஆபாசத்தைக்கடந்ததுமாகிய எமமுடைய ரூபத்தைக் கிருபையினுலே பிரஸாதிக்கின்றோமென்று சிவபரஞ்சுடரருளியதாகத் தெரிவிககின்றது. இவவுததமபிரமாணங்களால தாரகமந்திரம் தசரதனது சேயினதென்று புலமபும அஸங்காதமவாதம் தொலைந்ததெனவறிக. பிரணவமே தாரகமென்று பிரணவம என்றசொலலாலும, ஓம எனனும அதன் வடிவாலும் வேதம அறுதியிட்டுரைத்தமையால சரயுநதியிலவிழ்ந்திறந்த (பூர்வபட்சியினது) இராமபிரானிடமேற்பிய தாரகத்வஸமர்த்தனம நிலைகுலைநததறிக. இராமரஹஸ்யோபநிஷத்தில் "రామం త్రిణేత్రం సోమార్ధ ధారిణం శూలినం పరం-భస్మోద్ధూళితసర్వాంగం" என்றுகூறி, இவர்களது இராமனுக்கே சிவஸாருப்யஸித்தி கைகூடத்தகக சைவகோலத்தைப் பிரகாசப்படுத்தியிருக்கு மருமையை நமதன்பருணர்ந்திருந்தால், காசிப்பதியில் இறக்கினறவர்களுக்குத் தாசரதியின் பெயரையே ஸ்ரீ சிவபெருமானுபதேசிக்கின்றாரென்று பிரசங்கித்து மானமழியார். இராமநாமம் தாரகமாயிடின், அவனதுரூபம் என்னாகவேண்டும்? இராமனை ஆசிரயித்திருந்தவர்கள் எண்ணிறந்த

வர். இவர்களுக்கு இராமனது ஸேவையாலும், இராமன பரமாத்மாவென்கிற ஞானத்தாலும், அவனது உபதேசத்தாலும அப்போதே மோக்ஷங்கைகூடியிருத்தல் வேண்டும. விபீஷணன் இலஙகையையாணடு காலங கழிககினமுன். அநுமான பிரமபட்டத்தை விருமபித் தவங்கிடக்கின்றுன். முக்கியதாசர்கள்கதியே யிவ்வாறுகுமாஞல, எனேயோர்கதியை யெடுத்திசைக்க வேண்டுமா? இராமஸாந்நித்யங் கிடைககபபெற்ற இராவணகுமபகாணர்கள சிசுபால தநதவகத்ராகளாய்ப் பிறந்து இடருழந்து மாய்ந்தார்கள. இவைகளுககு எனனகதி தேடினார் நமதன்பா? இவவாறு விசாரிததுத தெளிநதஸாதுக்கள இராமனுககு ஸேவகத்வமேயன்றி ஸேவயத்வமுரைக்க யாண்டுமிசையார். பஸ்மஜாபாலத்திலே "శంకరూపేణమాం సదా పూజయంతి" என்று தொடங்கிச் சிவாராதனப பிரகடனஞ்செய்துவந்து, "తత్రపూర్వస్యాం దిశి బ్రహ్మా కృతాఞ్జలిరహర్నిశం మాముపాస్తే దక్షిణస్యాం దిశి విష్ణుః కృతాఞ్జలిర్మాముపాస్తే" என்று கூறிய பகுதியால, காசிபபதியில பூர்வதிக்கில பிரமனும, தென்றிசையில விஷ்ணுவும சிரசிலேகூபபிய கையையுடையவர்களாய்ச சிவபரஞ்சுடரைத தியானஞ்செய்து கொணடிருககினறார்க ளெனறு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. இவவிருவரேயனறி இவாகளோடினப்பட்ட எண்ணிறந்தசாமபவர்கள் பஸமருத்ராக்ஷ பஞ்சாக்ஷரங்களுடன் சிவத்யானவிசிஷ்டாகளாய் அஙகிருந்துகொண்டு தவஞ்செய்கின்றார்க ளென்றும பிரகாசபபடுததப்பட் டிருக்கின்றது. உபாஸகர்களுள், பரம சிரேஷ்டராய்க் காசிப்பதியில பிரஸித்தியடைந்திருக்கும் விஷ்ணுவுக்கு உபாஸ்யத்வம யாண்டும் ஸித்தியாது. வேதமுதலியகலைகள் விஷ்ணுவை உபாசகர்-ஸேவகா என்று நன்கு தெளிவிக்குமாறு "தியாதா" என்று "నారాయణపరో ధ్యాతా" என்னும் வாக்கியத்தால் விசதப்படுத்துகின்றது. நாராயணோபநிஷத்திலேயே இவ்வாக்கியம நிலைபெறுயுள்ளது. அவர்

உபாஸ்யர் அல்லது ஸேவ்யராகும் பட்சத்தில் "నారాయణశ్చ శర్వ్యః" என்றொருவாக்யசகலம் பிறந்திடுதல் கஷ்டமாகாது. இவ்வுண்மைகளுக்கு முன்னர் "இறவரம்பினிராமவென்றோரும்பர்-கிறவரென்பது நிச்சயம்" என்ற கம்பனுரையிற் கட்டுக்கதையைப்புணர்த்தி நமதன்பா இராமனைத் தெய்வமும், தியேயனுமாக்கிவிடப் பார்த்தது தெருத்துாங்கிகளே மெச்சும்பெருமையுடைத்து. இராமன் சீதையினிடத்தில் "అత్రపూర్వంమహాదేవం ప్రసాదమకరోత్ప్రభుః" என்று கூறித் தனக்குச் சிவபிரஸாதமுண்டாகிய ஸத்தியததைத்தெரிவித்தனன். காமதேனுவைப்பூசிக்க இசையாதவொருவன் கழுதையைத்தேடி அதன்காலில்வீழ்ந்தது போல இராமன் சிவனைவநதித்தானெனறதை விரோதித்த கோவிந்தராஜன் (ஒருவியாகயாதா) இராமன் வருணனை வந்தித்தானென்று அந்தச் சுலோகத்துக்குப் பொருளுரைத்து இறுமாந்தான். இராமன் வருணனை மடையன்-கொழுத்தவன்-துஷ்டன் என்று பலவாறு தூஷித்தபகுதியை இராமாயணத்தில யாவரும்பாாக்கலாம. தனது ஆணைக்கஞ்சி வந்து சரண்புகுநதவருணனை இராமன் மஹாதேவனென்றும, பிரபுவென்றும், பிரஸாதித்தானென்றும் வந்திபபானா? மஹாதேவ சபதத்தைச் சிதைத்து அந்த நிர்மூடவியாக்யாதா இஷ்டம்போற புலம்பியதற்கு வைவஸ்வதன் கூலிகொடுததிராமற போகான். இந்த வோரிடத்திலன்றி மற்றோரிடததிலும் சிவபரஞ்சுடரை மஹாதேவநாமத்தாற் பிரஸ்தாபித்து இராமன் வந்தித்தானென்றதை அவ்விராமன் அநுமானைப் பரதனிடமனுப்பிய ஸந்தர்ப்பத்தில் எடுத்துப் பிரகாசப்படுத்தியிருக்கின்றோம். இந்த வியவஸ்தையால் தனக்குத் தெய்வமென்றும், தனக்குப் பிரபுவென்றும், தனக்குப் பிரஸாதித்தாரென்றும் சிவபரஞ்சுடரை இராமன் சாஸநம்பண்ணியசகலம் வெளிப்பட்டது. இதனால், இந்த்தாசரதியின்பேரைக் காசிப்பதியி லிறக்கின்றவர்கள்காதில் சிவ

னுபதேசிக்கிறு ரென்பதும அபஸித்தாந்தமாம். இவ்வலட்சணத்தையே கம்பன் கடைப்பிடித் துரைத்தானென று பிரஸங்கித்த பூர்வபட்சிமதமும் இந்தோடே தொலைந்த தறிக. விரிக்கிற் பெருகும்.

இனி நமதனபர் வான்மீகத்தில் இராமனுக்குப் பரத்வங் கண்டுபிடித்துவிட்டதுபோலச் சிலவுரைந்தார். என்னெனின், அயோத்யாகாண்டத்தில், "ஸ்ரீராமன் சூரியனுக்குட் சூரியனுயும, அககினிக்குள அக்கினியாயும், இறைவனுக்கும் இறைவனுயும, இலட்சுமிக்கும் இலட்சுமியாயும், பிறவுமாயும் விளங்குகிறு"னென்று பிரதிபாதிப்பதாயப் பரக்கத்தீட்டினுர். இது சுத்தபொய. அவ்விடத்தி லிருப்பதெலலாம இராமன் சத்தியம தருமம இவைகளால் நிறைந்திருப்பதால அவனுக்குச் சூரியன்-சந்திரன்-அக்னி-வாயு-மற்றையர் தமமாலாகிய வுபசாரங்களைச்செய்து பிரீதியடைநதனர் என்று பிரகாசப்படுத்திபிருப்பதேயாம. ஸ்ரீமத் அப்பா சுவாமிகள திருக்கயிலைகருச் செலலுங்காலையில், தமது உறுப்புகளெலலாநதேய்ந்து ஜீவபோதமிழநது நின்றநிலையில அவருக்குப்புலி-சிங்கமுதலியன காட்டில வழிகாட்டினவெனவும, சாபபங்கள் தமது சிரோமாணிக்கங்களையேநதி இருளைநீக்கி முனனடந்தனவெனவும, வாயுபகவான் அவரது தேகவெபபநதணியுமாறு மந்தமாருதம்வீசிப் பணிசெய்தனனெனவும, அவரைச சமணாகள கடலில் வீழ்த்தியபோது வருணன் அவரைபபணிந்து, அவரூர்ந்தெழுந்தருளிய தெப்பத்தைசசுமந்து கரையிற்கொண்டுவந்துசேர்த்து மகிழ்ந்தானெனவும் ஸ்காநதாதி யுத்திரந்தங்களுரைக்கின்றன. இவ்வருமைகளை நோக்கினுர்க்கு வான்மீகங்கூறிய தாசரதியருமை யொருபொருளாய் நில்லாது. வான்மீகருக்குத் தாசரதியைப் பரத்துவமாகச் சாதிக்க வாசையுண்டாயின் உத்தரகாண்டத்தில் பிருகு சாபங்காரணமாக இராமன் பிறந்து பெண்டைப் பறிகொடுத்துக் காட்டிலலைந்தானென்று அம்முனிவேந்தர் பிரஸ்தாபிக்க வாவசி

யகமில்லை. இத்தகையஜீவதர்மங்களின்னும் பலவுள. இவற்றை நமதன்பர் யோசித்து அடங்குவாராக.

இமமட்டிலமையாமல் அக்னிப்பிரவேசமான சீதையை யங்கீகரிப்பதி லாசங்கைகொண்டிருந்த இராமனை இந்திரன்-குபேரன்-வருணன்-பிரமன்-சிவன் முதலினோர் சந்தித்தகாலையில அவரவர்களும் அவ்விராமனைப பரதத்வமாகத் துதித்தார்களென்று ஒருமகிமை கண்டுகூறினர். இராமனிடம்பிரமன் கூறிய துதிகள் அவை. அவ்வாறு கூறியதனால் இராகவனுக்குண்டான மகிமை யொன்றுமில்லை. நவக்கிரக ஸ்தோத்திரங்களையும், அஷ்டோத்தரஙகளையும் பாரத்தால், இராமனதுவைபவம் வெட்டவெளியாகும். சூரியனைப்பார்த்து நீயே யெலலாமென்றும, நீயே ஜகஜ்ஜங்மாதி காரணவஸ்துவென்றும்,பிரமனுதிமூவரும் உனது ஆஜ்ஞையைச சிரஸாவகித்துக் கிருத்யகர்த்தாகளா யுலாவுகின்றனரெனவும வந்திதது வாழ்த்தும அதிசயஙகளுக்கு யாது சமாதானம? இப்படியே யேனைய கிரகங்களபரமான மகிமைகளையுமறிநது இன்புறுவாராக. துதிபரமாக இராகவனைக் கொண்டாடியவிடத்தில, சிவனுரது ஸம்பந்த மொன்றுமில்லை. இனி சிவனுரது பிரசஙகம் வருமாறு: ஹேராமா; இஙகே காலதாமதஞ் செய்யாதே, சீக்கிரம்போய்த் தமபி பரதனைப்பார். உனது தாய்மார் வருந்தியிருப்பதால், உடனே அவர்களைப் போய்பபார். இதோ உன் பிதா வநதிருககிறா பார் என்று அநுக்ரகித்து ஸ்ரீருத்ர பகவான அந்தாத்தானமாயினரென்று கூறப்பட்டது. இந்த ஸத்ய நிலையைப பரதனிடம அறிவிகக அநுமானை முன்னதாகவனுப்பிய ஸநதர்ப்பத்தில "[illegible]" என்று பிரஸ்தாபித்து மஹாதேவப் பிரஸாத ஸித்தியை வந்தித்தனன் தாசரதியென்றறிக. தாசரதிக்குத் தசரதனைச் சிவபரஞ்சுடர் சொர்க்கத்திலிருந்து வரவழைத்துக் காட்டினுரென்று பெறப்பட்டவாய்மையால், அவனுக்கு அந்த ஸ்வர்க்கத்தைக் கொடுத்தவரும் அசசிவ

பரஞ்சுடரேயென்று இனிது சித்திக்கின்றது. இராமன் தனதுபிதாவைத் தானே வரவழைத்துப் பார்த்தானென வாவது, இராமனுக்கு தசரதனை விஷ்ணுமூர்த்தி வர வழைத்துக் காட்டினரெனவாவது பெறப்பட்டதுண்டா யின், நமதன்பர் இராம பரத்வஞ் சாதிககவெணகலத் தமுக்கேந்தி வெளிவந்திருபபர் கண்டீர். கோவிந்தாசாரி யோ திண்டிராமோபநிஷதது - தெண்டராமோபநிஷத்து முதலியன முடைந்து ஒசாடுத்துத் தமது தோழரைக் கூத்தாடச்செய்வர். இனியு மிவரிவ்வாறு· கலங்கிக் கல கஞ்செய்யாது அடங்கிசசுகிபபதே இவருககுப் பெரு மையாம்.

இவரித்தோடேயமையாமல் கமபன் பாடலகள் சில காடடித தனது இராமவைபவத்தைச சாதிக்கவெழுநதார். அதனையு மொருவாறு சீர்தூக்கி யொதுக்கி எமதுவாய் மையை நிறுத்துவாம்.

கம்பன யுததகாணடததில் வான்மீகா பிரஸ்தாபித்த படி இராமனைப் பிரமனுஙியரனுஙிப பலவாறு துதித்த பெருமையை யெடுத்துப புகன்றனன், வான்மீகா பிரகா சப்படுத்தியதற்கதிக மொனறு மிவன கூறவிலலை. வான் மீகத்துக்கு யாம கூறிய கதியே ாணடு மமைவுடைத்து. சிவனுர் இராமனுககுத் தாம ஸேவகரெனக கூறியதாக வொனறும பிரஸ்தாபமிலலை, பிரமன கூறிய துதியில், "எனககும-பிறாககும்-எண்வகை யொருவாக்கும" நீ கடவுள் எனறு இராமனைப் பிரஸ்தாபித்த பகுதியில் "எண்வகை யொருவா" என்பது அஷ்டமூர்த்தியா கிய சிவனைககுறிததலால, சிவ பாரமயங கெடுகிறதெ ன்று பூர்வபட்சியார் சந்தோஷிததார். "எண்வகையொ ருவர்" என்பதற்கு எணமரா யெண்ணப்படட வொரு வகுபபினர் என்பதே பொருளாம், அஷ்டவசுககளெ ன்பது அதன் வெளிப்படை. இப்படிக்கன்றி எட்டு மூர்த்தியாயிருக்கின்ற சிவனெனறு பொருள்கொண்

டால, அவ்வாறு பொருளுரைப்பாரைத் தெரியாதா ருட் பெரியரென்று தெரிந்துரைப்பர் மேலோர். எங்ஙனமெனின், அஷ்டமூர்த்தி சிவனென்று "అష్టమూర్తి శ్శివో" என்று அமரஸிம்ஹம் கூறும். "நில நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன, புலனாயமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான" என்று ஸ்ரீவாசகத்திருமுறை அத னுண்மையை விளக்கியது. பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் சூரியன் சந்திரன் ஆன்மா என்பவைகளிற் கலந்து அவைகளை இயக்குகிற பரமாத்மா அஷ்டமூர்த்தியென்று இதனானே விளங்குகின்றது. இதனை விரிக்கில், பாசம் பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம்-சூரியன்-சந்திரனும், பசு ஆன்மாவுமாம். பாசபசுக்களை யியக்கும் பசுபதிக்குமே லொருவஸ்துவுமில்லை, பாசங்களையும், பசுக்களையு மியக்கும்பொருள் அப்பாசபசுக்களைக் கடந்ததொன்றாம். இது பாசமுமன்று பசுவுமன்று. இவ்வாறு வெளிப்படத்தக்க பசுபதிப் பெயரிய தனிமுதற்கடவுள் "తస్మాద్రుద్రః పశూనా మధిపతిః" என்றசுருதியால் வெளியாகியதுணாக. இவ்வுருத்திர மூர்த்தியாவார் "మహాదేవః పశూనామధిపతిః" என்று தேவர்களைப் பார்த்துஞ் சொல்லியருளினர். இந்தச் சுருதியேயன்றி "స్వతస్సిద్ధం పతిత్వం మే యుష్మాకం పశుతాపి చ" என்று உபப்பிரஹ்மணங் கூறியதில், தேவர்களே நான் பசுபதி-நீங்கள் பசுக்கள் என்று ஸ்ரீசிவபெருமான் கூறியதாக வெளிப்பட்டது. அன்றியும், சுருதி "సర్వే దేవాః పశుతామవాపుః తస్మాత్పశుపతిస్సం [illegible]" என்னும் வசனத்தால் விஷ்ணுவாதி தேவப்பசுக்களையும் அவர்களையாளும் பசுபதியையும் கூறியது. அன்றியும் "[illegible] పశుపతిః [illegible]" என்று சிவபரஞ்சுடரைக் கூறியது. இன்னுமிவ்வுண்மையை "[illegible]" என்று ருக்வேதம் விளக்கியது. இவ்வுண்மையால் அஷ்டமூர்த்திக்குச் சிறப்புடைய பேத

ங்களை யியக்குந்தன்மையேயன்றி மற்றொன்றினும் முனியங் குந்தன்மை கிடையாது. இத்தகைய பரசிவமூர்த்திக்கு இராமனை அல்லது விஷ்ணுவைத தலைமைப் பொருளாக மதித்துக் கமபன் பாடினனென்று பாட்டுக்காட்டித் திட்டு ப்பட்ட அன்பரது புத்திவிசாலத்தை யிகழுகின்றனர் பெரி யோரென்க. இவ்வஷ்டமூர்த்தி ஸந்நிதியில அவரியககவிய க்கும் பசுக்களிறபெறபபட்டவாகள இராமர் கிருஷ்ணர் விஷ்ணு முதலியோரென்க. சுருதி "[illegible]" என்றுகூறி, விஷ்ணுவைப் பிரமனுதியரோ டு பசுவென்று பிரதிஷ்டித்துவிட்டது. இநத விஷ்ணு வாகிய பசுவினவதாரம இராமன. இவ்விராமனது ஜீவ தர்மத்தை இராமாயணமுழுதுங்கண்டாம். இந்தப்பசுரா மனை (ஜீவஜந்துவை) பசுபதியாகிய ஸ்ரீபரமேசுவரருக்குத் தலைவனென்று நயந்தன்பரொழிநது, அவர்மெச்சியகம்ப ன்சொன்னுலும, அவரது ஆழ்வார்கள் சொன்னுலும், வேறுயாவர்சொன்னுலும மதிபபிழந்துமாளுவது சித்தமெ ன்றறிக விரிககிற் பெருகும். நிற்க.

இவர் "இராமாயண மாஹாத்மியம்-இராமாயண ஸாரஸங்கிரஹம்" என்னுஞ் சிலவற்றின் பேரைப் பிரஸ் தாபித்து இராமாயணம ஸர்வோத்தமமானது எனவும், இராமன் பிறந்த நாளிது-இராமன் கலியாணம் பண்ணிக் கொண்ட நாளிது-இராமன் காட்டுக்குபபோன நாளிது-இராமன் பெண்டைப் பறிகொடுத்த நாளிது-இராமன் குரங்குகள் காலைக்கட்டிக்கொண்டநாளிது-இராமன் இரா வணனை வதைத்த நாளிது-இராமன் பட்டாபிஷேகஞ் செய் துகொண்ட நாளிது என்று உதவியில்லாத சங்கதிகளை யெல்லாம் கிரப்பி, இவையெல்லாம் இராம வைபவமென் று சந்தோஷித்தார். அவ்விராமன் பல்விளக்க ஆரம்பித்த நாளிது-கைகாலலம்பத்தொடங்கிய நாளிது-தானே அன் னிச் சாதஞ்சாப்பிடத்தொடங்கிய நாளிது-சீதையுடன் சரஸஸல்லாபமாயிருந்த நாளிது-அவளோடு பிணங்கியிரு

ந்த நாளிது என்பனவாதி இராமவைபவங்களையும் ஏனோ தமது நூலில் நிரப்பாது இவரேமறந்துவிட்டனர்? இவ ரெழுதிய வமிசங்களில், தெய்வலட்சணம் யாது கண்டார்? ஏதோ குடிமுழுகிப் போவதாகவன்றோ நாள-நாழிகை-விநாடி-வாரம இவைகளையுங கண்டு கூறினர்? இவரது பேதமைக்கு வியசனப்படுகின்றனர் பெரியோரென்க.

இவரது பிரசங்கததில், ஸ்காநதம அகஸ்திய சங்கிதையில இராமாயணப பிரபாவம பார்வதியாருககுச் சிவனாற் சொல்லபபட்டதெனப பிரகாசப்படுத்தியிருபபதாக வாய்திறந்து வமபளந்தார். இவ்வஸங்காத்ம வாததததை மேலே யாம கூறியிருககும ஸமாதானங்களே வெட்டிச் சாய்க்கும. இதற்குப பிரததியேக வுத்தரம வேண்டியதில்லையாயினும், கொஞ்சம சொல்லுகிறோம். சாந்தோகயம் "ఇతిహాసపురాణంపంచమం" எனறு புகழ்ந்தது. உபநிஷத் பிரதிபாதிதமாகிய இதிஹாஸபுராணஙகளில், புராணஙகளை யாட்சேபிபபாரிலலை-இராமாயணந்தான் இதிஹாஸமென்னும் பட்சம கடைககால பலமினறித்தளாவெயதியிருககின்றது. இதிஹாஸம பாரதமென்பதே முகய ஸித்தாநதம். அதவா இராமாயணமும இதிஹாசமாகட்டும். இதனை ஸ்காந்தாதி புராணங்கள் புகழுமாறால, அவை இராமாயணத்துக்கு அநுக்ரகம் பண்ணியதாகவே நிச்சயிக்கபபடும. இவ்வுண்மையைச் சாந்தோககியம இதிஹாஸபுராணஙகளுக்கு அநுக்ரகிததபடியறிக. புராணங்க ளநுகரகியாதபோது இராமாயணம பிரபலஸ்திதிக்கு வராதென்க.

இமமட்டோ, இராமாயணம திரிமதஸ்தர்களாலும் பாராயணம்பண்ணப்படுவருகிறதெனவும, வடநாட்டார் எப்போதும் "ராம ராம்" என்று ஸ்மரிக்கின்றனரெனவும் ஒரு விசேடங்கண்டு கூறினர். திரிமதஸ்தரென்றிவர் கொண்டாடிய வதிகாரிகள் பாஷ்யபேதங்களாற் பிரிந்தவர்கள். இன்னோர் ஜாதியொற்றுமையுடையவர்கள். இவர்

கள் திரிமதஸ்தரென்று பிரஸ்தாபிக்குங்கால், சூத்திரர்களை யொதுக்கியே விவகரிப்பர். அவர்களொதுக்கிய ஜாதியிலடங்கிய நமது பூர்வபட்சியார "திரிமதஸ்தா" என்று பூஷித்தது தம்மையுந் தமதுஜாதிப்பெரியாரையு மிகழ்சுகற்றுக்கொண்டபடியாம். திரிமதஸ்தர் என்று பார்ப்பார் தம்முள் வழங்கிக்கொளவதேயன்றி, இதறகொரு ஆதரவும் கிடையாது. அநாதரவுபெறவொருதுககு மிந்த ஸாமான்யவாசகத்ஸதயும், இவவாசகத்துககு வாசயர்களா யெழுந்த பேர் கொண்டபாரபபாரையும் இவா பிரஸ்தாபித்து, இவாகளாற் பாராயணம பணணபபடடது இராமாயணம என்று பூஷித்துகசொணடது ஒருகெளரவத்தையும் வகித்திலதென்க. அனறேர் (திரிமதத்துப்பார்பபார்) இராமாயணபடனஞ் செயவது வாஸ்தவநதான். வான்மீகராமாயணம் இருபத்து நாலாயிரங் கிரநதஙகளா லமைந்தது. காயத்திரிமந்திரம் இருபத்துநான கெழுத்துககளா லமைநதது. இவ்விருபத்துநான்கெழுத்துக்களில ஒவ்வொரு எழுத்து முறையே அநத நூலி லொவ்வொரு ஆயிரங் கிரநதத்தின் முதலில் வைககபபட்டு இராமாயணம் காயததிரி ஸமபுடமாக வமைந்ததெனறு அவாகளாற கொள்ளப்படும். இதனுல் இராமாயண பாராயணமபண்ணுவது காயததிரியை அநுஸந்திப்பதாக அவர்களது நிச்சயம. காயத்திரி நோக்கத்தால இராமாயணத்துககு ஆதிக்கங் கொடுத்திருக்குமவாது ஒன்று தயமறியாமல நமதன்பா வீணெடுப்பெடுத்து உள்ளம் வெதும்பியது மிகுபரிதாபமென்க. இனி யிவர் "ராம் ராம்" எனனும ஸ்மரணையை யொரு விஷயமாக வரைந்ததும இவரது பேதமையை வெளிபபடுத்தியது. வடநாட்டாரைப்போலத் தென்னுட்டார் ஏன் அந்தஸ்மரணையி லிறங்காராயினர் ? தென்னுட்டார் "[illegible] [illegible] । దర్శనాద్భ్రపరసి । స్మరణాద[illegible]" என்று ஸ்மரிக்கும அரியமந்திரங்களைக் கவனித்திடுக. இவ்வாறு சந்தர்ப்பநோக்கவழிப் பிரபலமந்திரங்கள் பலவுளமாய்ப்

படிக்கப்பட்டு வருதலும் அநுபவதஷ்டமாம். புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்தில "காசி ராமேசுவரம்" என்று ஆதிக்கு நலம் யாவருமறிவார்கள். இவ்விரண்டும் பூஜ்யமாயினதுபோல விவற்றினெல்லையிற்பட்ட பிற வெல்லாக்ஷேத்திரங்களும் பூஜ்யமேயாம். தர்சனோபநிஷத்தா லிவ்வுண்மை விளங்கும். பரதகண்டத்தி னிரண்டுகோடிகளாயமைந்த காசி ராமேசுவரம என்பவற்றுள், காசியிலெழுந்தருளியிருப்பவர் விசுவநாதா. இராமேசுவரத்திலெழுந்தருளி யிருப்பவா இராமநாதா. இவ்விருநாதருள் விசுவநாதர் அசித்துப பிரபஞ்சகர்த்தரும், இராமநாதர் சித்துப்பிரபஞ்ச காத்தருமாவர். விசுவம ஜடம. இராமன் சேதனன். ஜடசித்துக்களை யியக்கும் பரமசேதனபதியாயிடும ஸ்ரீபரமேசுவரரது இயககப் பாட்டினையுணர்த்தும் லாக்ஷிகளாக விசுவமும இராமனு மமைந்து, தம்பெயர்களால் விசுவநாதர் இராமநாதர் என்று நிலைபெறுவித்திருக்குங்காட்சியை இனியேனும நமதன்பர் யூகித்து மகிழ்வாராக. இவ்வருமை யுணர்ந்தால, இனி "ராம் ராம்" என்புறைதத்தூக்கிக்கொண்டு வெளிவந்து பரிபவமுறுர். நமது நாட்டில் இந்துபாலிசருள் கேவல ஜனங்கள் அல்லாப் பண்டிகையில் "ஆவசேன் பாவஸேன்" என்று தெருத் தெருவாய்த் திரிந்து கத்திவருமநுபவத்தை யிவா கண்டால் "ராம் ராம்" என்பதன் பிராபல்லியத்தைக்கூறி எமக்குப் பூச்சிகாட்டவரமாட்டார். இவருக்கு யாமொன்றுசொல்லுகிறோம். Bible என்னும நூல் பலபாஷைகளில் இவ்வுலகமுழுதும் பிரபலமாய்ப் பரவிக்கிடக்கின்றது. இந்தப பலபாஷை Bible களுக்கும் ஆதிபாஷையிலுள்ள Bible கடவுளொன்றைக் கூறுவதற்கு "லிவ்" என்று பிரஸ்தாபிக்கின்றது. இந்த "லிவ்" என்னுஞ்சொல் "சிவ" என்பதன் திரிபென்று மதுரையில் சிலகாலத்திற்கு முன்னர் ஸ்ரீயுராயிருந்த ஸ்காட் (Scott) துரையவர்கள் சொல்லிவருவார். இதனல், சிவசப்தவாச்யமாயுள்ள வஸ்துவே உலக

முழுதும் வந்திக்கப்பட்டு ஜகஜ்ஜந்மாதி காரணநிஷ்டான ஸத்துப்பொருளாய் நிலைபெற்றிருக்கின்ற தெனல் பசுமரத்தாணியறைந்தாற்போல காட்டப்பட்டது. Ash wednesday (சாமபறநிருவிழாநாள்) கிறிஸ்தவர்கள் கொண்டாடுவது. அல்லாப்பண்டிகையில மகம்மதியர் பூசுவதும சாமபலணியே. இவ்வாறு பலபடியா னிருபிககத்தகக நீறறுப்பெருவாழவை இவரது ஆழ்வார்களுங்கொண்டிருநதமைக்கு "நீறுசெவ்வேயிடுவார்" என்றும், "வெளிய நீறு சிறிதேயிடும்" எனறும போந்தவசனங்கள சரியாக நிலைககும. இவறறை நன்கு தெளிந்து நமதன்ப ரிமமட்டிலே லனு மடஙகிவாழ்வாராக. இனி யிவ ரிந்த வாக்கியங்களுககு அசைவாரத்தங் கற்பிக்க முக்கிமுரணுவர். அவ்வாறு செய்வதன் முன்னர் தமது ஸாதுமார்க்கத்தை (நாமககாரமததை) ஆழ்வார்கள் பிரபந்தத்திற்காட்டி, அவ்வாழவார்களுக்கும, இராமனுஜயர்ககும பட்டை நாமத்தைப் பரக்கத்தீட்டி இன்புறுவாராக, "கரியமேனியில் வெளியநீறு" என்று ஆழ்வார் திருநீற்றினை விஷ்ணுவுக்கொபபித் துதித்ததன்றியும், உபநிஷத்து "ధ్వస్తోర్ధ్వశిత సర్వాంగం" என்று இராமனை அலங்கரித்து மகிழ்ந்தது. இதனையே "భస్మచ్ఛన్నో భస్మశాయీ" என்று பதுமமெழுந்து பரிஷ்கரித்துவிட்டது. இவைகளைக்கவனியாது பூர்வபட்சிகள் கூறும் நாமத்துக்கு நிகணடுவில் என்ன பெயர்? ஆன்றோராட்சிகளில யாது பெயா. கீர்வாணம் தமிழ் முதலியபாஷைகளில் நிகண்டுகள் பிறந்தகாலையிலும் ஆழ்வார்கள் வாழ்ந்தநாளிலும் நாமம் பிறக்கவிலலையாகையால் இதன் பிரஸ்தாபம் அந்த நூல்களில் வரக்காரணமில்லாமற் போயிற்று. நாமம் என்பது பெயர், வஸ்துவல்ல. பஸ்மமாகிய வஸ்துவை வேதம் முதலியகலைகள் சைவாசாரியர்கள் ஏனையான்றோர் நிகண்டுக்காரர் இவரது ஆழ்வார்கள் பிரகாசப்படுத்தியதுபோல வைஷ்ணவபுண்டரத்துக்கு யாதேனும் வழியுண்டாவென்று விசாரிக்கிறோம். உண்டெ

ன்று சாதிக்கும் வல்லப முண்டேல் முன்னுக்கு வந்து சுகப்படுவாராக. நிற்க.

இவர் இராமோத்தரதாபநியில் இராமனை நோக்கி ஆயிரம் மந்வந்தரம் சிவன் தவங்கிடந்தானென்றும், அப்போது வெளிப்பட்ட இராமனை வந்தித்துச் சிவன் அநேக வரங்கள் கேட்டுப் பெற்றுக்கொண்டானென்றும் பெறப் பட்டிருப்பதாகப் பிரசங்கித்து ஸந்தோஷித்தார். இராமன் பிறந்து செத்துக் கடந்த காலமு இன்னுமொரு மந்வந்தரமாகவில்லை. இங்ஙனமாகவும், ஆயிரம மந்வந்தரத்துக்கு அவகாசமுண்டான விதமெப்படி? இவன் வேறு இராமனு யிருக்கலாமபோலும். ஏனிவ்விப்படிப் பொய்க்கதைகளைமுடைந்து விடுத்து உலகத்தைக் கெடுக்கவேண்டும்? இராமன் மனுஷ்யன். சிவன் தெய்வம். மனுஷ்யனு தெய்வத்துக்கு வரங்கொடுப்பவன்? மனுஷ்யனிலும இராமன் க்ஷத்திரியன். இவன்காலில இவன் காலத்திலிருந்த எந்தப் பிராமணனாவது வீழந்திருப்பானு? பார்ப்பார் கால்களிலெல்லாம் இராமன் வீழ்ந்து வேண்டியவரங்களைப் பெற்று வாழ்ந்தான். சிவபரஞ்சுடரோ தேவாசுருக்குள் பிராஹ்மணர். "త్వం దేవేషు బ్రాహ్మణోఽస్యహం మనుష్యేషు బ్రాహ్మణః" என்று வேதம் சிவனைரது பிராஹ்மணத்வத்தை ஸ்தாபித்ததறிக. மனுஷ்யப் பிராஹமணரே இராமனை வநதியார்களானல், தேவப்பிராஹ்மணராகிய சிவபெருமான் ஒரு க்ஷத்திரியப் பசுவை நோக்கித்தவங்கிடநதாரென்ற வாதம் எங்ஙனேதலைதூக்குமு? இந்த ராமோததரதாபநியைப்பற்றிய வொரு விசேடங்கூறுகிறேம. இதில் எல்லாம பொய்யல்ல, மெய்யில்லாமலும போகவில்லை. அநேகவாபாசங்களிடையிடையே சேர்க்கப்பட்டிருக்கின்றன. காசியில் தக்ஷிணமூர்த்தி ஸந்யாஸியென்பவ ரொருவரிருந்தார். இவர் சிவத்வேஷி. இராமனிடத்தில் அபிமானி, கொஞ்சம்பணக்காரர். இவர் எப்போதுஞ் சிவநிந்தைசெய்துதிரிவர். சிவபக்தியுள்ளவர்போலும் நடிப்

யர். இவர் யா மிப்போது பிரஸ்தாபித்த பொய்கல ந்த இராமோத்தரதாபநியை அச்சிட்டுக் காசிமுழுதும் பரப்பினர். அப்படிபரப்பியவர் தனியே வெளியிடாமல் காசிகாண்டத்துடன்சேர்த்துத் தமதுகரவடத்தைக் கடை சியாக்கி நான்முகத்தைப்பார்ப்பவர்க்குக் காசிகாண்டம் என்று தோன்றும்படிச்செய்து பிரவர்த்தித்தனர். எவ்வாறு யினும் தனது அஸத்துநூல் ஜீவிககட்டுமென்பது அவர்கரு த்து. இவ்வாறு செய்தொழுகினோர் அதிலொருபுத்தகம் அடி காசியின்கண்ணே அதிபிரபல சிவபக்தசிரோமணியா யெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் ஸுர்யநாராயணஸ்வாமிகளுக்கு அனுப்பினர். அவர்காசிகாண்டமென்று வாங்கிக் கண்களி லொற்றிக்கொண்டு அதைத் தமது புத்தகசாலையில் வை த்துமகிழ்ந்தனர். சிலதினங்கழித்துச் சிவத்வேஷியாகிய தக்ஷிணாமூர்த்தி ஸந்யாஸி தான் சுவாமிகளுக்குப புத்தகம னுப்பியதாகவும், அவர் அதைவாங்கிப்பார்த்து, அது இரா மோத்தரதாபநியாயிருந்தமையால பூஜ்யமாய் அங்கீகரித் ததாகவும் சிலமுக்கிய சிவபக்தர்களிடத்தில சொலலிதுங் கவிட்டனர். அதைச் சகிக்காத சாமபவர்கள் சுவாமிகளி டஞ்சென்று விஷயத்தையறிவித்தார்கள். அவரொன்று மறியாதவராகையால அப்புத்தகத்தை வரவழைத்து அப்போதுதான் சோதித்தனர். சிவமணங்கந்திக்கு நூலின் கடையில சிவத்வேஷநாற்றம் வீசக்கண்டு உள்ளமவெதும் பி அபுத்திபூர்வகமாகத் தம்பாலேறிய சிவாபராதத்துக்காக வருந்தி இதற்கு யாது பிராயச்சித்தஞ் செய்வதென்று யோ சித்து, அங்குவந்தவர்களைக் கையமர்த்தி யிருக்கச்செய்து, தாம் தமது திருமடத்திலுள்ளே யாதோகாரியார்த்தமாகச் செல்லுவதுபோற்காட்டி உள்ளேசென்று, அத்திருமடத் தின் பின்புறத்திலோடுங் கங்கையிலிறங்கித் தமதுதிருவுருக் கரந்திடச் செய்தனர். இவர் சங்கரமதஸ்தராயினும், சிவ பக்தி வெள்ளமாயிருப்பவர். திரிலோகமு மிவர் சந்நிதியில் வாயதிறக்கமுடியாது. இவர் போய்விட்டது சிவத்வே

ஷஸங்யாஸிக்கு அதிக ஸந்தோஷம். அந்த ஸந்தோஷம் கெடுமாறு ஸ்ரீ சிவானந்தஸ்வாமிகள் என்னும் மஹானைத் திருவருள் இப்போது அங்குக்கூட்டிவைத்திருக்கின்றது. இவரைப்பார்த்தபிறகு சிவதவேஷிக்கு முன்னிலைடைஞ்சலினும் அதிக இடைஞ்சலாய்விட்டது. எல்லாஞ் சிவச்செயல். இந்ததிவ்வியசரித்திரத்தை நமதன்பர் கவனிப்பாராக. நிற்க.

முக்திகோபநிஷத்தில் இராமன் அநுமானுக்கு ஞானோபதேசஞ்செய்து, அதில்பிராஹ்மணன தனது பரிபூரண ரூபத்தியானஞ் செய்தால ஸாமீபயமெய்துவனென்றும், குருபதேசப்படி தனது நாசரஹிதமான ரூபததை அவன்தியானித்தால பிரமரகீடநியாயப்படி ஸாயுஜ்யமடைவானென்றும சொல்லபபடடிருப்பதாக நமதனபர் பிரசங்கித்து இளைப்பாறினர். இதில இராமனுக்குப் பரத்வபஙகமே சித்தித்தது. எங்ஙனமெனின, இராமன பிராஹ்மணனுக்குத் தனது பரிபூரணரூபத்தியானஞ் சொன்னன். அநதரூபம் யாது? தாசரதிக்கோலமன்றெனின், தாசரதிக்காக இவரிது காறும் மாரடித்துக்கொணட பயனெனனவது? கோசலைமகனாகிய தன்னைப் பரிபூரணனல்லவென்றும், குருபதேசத்தால் அந்தப்பரிபூரணரூபததை நாசமற்றதாக வறியவேண்டுமென்றும், தனது பிராகிருதரூபம நாசமுள்ளதென்றும் இராமன்கூறினமையால், நமதன்பா குருபதேசமின்றித்தூலமாயுணர்ந்த தாசரதியின் வடிவம் தியாஜ்யமாகத்தக்கதென்க.

இராமனது அவதாராதிஷ்டானமாகிய விஷ்ணுவினதுவடிவத்தைப் பரிபூரணம் நாசரஹிதம் என்று கொண்டாரோவெனின், இராமன்கதியே அந்தவிஷ்ணுவினிடமுஞ் சிறந்தலானும், "வாஸுதேவ பரஃ ப்ரக்ருதிஃ" என்று கூறிய சுருதி விஷ்ணுவைப் பிரகிருதியென்று சாதித்தலானும், அவர் அபரிபூரணராயிருந்து செத்தகதைகள் கோடிகோடி

யாகலானும எதிரிகள் மனோரத மீடேறமாட்டாதெ ன்க. இனி யுண்மையாதெனின், இராமன் குரு. ஆஞ்சநேய ன் சிஷ்யன. சிஷ்யனைச சீரபபடுத்தவேண்டித் தன்னிடத் தில பிரமஹுபாவனை அலலது சிவபாவனையைக கலபித்து, ஸோஹமபாவனை மேற்கொணடொழுகினுன் இராமனென் றறிக. கணணன கீதையில கூறிய ஸோஹம பாவ னையை மேலிடத்தில யாம கூறியிருககின்றோம். அது வே ாணடும நிதரிசனமாகததககது. இவ்வுண்மையுண ர்ந்தால இராமன கூறியவெலலாம தனது ஆதமநாதனுகிய சிவபரஞ்சுடரின பிரபாவமேயென்று எளிதி னுணாந தின் புறலாம. நமதன்பா கொடுமையினைததலால யாம சோபி த்தாலும, அவருக்கு அதிபாமரஹஸ்யமான சைவதாமங் களையெலலா முணர்ததத திருவருளமமைததாணடலால, அவரைச்சிவபுணணியத்துககதிகாரியெனறும புகழ்நது இம மட்டிலிதை நிறுததுவாமென்க. அவாது இரணடுநாலும இருண்டநூலென்று யாவரு முணரககாட்டி, மருணட அவா துளளமாசகலத் தெருணட மனதோா திததிக்குந் தேனிதுவென்று கொணடாட யாம தீட்டிய இநத ஸத் கிரந்தம ஸாதுககள் க்ஷேமாாததம உலகி னீடுவாழ்க. சுபம்.

வாழ்தது.

நநதியருள பெறறவநு மானவாழ்க தாசரதி நாளும வாழ்க
புநதிமகிழ்ந திவாாலவண டோதரிநே யனமாயதத புராரிவாழ்க
சநதத்முந கௌரிகணை பதிவாழ்க முருகனிரு சரணம்வாழ்க
வந்தெமையாண டருளல்வா பரமகுரு மூர்ததிகளும வாழ்கமாதோ.

ஸ்ரீஹரதததயோகிகள திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

ஆஞ்சநேயராமாநுபவக்காட்சி.

சிவரகசியம்.

வானரங்கள்பூசைச்சருக்கம்.

“கனவின்முனஞ்சைவர்சொன்னதினந்தான்வந்துகலநதெனக் கவிக்குலங்கள்களித்தெழுநதே, வினைதவிர்க்குமுதியகங்கையாகுங் கோதாவிரிப்புனனதியின்மூழ்கிவனவிபூதி, தனையுடலெஙகணுமுத் தூளனங்கள்செயதுதழைத்தவில்வமுதலானபொருளுங்கைக்கொண், டெனையளிக்கும்பரமசிவனாலயத்திலிறைவனைப்பூசிககவேயெயதிற் றன்றே.

இனையவருமுனனமேயாலயததினிடைப்புகுநது புலத்தியனு மிருடியென்போன், றனையொவவாவிலிங்கநாயகனறன்பூசைதான் புரியக்கதவங்கடாழ்ச்செறித்தே,முனைவனவனுள்ளிருந்தர்ச்சனைதான் செயவான்மூன்றுயாமததளவும்பார்த்திருநத, புனைதுளவோனருள் வலியாறகதவம்பேர்த்துப்பொறகோவிலுட்கவிகளபுகுந்தவன்றே.

பூசைசெய்வானுட் புகுமந்திகளைக் கண்டு புலததியனுந்தவமு னிவன்கோபங்கொணடா, னேசியேயான்செயயுஞ்சிவபூசைக்கே யிடையூறுபுரியவந்தவென்றசாபம், பேசினன்கோபவங்கிதன்னால் வீயமபிறிதொருசாபமுமுனியைப்பேசிற்றுமா, னுசமுறுமெங்களா லுனக்குமையநாசமெனப்புகன்றிறந்தாலுமன்றே.

விமலனருச்சனைசெய்யுமுயறசியாலேமேவியவைவீநதினால் விமானமேறிக்,கமலனுறையுலகதனிற்புகுந்தசேனாறகண்டெதிகொ ண்டேகொடுபோய்த்தனதுபீடத், தமரவைததுப்பூசிததானதனைக் கண்ணுறறவன்சபையிலிருநதோர்வினவுகின்று, ருமதுசிங்காத னததில்வைத்துப்பூசைசெயயவுறற விவர்செய்தவமயாதுரையீரெ ன்பார்.

இனிமேலிங்கிவாபெறும்பேறதையுஞ்சொல்வீர் யாங்களுறுசங் தேகமெலவையுந்தீரந்தே, மனமேவுமகிழ்ச்சிபெறவென்றலோடுமலர் க்கிழவன்றுன்புகல்வ னமுனிவீர்தேவர், புனமேவுமவானரஙகளிவ

ர்தாமீசன்பூதசிவலிங்கப்பூசைபுரிவானெண்ணிக், கனமேவுமுயற்சியுற்றார்முடிந்ததில்லைக்கருதுபலனுனைப்பூசைசெயவேபெற்றார்.

அருந்தவத்தோர்சிவபூசைமுயற்சிதானேயமுதமெனப்பர்புலத்தியன்கோபத்தீயாலே, பொருந்துமிவர்வீந்தனர்சங்கரனைப்பூசை புரிந்திடச்செல்பலந்தன்னுலவனைக்கொல்ல, விருந்தனராற்சிவபூசைமுயறசிசெய்வோரிறந்திடினுங்கதிபெறனிச்சயமதாகும், இருந்துபுலத்தியன்பூசைநடுவிற்கோபஞ்சேர்தலாலரக்கர்குலஞ்சேர்வனன்றே.

உலகமெலாநவிவுறச்செய்யுதளவில்செல்வ முற்றவர்க்குமீறவருமூறுசெய்யாக், கலசமிடுமிராவணனுடைவருடனன்றன் கடவுளைப்பூசித்ததையுமுரத்தாலவினன்றோக், கல்புரிந்துதண்டிப்பனொருவரானுமடப்படான சிவனவரந்தந்தருளும்போதி, விலகுமணிதனைக்குரங்கினினங்கடம்மையெனனு மற்றுளவரங்கொண்டிருப்பனன்றே.

நந்திதருஞ்சாபமொன்றுவந்ததாலேநராவடிவாய்நாரணனும்வருவன்வினன்றோ, வெந்திறலசேர்குரங்கினினமாகவந்துமேதினியிற்பிறந்திராவணனைவெல்வார், நந்தமிலாவிறல்வாலிசுக்கிரீபனனுமானங்கதனுமெனவிவாகளுல்வா, வந்திடுவரிவரைநாரணனமுனகாத்தவனுமையாலவாசகுறுஞ்சகாயராவார்

எனப்பிரமனசொன்னவுரையவைகளுறறேரா யாவருங்கேட்டனர்வியந்தாரேதையாநீர், வனபுறநாரணனந்திசாபந்தனனைமருவினு னென்றுரைத்தீரவந்தவாறே, தனப்பெறுமங்கதனைவிரித்துரைப்பீரென்ன வோதுவான்முன்முகுர்தனுமையாளகேள்வன, றனைப்பணிந்தவரத்தினில்வைகுந்தலோகந தனக்கரசாம்பாக்கியத்துட்சார்ந்துறறானல்.

மற்றவன்றன்பிரதோடகாலந்தன்னின்மானிடரூபங்கொண்டு மாமாதோடும, பொற்றடநதோளவடனங்கணனெழுமுங்கப்புல்லிப் புணர்ந்துறறனசிவபூசைபுரியகில்லா, ஓற்றதனைநந்தீசனகணங்கள் கண்டேயுயர்கயிலைவரைச்சென்றூரவர்கட்கெல்லாங், கொற்றவனுமவன்றனையேபரமன்கோயிறகோபுரவாயிலிற்கணடார்குழைந்துதாழ்ந்தார்.

வணங்குகணங்களைநந்திதேவனுேக்கிமற்றுநீரெவவுலகிற்போயவந்துற்றீ, ரிணங்குறுமெவவுலகங்கடம்மிற்றேவர் யாவரவரவர் பூசையேற்றூரென்னக், குணங்கொளற்புதாக்கன்றன் வணங்கி நி

ன்றுகூறுவானடியனையெவ்வுலகுஞ்சென்று, கணங்கொளுந்தேவர்கள்புரியுஞ்சரிதமெல்லாங்கண்டுவரப்பணித்தனையாற்கடவுணீயே. ()

அந்தந்தவுலகுதோறுஞ்சென்றுபார்த்தேனச்சுதனையன்றிமற்றைத்தேவரெல்லாந், தந்தமுறைதவறிலாபரமன்பூசைதனிற்பிரியராயிருந்தார்வைகுந்தத்தே, வந்தனனப்போதுபிரதோடகாலம்வந்ததுகோவிந்தனெந்தைபூசையாற்றான, முந்துமானிடவடிவாயவிந்தையோடுமோகமுற்றுற்கந்தழுவக்கண்டேனயானே.

அவனைநீயாவனடாவென்றுகேட்டேனயபுயப்பெண்ணைத்தழுவனீங்கலில்லா, னெவனமாதுடன்கூடியிலச்சையின்றியெனைநீயாவனடாவென்றுகேட்டான், கவனமுறுமிவன்றாதனென்றுகேட்டேன்கருத்திலவன்றனைத்தள்ளவல்லேனமமான், சிவனருளசேருனதாணைகுறித்துமீண்டேனறேவரிலீதொருபுதுமையவனபாறகண்டேன்.

எனையேயிவவாறுபுரியுமனனோகினிமேல வந்திடுங்கதிதானேதோவீத, தனையேயெனக்கறியவியம்பாயென்றுசாற்றுமற்புதாக்கனைப்பார்த்துரைப்பானந்தி, யன்னவனும்பூலோகந்தனின்மிக்க வயோத்திநகர்த்தசரதனென்றோதுமாண்மை, யன்னவன்றன்மைந்தனுமிராமனாகிவந்துபிறந்திடக்கடவனாகுமன்றே.

ஆங்கவன்றன்மனைவிதனையரக்கர்வேந்தனடவிபுகுந்தேசொடுபோந்திடவன்று, னேங்கிடேயலைவனவனபின்னுமிந்தவிருநிலத்திற்பிறந்திடுவனஜநநந்தோறுஞ், சாங்கலிங்கபூசைசெய்கக்கடவனென்றுசாற்றுநந்திவார்த்தையைப்புத்ராக்கேனுந், மோங்குக்கணநாதரெல்லாங்கேட்டிறும்பூதுற்றனரென்றயனசபையோர்க்குரைத்தானன்றே.

இதன் கருத்துவருமாறு.

கோதாவரிக்கரையி லோர் சிவசந்நிதியில மஹா சிவ ராத்திரிப் புண்ணிய தினமொன்றில புலஸ்தியர் சென்று, சந்நிதியின திருக்கதவை யடைத்துக்கொண்டு உள்ளிருந்து சிவபூசை செய்திருந்தார். இவர்போலவே பூசைசெய்யு மார்வத்துடன் நான்கு வானரவீரர்கள் அங்குவந்து திருக் கதவந் திறக்கப்படாமைகண்டு வருந்தி மூன்றுசாமம் காத் திருந்தனர். அப்போது விஷ்ணுவும அங்கு வந்தனர். அவ

கைபபார்த்தவுடனே வானரங்கள தங்கள துக்கத்தை அவா பாறசொலலிககொணடன. உடனே விஷ்ணுவானவா திருவருளைச் சிநதித்துக கையாறகததவை யறைநது திறந்துவிட்டனா. உடனே குரங்குகள மகிழச்சியோடு உளளே சென்றன. இவைகளைப பார்த்தவுடன என்பூஜைக இடர்விளைத்த நீவிா இப்போதே சாகக்கடவீாகளெனறு முனிந்து சாபமிட்டனா புலஸ்தியா. நியாயமினறி யெஙகளைச சபித்த நீரும. இபபோதே இறக்ககடவீரென்று வானரஙகள் பிரதிசாபமிட்டன. அவ்வாறே யிறந்த முனிவர் சிவபூசைக்கிடையின் முனிவுகொண்டா ராகையால், இராவணனெனனும அரக்கனுய்பபிறந்தாா. அன்றியும் விஷ்ணுவானவா வானரஙகளைப பாா்தது உங்கள் சாபத்தாலிறகருமிவன் அரக்கனுய்ப பிறக்கபபோகிறுன். இவனைக்கொலலும்படி நான் மானிடனுயப பிறநது வருவேன. எனக்கு நீங்கள் நாலவரும் வாலி - சுக்ரீவன் - அநுமான - அஙகதன் என்னும வீரர்களாய்த் தோன்றி உபகரிக்கக்கடவீர்களென்று கேட்டுக்கொண்டனா. அதறகிசைந்து வானரஙகளுன்கும உயிர்பிரிந்து தெய்வ விமானமேறிப பிரமலோகமெய்தின நிறக.

நந்தியெமபெருமான ஒரு பிரதோஷ காலத்தில சிவகணங்களை யேவி நீவிா அணடங்கடோறுஞ் சென்று ஆங்காங்கதிகாரஞ் செலுத்துந் தலைவாகள் இனறு சிவபூசை செய்கின்றனரா? பார்தது வரக்கடவீரென்று பணித்தருளினர். அவ்வாறே பாாததுவருங் கணங்களிலொருவர் விஷ்ணுலோகஞ் சென்றபோது விஷ்ணுவும், இலக்குமியும மானிடவுருவெடுதது காமவேட்கை, மீறிக் கலந்தினபுற்றிருந்தனர். இவ்வஸஙகதத்தைக் கண்டு பொறுது ஓடிச்சென்று நந்திதேவர் பாதத்தில வணஙகி எங்குஞ் சிவபூஜை நடந்திருப்பதையும, விஷ்ணுவினது சிவாபராதக் கொடுமையையும் விண்ணபபிததனர். அதனைக் கேடட நநதி பகவானுள்ளம் வருந்தி, அந்த விஷ்ணுவானவன் இராமனென்னும்

மானிடனாகவும், இலக்குமியானவள் சீதையென்னும் மானிடஸ்திரீயாகவும் பூமியிற் பிறந்து இருவரும் மணந்து, பின்னர் ஒருவரையொருவர் காட்டிற் பிரிந்துழன்று வருந்தக்கடவர்கள். அப்போது இராவணனென்னும் அரக்கன் சீதையையபகரித்துக்கொண்டு இராமனறியாது பல வருஷங்கள் சிறைப்படுத்தி வருத்தக்கடவன். இவ்வாறு நினைவாடி விஷயசுகத்தை யிழந்து வெதும்புறக்கடவர் என்று சபித்துப் பின்னுஞ் சிவாநுக்ரகத்தால் இராவணனைக்கொன்று சீதையை மீட்டுத் திரும்புகையில் சிவபூசை செய்து இன்புற்று வாழக்கடவன். இன்னுஞ் ஜந்மங்கடோறுஞ் சிவபூசையாற் சிறந்து வாழக்கடவன் என்றருள் புரிந்தனர். இந்த ஸத்தியத்தைப் பிரமதேவர் பிரமலோகவாசிகளுக்குக்கூறி மகிழ்ந்தனர் இதன் விரிவை ௯ அத்யாயமுழுதும் பார்த்து இன்புறலாம்.

இவ்வுண்மை பெற்பட்ட சிவரகசியம் லக்ஷக்கிரந்த முடையது. இதற்குப் பரமேதிகாசமென்று பெயர். இதிகாசங்களில், பாரதராமாயணங்களடங்கு மேனும், பாரதமே சிறந்த இதிகாசமாம். அதனிலுஞ் சிறந்து "பரமேதிகாசம்" என்று பிரசித்தி பெற்ற விந்நூலின் உயர்வும், அருமையும் ஸாமானிய ரறியார்கள். இந்த நூலிலடங்கிய ஆஞ்சநேய ராமானுபவக் காட்சியை நமதன்பர் இலக்குமணப் பிள்ளையின் பொருட்டு வெளிப்படுத்த மாறு திருவருள் பிரஸாதித்தது சைவசமயிகள் செய்தவத்தின் பயனேயாமென் றறியத்தக்கது சுபம்.

ஆஞ்சநேயராமாநுபவக்காட்சி முற்றியது.

திருச்சிற்றம்பலம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.